விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 27 திங்கட்கிழமை (11.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 205

# நிஷா பிஸ்வால் நாளை
# இலங்கைக்கு விஜயம்



## அடுத்தடுத்து படையெடுக்கும் முக்கிய பிரமுகர்கள்

(கொழும்பு) உலகில் சக்திவாய்ந்த பிரமுகர்கள் அண்மைக்காலமாக இலங்கைக்கு அடுத்தடுத்து பயணம் மேற்கொண்டு வரும் நிலையில் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் மூன்று நாள் அதிகார-பூர்வ பயணத்தை மேற்கொண்டு நாளை செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் இலஞ்சம் கோரியதாக முறைப்பாடு

(கொழும்பு)

நாட்டில் காணாமற் போனோரின் உறவினர்களான பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரப்பட்டுள்ளதாக பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பைச் சேர்ந்த செறீன் ஷரூர் என்ற பெண் தெரிவித்துள்ளார்.

காணாமற் போனோர் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்காக இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள பணியகம் தொடர்பில் பொது அமைப்புக்களிடம் கருத்துக்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இது தொடர்பில் இடம்பெற்ற அமர்வு ஒன்றில் காணாமற்போன தமது உறவுகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளின் போது, தங்களிடம் இலஞ்சப் பணம் கோரப்பட்டதாகவும், பணம் இல்லாத நிலையில் பாலியல் இலஞ்சம் கோரப்பட்டதாகவும் காணாமற் போனோரின் உறவினர்களான பெண்கள் தம்மிடம் கூறியதாக செறீன் ஷரூர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் படைத்தரப்பின் புலனாய்வு 23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ் கலாசார மண்டப நிர்மாண பணி விரைவில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான கலாசார மண்டபம் அமைக்கும் வேலைத்திட்டம் 2 மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ் இந்திய துணைத்தூது 23ஆம் பக்கம் பார்க்க....



## இணுவில் ஞானலிங்கேஸ்வரருக்கு நேற்று செந்தமிழில் குடமுழுக்கு



(இணுவில்)

சைவ மகா சபை மற்றும் சிவ ஞான சித்தர்பீடம் என்பவற்றின் ஆதரவுடன் சைவநெறிக்கூடம் இணுவில் தெற்கில் புதிதாக அமைத்த ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை செந்தமிழில் திருக் குட 24ஆம் பக்கம் பார்க்க....

### தான் சிறை வைக்கப்பட்டிருந்த

## மட்டு.சிறைச்சாலைக்கு ஜனாதிபதி நேற்று விஜயம்

(கொழும்பு)

1971ஆம் ஆண்டு ஓர் அரசியல் கைதியாக தான் சிறையிடப்பட்டிருந்த மட்டக்களப்பு சிறைச்சாலையின் சிறைக்கூடத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பிற்பகல் பார்வையிட்டார். பாடசாலை மாணவராக இருந்த 23ஆம் பக்கம் பார்க்க....

## மத்திய வங்கிக்கு நாணய நிதி சபை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பொறுப்புகளையும் பணிகளையும் இலகுவாக்கும் நோக்கில் நாணய நிதி சபை ஒன்றை நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நியமிக்கப்படவுள்ள நாணய நிதி சபைக்கு 23ஆம் பக்கம் பார்க்க....

## "ஓமந்தை இல்லையெனின் தாண்டிக்குளம்" வடக்கு முதலமைச்சரிடம் மாவை தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதில் தடைகள் இல்லையெனில் அங்கேயே அமைக்கலாம்.

தடைகள் இருந் தால் தாண்டிக் குளத்திற்கு 23ஆம் பக்கம் பார்க்க....



க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
பௌதிகவியல் I,II

உள்ளே...

## போராட்டத்திற்கு வடபகுதி மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்க மாட்டார்கள்

### யாழ்.கடற்றொழில் சம்மேளனம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கடற்தொழிலாளர் இணையத்தினால் வடமாகாண சபை முன்றலில் நாளை 12ஆம் திகதி முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு வட பகுதி மீனவர்கள் ஒத்துழைப்பு வழங்க மாட்டார்கள் என யாழ் மாவட்ட கடற் தொழில் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளதுடன் இந்திய மீனவர் பிரச்சினைக்கு வடக்கு மாகாண சபையை ஏன் முற்றுகையிடவேண்டும் எனவும் கேள்வியெழுப்பியுள்ளனர். யாழ் மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சம்மேளனத்தின் தலைவர் வே.தவச்செல்வம் உள்ளிட்ட கடற்றொழிலாளர்கள் மேற்படி அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக 23ஆம் பக்கம் பார்க்க....

## மங்களவுக்கு எதிராக மீண்டும் பிரேரணை!



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கை 24ஆம் பக்கம் பார்க்க....

# பருத்தித்துறை நகரில் நேற்று பெருமளவு பொலிஸார் குவிப்பு



(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பெருமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

கடந்த 8-ம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஓராம் கட்டைச் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார். அவரின் இறுதிச்சடங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இறுதிச் சடங்கில் கலந்து கொள்பவர்கள் யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதி வழியாக வந்து பருத்தித்துறையில் உள்ள இ.போ.ச சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பொலிஸ் புலனாய்வுத்துறைக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதன் பிரகாரம் பருத்தித்துறை நகர் ஓராம் கட்டைச் சந்தியில் இருந்து பருத்தித்துறை நகர் வரையில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இ.போ.ச சாலைக்குள்ளும் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். ஆனால் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை.

இ.போ.ச சபை பஸ் வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதி ஏற்பட்ட விபத்திலேயே குறித்த இளைஞன் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-60)

# அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரக கட்டிடம் குத்தகைக்கு விடப்படுகிறது

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகம் இயங்கிய கட்டடத்தை குத்தகைக்கு விட வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு பொருளாதார ரீதியாக பலன் தரும் வகையில் இந்த கட்டடத்தை பிரயோசனப்படுத்துவது பொருத்தமானது என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கட்டடத்தை குத்தகை அல்லது வாடகைக்கு வழங்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் தலைமையில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர அமைச்சரவைக்கு முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முன்னதாக மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்த கட்டடத்தை கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# சிறந்த பாடசாலை வேலைத்திட்டம்

(கொழும்பு)

**அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை** என்னும் வேலைத்திட்டம் இதுவரை 7ஆயிரம் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக அடையாளம் காணப்பட்டுள்ள பாடசாலைகளை சிறந்த பாடசாலையாக மீண்டும் வடிவமைத்தல், நகர் புறங்களில் உள்ள பாடசாலைகளின் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும், அனைவருக்கும் சமகல்வி பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த செயல் திட்டத்திற்காக 6ஆயிரத்து400 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும், ஒவ்வொரு மாகாணங்களுக்கும் 50 மில்லியனில் இருந்து 400 மில்லியன் ரூபாய் வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த திட்டத்தில் உள்வாங்கப்படும் பாடசாலைகளில் நீர், மின்சாரம், சுகாதார வசதிகள் வழங்கப்படவுள்ளதோடு, பாடசாலை உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள், மனிதவள மேம்பாடுகள் என்பன பூர்த்தி செய்யப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (செ)

# கூட்டு எதிரணியின் 10 எம்.பிக்களை கைது செய்ய அரசாங்கம் முயற்சி!

(கொழும்பு)

மக்கள் போராட்டம் (ஜன சட்டன) பாதயாத்திரைக்கு முன்னர் கூட்டு எதிர்க்கட்சியின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்க அரசாங்கம் தயாராகி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கம தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த பாதயாத்திரை போராட்டத்திற்கு பயந்து அரசாங்கம் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்க தயாராகி வருகிறது.

மேலும் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கவும் தயாராகி வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

கம்பஹா உடுகம்பளையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்கவின் இல்லத்தில் பாதயாத்திரை தொடர்பான ஆரம்ப பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகள், நாடாளுமன்ற மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

எங்களை கட்சியில் இருந்து நீக்கினாலும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை கைவிடமாட்டோம். பேய்க்கு பயந்தால், மயானத்தில் வீடு கட்ட முடியாது.

இலட்சக்கணக்கான மக்களை வீதியில் இறக்கி அவர்களை கொழும்பு அழைத்து வந்து இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பு மக்கள் போராட்டத்திற்கு நாங்கள் தலைமைத்துவத்தை வழங்குவோம் எனவும் மகிந்தானந்த அளுத்கம குறிப்பிட்டுள்ளார்.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் இந்தியாவின் தேவைகளை அரசாங்கம் செயற்படுத்தி வருகிறது.

இதற்கு எதிராக செயற்படும் அனைவரையும் அரசாங்கம் அடக்க தயாராகி வருகிறது.

ரணில் மற்றும் மைத்திரி அரசாங்கத்திற்காக இரண்டு பொலிஸ் துறைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒன்று நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றையது ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ரணில் விக்ரமசிங்க நெறிப்படுத்துகிறார். அடுத்ததை மைத்திரி பால நெறிப்படுத்துகிறார்.

நாங்களை அனைவரும் இந்த இரண்டு பொலிஸ் துறைகளும் சென்று வந்துள்ளோம். அரசாங்கத்துடன் இருந்தால் எந்த பிரச்சினையுமில்லை.

நாங்கள் மக்களுடன் இருப்பதன் காரணமாவே எங்களை இப்படி அடக்கி வருகின்றனர் எனவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ)

# கொள்ளை குழுவினரே பொது எதிரணியினர்

(கொழும்பு)

கடந்த 11 வருட காலங்களாக மக்களின் பணத்தை அதிகமாக கொள்ளையிட்டவர்களே தற்போது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் உள்ளதாக தெவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் மக்களின் பணத்தை கொள்ளையிட்டவர்களை விரைவில் கைது செய்யவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது..

தற்போது மகிந்த தரப்பினரால் அமைக்கப்பட்டுள்ள நிழல் அமைச்சரவையினரும், மகிந்த ராஜபக்ஷவும் இணைந்தே நாட்டை பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்குள் இட்டுச்சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்களுக்காக வழங்கப்படுகின்ற சலுகைகளை தாமதப்படுத்தும் செயற்பாடுகளிலும் மகிந்த அணியினர் ஈடுப்பட்டுவருவதாகவும் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (செ)

# திருட்டு பொருட்களுடன் இருவர் கைது



(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் திருட்டில் ஈடுபட்ட இருவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர். விடத்தற்பளை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற திருட்டு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இருவரை பொலிஸர் கைது செய்து விசாரித்து வந்தனர்.

இதன்போது குறித்த இருவரும் தென்மராட்சி பகுதிகளில் நிகழ்ந்த தொடர் திருட்டுக்களில் தொடர்புபட்டிருந்தமை தெரியவந்தது.

இவர்களிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில் சங்கத்தானை, கச்சாய், கைதடி போன்ற பகுதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ரூபர் 5 இலட்சம் பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டன.

மேலும் கொள்ளையிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட வாள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுவரும் கொடிகாம் பொலிஸார் குறித்த இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் இன்று முற்படுத்த இருப்பதாக தெரிவித்தனர். (செ-89)

VACANCIES

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்
  G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம் ஏனையோர் ஊதியத்துடன் 4 மாத பயிற்சியின் பின் இணைத்துக் கொள்ளப்படுவர்)
- கணினிப்போதனாசிரியர் – NVQ Level - 4 or 5 தகமைக்கு முன்னுருமை வழங்கப்படும் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

DMI COMPUTER EDUCATION - No.113, Kannathiddy Road, Jaffna

### வெளிநாட்டு நீதிபதிகள் விவகாரத்தில் ஜனாதிபதியுடன் முரண்படும்

# வெளிவிவகார அமைச்சரை ஏன் பதவியிலிருந்து நீக்கவில்லை?

## கூட்டு எதிர்க்கட்சி கேள்வி

(கொழும்பு)

வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கைக்கு அழைப்பது தொடர்பில் ஜனாதிபதி கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கு மாறான நிலைப்பாட்டை கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சரை ஏன் பதவியில் இருந்து நீக்கவில்லை என கூட்டு எதிர்க்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் அவசியம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வர முடியுமா என்பது குறித்து ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## மட்டு.விமான நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்



290 மில்லியன் ரூபாய் செலவில் மட்டக்களப்பில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட இலங்கை விமானப் படையின் விமான ஓடு பாதையினையும் விமான நிலையத்தினையும் நேற்று நண்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோக பூர்வமாக திறந்து வைத்து உள்ளூர் விமான சேவையையும் ஆரம்பித்து வைத்தார். புதிதாக அமைக்கப்பட்ட விமான ஓடுபாதையில் எம்.ஏ.60 விமானத்தின் மூலம் வந்து இறங்கிய ஜனாதிபதிக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அகமட் மற்றும் இராஜாங்க அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், பிரதியமைச்சரகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்பளித்தனர். (இ-5)

## பிரதமரின் அமைச்சில் மகேந்திரனுக்கு பதவி



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு பொருளாதாரத்துறை அமைச்சில் பதவி ஒன்று வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே மகேந்திரனுக்கு முதலீட்டு சபையின் தலைவர் பதவி வழங்கப்படவிருந்தபோதும் அதனை அவர் நிராகரித்துள்ளார்.

இந்த நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ்வரும் பொருளாதாரத் துறை அமைச்சில் அவருக்கு பதவி ஒன்று வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

## நிழல் அமைச்சரவை தொடர்பில் கோத்தபாயவுக்கும் தெரியாது

(கொழும்பு)



கூட்டு எதிர்க்கட்சி நியமித்துள்ள நிழல் அமைச்சரவை பற்றி தனக்கு தெரியாது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்த விடயம் அரசியல் ரீதியான செயற்பாடு எனவும் தான் அதில் சம்பந்தப்படவில்லை என்பதால், எதுவும் தெரியவில்லை எனவும் கோத்தபாய தெரிவித்தார்.

காலியில் நேற்று முன்தினம் கூட்டு எதிர்க்கட்சி நியமித்துள்ள நிழல் அமைச்சரவை தொடர்பில் ஊடகவியலாளர் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த கோத்தபாய, அதனை ஊடகவியலாளர்கள் மூலம் அறிந்து கொள்வதாக தெரிவித்தார். (இ-5)

## வடக்கிற்கான பொருளாதார மையத்தினை ஓமந்தையில் அமைப்பதே நன்மை பயக்கும்

### யாழ்.பல்கலை, ஆசிரியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர் மத்தியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளில் ஒன்றாக பொருளாதார மத்திய நிலையம் அமைவது பற்றிய சர்ச்சை எழுந்துள்ளது. இதனைப் பற்றிய கருத்தாடலைத் தவிர்க்க விரும்பிய புலமைசார் சமூகத்திற்கு மேலும் மேலும் ஏற்பட்ட சமூகம் சார்பான வற்புறுத்தலினால் இத்தகைய அறிக்கையை வெளியிட்டு அதற்கான நியாயப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டிய நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கலைக்கழக ஆசிரியர் சங்கம் உள்ளது.

இதனால் வடக்கிற்கான பொருளாதார மையம்ஓமந்தையில் அமைவதே தமிழ் மக்கள் நீண்ட காலத்தில் அதன் நன்மையினைப் பெறுவதற்கு வழி சமைப்பதாக இருக்கும் எனக் கருதுகின்றோம். தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகத்தின் பங்களிப்பு காலாகாலமாக நிறைவேற்றப்பட்டு வந்துள்ளமையை நாம் இங்கு நினைவு கூறிக் கொள்கின்றோம்.

அண்மைக்காலமாக போரினால் பாதிப்படைந்த வட பகுதியில் பொருளாதார மத்திய நிலையம் அமைத்தல் தொடர்பில் பல வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருவதனையும் அதனுடன் தொடர்புடைய செய்திகள் கவலையளிப்பதாகவும் இருக்கின்றன.

பொருளாதார மத்திய நிலையம் எங்கு அமைய வேண்டும் என்பது அதன் மூலம் நன்மையைப் பெற்றுக்கொள்ள இருக்கும் மக்கள் தீர்மானிக்க வேண்டிய விடயமாகும். இது அரசியல் அழுத்தங்களுக்கு மத்தியில் தீர்மானிக்க வேண்டிய ஒரு விடயமாக மாற்றப்பட்டுள்ளமை வேதனைக்குரியது. பொருளாதார மத்திய நிலையம் எங்கு அமைய வேண்டும் என்பது வாக்கெடுப்பு ஒன்றினால் தீர்மானிக்கப்படவேண்டிய விடயமன்று. மாறாக இது அறிவு பூர்வமானதாக பல கருத்தியல் பரிமாற்றங்களூடாகத் தீர்மானிக்கப்படவேண்டியது என்பதனைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது.

இந்தவகையில் பொருளாதார மத்திய நிலையம் எதிர்கால விஸ்தரிப்புக்கள் மற்றும் பெறுமதி சேர்க்கக் கூடியவாறு பல கைத்தொழில்களை எதிர்காலத்தில் உருவாக்கும் வகையில் வட மாகாணத்தில் இருக்கக்கூடிய எல்லா மாவட்ட மக்களும் அதிலிருந்து நன்மை பெறக்கூடிய வகையில் வடக்கு நோக்கியதாக அமையப் பெறுவதே அறிவு பூர்வமானதாக இருக்கும். அதாவது தற்போதிருக்கும் வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் முல்லைத்தீவு மற்றும்வவுனியா மாவட்ட எல்லை விளிம்பில் ஓமந்தை அமைந்திருப்பது,அதில் பொருளாதார வலயத்தை அமைப்பது பொருத்தமானது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது.

இதுவே இப்பிரதேசம் அபிவிருத்தி பெறுவதற்கும் அதன் மூலமாகக் கிடைக்கும் நன்மைகளை வடபகுதி மக்கள் அனைவரும் பெறுறுக் கொள்வதற்கும் வழி அமைப்பதாக இருக்கும்.

தமிழ்மக்களது நலன் சார்ந்து முடிவு எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதுடன் தனி மனிதர்களது விருப்புக்களை விடுத்து அரசியல்வாதிகளின் அபிலாசைகளைக் கைவிட்டு மக்களின் நலன்சார்ந்து முடிவுகளை எட்டுமாறு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மீண்டும் வலியுறுத்துகிறது.

இதன் அடிப்படையில் ஓமந்தையில் அமையப் பெறுவதே எதிர்கால அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு அடிப்படையிலும் மற்றும் அபிவிருத்தி நோக்கியும் சரியானதாக அமையும்.

எனவே தமிழ்மக்களின் அரசியல் தலைமைகள் ஒரு தர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வினயமாக வலியுறுத்தி நிற்கின்றது. (இ)

## அமெரிக்கத் தூதரகத்திற்கு புதிய தூதரக கட்டடம்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் புதிய கட்டட நிர்மாணிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக 155மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி அமெரிக்காவின் அலபாமாவில் உள்ள காடேல் கொன்ஸ்ரன்ஸன் நிறுவனம் இந்த நிர்மாணிப்பை மேற்கொள்ளவிருக்கிறது.

இதற்காக கொழும்பு கொள்ளுப்பிட்டிய கரையோர பக்கம் உள்ள இடத்தில் 6 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்மாணிப்பில் புதிய அலுவலகம், அமெரிக்க கடற்படை வாசஸ்தலம் மற்றும் களஞ்சியத்தொகுதி என்பன அமைக்கப்படவுள்ளன.

இந்த நிர்மாணிப்புக்கள் நிறைவடைய 48 மாதங்கள் தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஓய்வுபெறும் எண்ணமில்லை; மீண்டும் வருவேன் -பெடரர்




விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் அடுத்த ஆண்டும் நிச்சயம் விளையாடுவேன். ஓய்வு பெறும் எண்ணமில்லை என்று சுவிஸ் நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் உறுதியளித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற வரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி சுற்றில் கனடாவின் ரயோனிச்சிடம் 3-6, 7-6 (7-3), 6-4, 5-7, 3-6 என 5 செட்களில் கடுமையாகப் போராடி தோற்றார் பெடரர். இதன் மூலம் 18வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்லும் வாய்ப்பை இழந்து ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

35 வயதாகும் பெடரர், 1999-ல் இருந்து தொடர்ச்சியாக 65 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் களமிறங்கி விளையாடி வருகிறார். அரையிறுதியில் தோற்றதும் தனது ஓய்வு முடிவை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் தோல்விக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பெடரர் 'விம்பிள்டன் போட்டிக் களத்தில் மீண்டும் விளையாடுவேன் என உறுதியாக நம்புகிறேன். அதை உங்களுக்கு தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த ஆண்டு மீண்டும் வருவேன்' என உறுதியளித்துள்ளார்.

# கால்பந்து ஜம்பவான் பீலே 75-வது வயதில் திருமணம்



பிரேசிலிய கால்பந்து ஜாம்பவான் பீலே, தனது 75 வயதில் மூன்றாவது திருமணம் செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளாக காதலித்து வரும் மார்சியா சிபிலே ஆஹோக்கியை திருமணம் செய்யவுள்ளதாக கூறப்படுகிறது.

இது குறித்து மூன்று முறை உலக கிண்ணம் வென்ற பீலே கூறியதாவது, கடந்த 2010-ம் ஆண்டு முதல் இருவரும் பழக தொடங்கினோம், 42 வயது தொழிலதிபரான ஆஹோக்கியிடம் என்றென்றும் நான் அன்பை காண்கிறேன் என கூறியுள்ளார்.

கடந்த 2012-ம் ஆண்டு முதல் ஜப்பானை சேர்ந்த ஆஹோக்கி, பீலேவுடன் பொது விழாக்களில் கலந்து கொள்ள தொடங்கினார்.

இருவரும் சில ஆண்டுகளுக்கு முன்னரே திருமணம் செய்ய முடிவு செய்தனர், ஆனால அப்போது பீலேவிற்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது என கூறப்படுகிறது.

வரலாற்றில் சிறந்த கால்பந்து வீரராக திகழும் பீலே, 1363 ஆட்டத்தில் விளையாடி ஆயிரத்து 281 கோல் போட்டுள்ளார். கடந்த 1957 முதல் 1971 வரை பிரேசில் அணிக்காக 91 முறை விளையாடியுள்ளார்.

களத்திற்கு வெளியே, அவர் முன்னதாகவே இரண்டு திருமணங்கள் செய்துள்ளார். முதல் மனைவிக்கு மூன்று குழந்தைகளும், இரண்டாவது மனைவிக்கு இரண்டு குழந்தைகளும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில், எதிர்வரும் செவ்வாய்கிழமை பீலே, மூன்றாவது முறையாக ஆஹோக்கியை திருமணம் செய்து கொள்ளவுள்ளதாக கூறப்படுகிறது.

# பாகிஸ்தான் வீரருக்கு இங்கிலாந்து வீரர் எச்சரிக்கை



இங்கிலாந்து வந்துள்ள பாகிஸ்தான் வீரர் முகமது அமீர், அந்நாட்டு ரசிகர்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்புகளை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் குக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 2010-ம் ஆண்டு இங்கிலாந்து சென்ற போது அந்நாட்டை சேர்ந்த சல்மான்பட், முகமது அமீர், முகமது ஆசிப் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் 5 ஆண்டு தடை விதிக்கப்பட்ட முகமது அமீர் பாகிஸ்தான் அணிக்கு மீண்டும் திரும்பி உள்ளார். தற்போது இங்கிலாந்து சென்றுள்ள அணியில் அவரும் இடம் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் முகமது அமீருக்கு ஆயுள் கால தடை விதித்து இருக்க வேண்டும் என்று இங்கிலாந்து முன்னாள் வீரர் கிரேமி சுவான தெரிவித்துள்ளார். ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் சிக்கிய அவரை மீண்டும் விளையாட அனுமதித்து இருக்க கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அமீர் மீண்டும் லார்ட்ஸ் மைதானத்தில் கால் வைப்பது எனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது என கூறியுள்ளார்.

# தேசிய கார் பந்தயம்; சென்னை வீரர் வெற்றி



ஜே.கே.டயர் தேசிய ரோடெக்ஸ் மாக்ஸ் கார்டிங் (சிறிய வகை கார்) பந்தயம் ஐதராபாத்தில் நடந்தது. இதன் 2-வது சுற்றில் சென்னை வீரர் ரிக்கி டானிசன் சீனியர் பிரிவில் வெற்றி பெற்றார்.

ஜே.கே.டயர் தேசிய ரோடெக்ஸ் மாக்ஸ் கார்டிங் (சிறிய வகை கார்) பந்தயம் ஐதராபாத்தில் நடந்தது. இதன் 2-வது சுற்றில் சென்னை வீரர் ரிக்கி டானிசன் சீனியர் பிரிவில் வெற்றி பெற்றார். ஏற்கெனவே பெங்களூரில் நடந்த முதல் சுற்றிலும் அவர் வெற்றி பெற்று இருந்தார்.

இரண்டு சுற்று முடிவில் ரிக்கி டானிசன் முதல் இடத்திலும், விஷ்ணு பிரசாத் 2-வது இடத்திலும், துருவ்மொகித் 3-வது இடத்திலும் உள்ளனர். அடுத்த சுற்று போட்டிகள்கோவை மற்றும் கோல்ஹாபூரிலும், இறுதி சுற்று ஐதராபாத்திலும் நடக்கிறது.

# ரியோ ஒலிம்பிக் வாய்ப்பை இழந்த இந்திய குத்துச் சண்டை வீரர்



வெனிசுலாவில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் இந்திய வீரர் நீரஜ் கோயத் ரியோ ஒலிம்பிக் வாய்ப்பை இழந்தார்.

ரியோ ஒலிம்பிக்கில் கலந்து கொள்வதற்கான ஒவ்வொரு போட்டிக்குமான தகுதிச் சுற்று பல்வேறு நாடுகளில் நடைபெற்றது. சில போட்டிகளுக்கு தற்போதும் தகுதிச்சுற்று நடைபெற்று வருகிறது.

சர்வதேச குத்துச் சண்டை சங்கம் சார்பில் ஒலிம்பிக் தகுதிச் சுற்றுக்கான தொடர் வெனிசுலாவில் உள்ள வர்காஸ் நகரில் நடைபெற்றது. இந்த தொடரில் முதல மூன்று இடங்களை பிடிக்கும் வீரர்கள் ரியோவிற்கு தகுதி பெறுவார்கள்.

அதாவது, முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் வீரர்கள் ஒலிம்பிக் போட்டியில் விளையாட தகுதி பெற்று விடுவார்கள். அதன்பின்னர் அரையிறுதியில் தோற்கும் வீரர்களுக்கு இடையில் போட்டி நடத்தப்படும். இதில் வெற்றிபெறும் வீரர் தகுதி பெறுவார்.

இந்த போட்டியில், இந்திய வீரர் நீரஜ் கோயத் 69 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொண்டார். இவர் அரையிறுதிக்கு முன்னேறினார். இதனால் இரண்டு வாய்ப்புகள் இருப்பதால் ரியோவிற்கு தகுதி பெற்றுவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், 2-ம் நிலை வீரரான ஜெர்மனியின் அராஜிக் மருட்ஜானை அரையிறுதியில் மோதினார். இதில் நீரஜ் 0-3 என தோல்வியடைந்தார். இதனால் அவருக்கு மேலும் ஒருவாய்ப்பு இருந்தது. அதில் ஸ்பெயின் நாட்டின் சிஸ்ஸோகோவை எதிர்கொண்டார். இதிலும் நீரஜ் தோல்வி அடைந்தார். இதனால் ரியோ ஒலிம்பிக் வாய்ப்பு பறிபோனது. அரையிறுதிக்கு தகுதி பெறும் வீரர்களுக்கு வெண்கலப் பதக்கம் கிடைக்கும் என்ற விதி உள்ளதால் நீரஜ் வெண்கல பதக்கத்துடன் ஆறுதல் பெற்றார்.

# ஜிம்மில் முரளி விஜய்



இந்திய அணியின் டெஸ்ட் போட்டியின் தொடக்க வீரரான முரளி விஜய் ஜிம்மில் உடற்பயிற்சி செய்யும் புகைப்பட்ம் வெளியாகியுள்ளது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதற்காக வீராட் ஹோலி தலைமையிலான அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் டெஸ்ட் போட்டிகளின் தொடக்க வீரரான முரளி விஜய் ஜிம்மில் உடற்பயிற்சி செய்து கொண்டிருப்பது போன்ற புகைப்படத்தை பிசிசிஐ வெளியிட்டுள்ளது.



சைவ மகா சபையின் ஆதரவுடன் சைவ நெறிக்கூடத்தினரால் இணுவிலில் அமைக்கப்பட்ட அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் ஆலயத்தின் தமிழ் திருக்குடமுழுக்கும் ஆன்மீக பாதயாத்திரையும் நேற்றைய தினம் இடம்பெற்ற போது...

# ‘சந்திரிகா கமிட்டி’ தொடர்பில் ஜனாதிபதியிடம் முறைப்பாடு



கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சி மறுசீரமைப்பு குறித்த யோசனைத் திட்ட

சந்திரிகா கமிட்டி தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் நோக்கில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் குழுவாக ஒன்றிணைந்து தீர்மானங்களை எடுக்கக் கூடாது என, ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஒரு தொகுதியினர் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதியிடம் விரைவில் இந்த தரப்பினர் நேரடியாக முறைப்பாடு செய்யவுள்ளனர்.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சி மறுசீரமைப்பு குறித்த யோசனைத் திட்டமொன்றை மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளனர்.

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு முன்னதாக இந்த விடயங்கள் குறித்து கட்சியின் முக்கியஸ்தர்கள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

கட்சி மறுசீரமைப்பு குறித்த முக்கிய யோசனைத் திட்டங்கள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## குடத்தனையுடன் பேருந்து சேவை மட்டுப்படுத்தப்பட்டதால் சிரமம்

பருத்தித்துறையிலிருந்து குடத்தனை பொற்பதி வரை இடம் பெற்றுவந்த பேருந்துச் சேவை தற்போது குடத்தனை வரை மட்டுப்ப டுத்தப்பட்டுள்ளது. வீதி திருத்த வேலைகள் கடந்த ஒருமாத காலமாக மிகவும் மந்த கதியில் நடைபெற்று வருவதால் இந்த பேருந்துச் சேவையை இலங்கை போக்குவரத்துச் சேவையின் பருத்தித்துறை சாலையால் நடத்த முடியவில்லை. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொற்பதி கிராமத் தில் வாழும் மக்கள் இரு வாரங்க ளுக்கு மேலாக இந்த பேருந்துச் சேவை நிறுத்தப்பட்டதனால் நட ந்து தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றனர். ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிலுக்குச் செல்வோர் போன்றவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே வீதித் திருத்தத்தை விரைவாக மேற்கொண்டு பருத்தித்துறையிலிருந்து குடத்தனை பொற்பதி வரை பேருந்துச் சேவையினை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (இ-19)


நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்.
(c-5073)



அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
◆செய்திகள்
◆புகைப்படங்கள்
◆நிகழ்வுகள்
◆பேசும் படங்கள்
போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல
076 636 3378
Viber


## இராசி பலன்

11.07.2016

(ஆனி 27, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சப்தமி முன்னிரவு 6.49 மணிவரை
அத்தம் பின்னிரவு 2.48 மணிவரை
சுபநேரம் 11.59-1.23 மணிவரை
இராகுகாலம் 7.29-8.59 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சதயம் | | புத சுக் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | சந் |

**மேடம்:** நல்லவர்களின் அறிவுரையும ஆதரவும் கிடைக்கும், தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**இடபம்:** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், குடும்பத்தினர்களை அனுசரித்து செல்வது நல்லது, பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் கிடைக்கலாம், தொழில் கூட்டாளிகளிடம் கவனம் தேவை.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், சகோதார ஒற்றுமை மேலோங்கும், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு:** தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியமான நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**மகரம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்:** உறவினர்களின் வருகையுண்டு, குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

# இராணுவம் விடுவித்த பகுதிகளிலுள்ள எஞ்சிய சொத்துக்களையாவது பொலிஸார் பாதுகாக்க வேண்டும்

## சிவில் பாதுகாப்பு கூட்டத்தில் வலியுறுத்து

(கொழும்பு)

**வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் காணிகளில் எஞ்சியுள்ள சொத்துக்களையாவது பாதுகாப்பதற்கு அப் பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம், கடந்த 8 ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பொது மக்களின் காணிகளில் எஞ்சியுள்ள பொதுமக்களின் வீடுகள், தளபாடங்கள் இடித்து அழிக்கப்பட்டு களவாடப் படுகின்றன. இதனை உடனடியாக தடுத்து நிறுத்த, மீள் குடியேற்ற பகுதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

"காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, குரும்பசிட்டி, கட்டுவன் ஆகிய இடங்கள் அண்மையில் மீள்குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் எஞ்சிய மக்களின் வீடுகள், அவர்களின் உடைமைகள் தற்போது அங்கு இல்லை. பிரதேசவாசிகள் சிலரால் குறித்த பொருட்கள் மற்றும் மரங்கள் அழிக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றிச்செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தி, மீள்குடியேறவுள்ள மக்கள் தமது எஞ்சிய சொத்துக்களையாவது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், "குறித்த விடயம் தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதற்கமைவாக மீள் குடியமர்வு பகுதியில் பொலிஸ் கண்காணிப்பகம் ஒன்று நிறுவப்பட்டு உட்செல்பவர்களின் தரவுகள் பதியப்படுகின்றன.

இருந்தும் 25 வருடங்களின் பின்னர் தமது சொந்த இடங்களை பார்வையிட வரும் மக்களை நாம் கட்டுப்படுத்துவது சரியாக அமையாது. அந்த வகையில் மக்களை பாதிக்காத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# யாழில் மத்திய விவசாய அமைச்சர் துமிந்த மாகாண விவசாய அமைச்சருடன் சந்திப்பு



வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் மத்திய விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுக்கும் இடையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. வடக்கு விவசாய அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின்போது மத்திய விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வடக்கின் விவசாயத்தேவைகள் குறித்து அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் கேட்டறிந்து கொண்டார்.

இச்சந்திப்பு பற்றி அமைச்சர் ஐங்கரநேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தின் விவசாய அபிவிருத்தியில் நாம் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்து மத்திய அமைச்சரிடம் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இதில் பிரதானமாக இலங்கை விவசாய சேவையில் எங்களுக்கு 22 ஆளணிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதும் 5 பேர் மாத்திரமே தற்போது சேவையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி தற்போது 17 பேரை நியமிப்பதற்கு ஆவன செய்யுமாறும் இதற்காக தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்குத் தனியான ஒரு பரீட்சையை நடத்துமாறும் கேட்டிருக்கின்றோம். இது தவிர விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் வெற்றிடம் நீண்டநாட்களாக நிரப்பப்படாமல் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

வட்டக்கச்சி விதை உற்பத்திப் பண்ணையில் பெரும் பகுதி இன்று படையினர் வசமே உள்ளது. இதனை விடுவித்துத் தருமாறும், இராணுவத்தின் வசமுள்ள கிளிநொச்சிசேவைக்காலப் பயிற்சி நிலையம் மற்றும் வெள்ளாங்குளப் பண்ணையையும் எம்மிடம் கையளிக்குமாறும் கோரியுள்ளோம்.

இலங்கையில் சின்ன வெங்காயம் இன்று வடக்கிலேயே அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், அறுவடைக் காலத்தில் இந்தியாவில் இருந்து அதிகளவு வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் எமது விவசாயிகளுக்கு சந்தையில் வெங்காயத்துக்கு உரியவிலை கிடைக்காமல்போகின்றது. இதனால், இறக்குமதி வெங்காயத்துக்கு அதிக வரிவிதிக்குமாறும் இதற்கு நிரந்தரத் தீர்வொன்றைக்காண வேண்டும் என்றும் கோரியுள்ளோம். மத்திய அமைச்சர் உரிய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பதாகக் கூறிச் சென்றிருக்கிறார் என ஐங்கரநேசன் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதிவிவசாயப் பணிப்பாளர்கள் அ.செல்வராசா, தெ.யோகேஸ்வரன், அஞ்சனாதேவி ஶ்ரீரங்கன், பொ.அற்புதச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

# ஏழு விவசாயப்பூங்காக்கள் இலங்கையில் நிறுவப்படும்

## விவசாய அமைச்சர் யாழில் தெரிவிப்பு

உலக வங்கியின் நிதி உதவியுடன் 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 7 விவசாயப்பூங்காக்கள் இலங்கையில் விரைவில் நிறுவப்பட இருப்பதாக மத்திய விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் மத்திய விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழிலுள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கில் அதன் அமைவிடம் தொடர்பாக வடக்கு மாகாண அமைச்சருடன் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# போக்குவரத்துக்கு இடையூறாக வாகனங்கள் நிறுத்தப்பட்டால் உடனடியாக சட்ட நடவடிக்கை

## யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டிய வீதிகளில்போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நிறுத்தப்படும் வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த சமூக பிரதிநிதிகள் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் உள்ள வீதிகளில் அரச திணைக்களங்களின் வாகனங்கள் மற்றும் முப்படையினரின் வாகனங்கள் பல போக்குவரத்திற்கு இடையூறுவிளைவிக்கும்வகையில் நிறுத்தி வைக்கப்படுகின்றன எனவும் தன்னிச்சையாக செயற்படுகிறார்கள் எனவும் இது தொடர்பாக பொலிஸார் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்ததுடன் அவர்களின் வாகனங்களின் தரக்கட்டுப்பாட்டினை பரிசோதனை செய்யவேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

இதற்குபதிலளித்தபொலிஸ் அத்தியட்சகர்,

பொலிஸாரின் வாகனங்களை திருத்தம் செய்வதற்கென காங்கேசன்துறையில் மாத்திரம் ஒரு சிறிய இடம் உள்ளது.

அங்கு சிறு சிறு திருத்தங்களை தான் செய்ய முடியும். பெரிய திருத்த வேலைகளுக்கு கொழும்புக்குத்தான் கொண்டு செல்லவேண்டிய நிலையில் உள்ளோம்.

இருப்பினும் இயலுமான அளவுவாகனங்களைசீசெய்து பயன்படுத்தி வருகிறோம்.

மேலும் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் உள்ள வாகனங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளோம்.

இனிவரும் காலங்களில் இவ்வாறான இடையூறுகளை விளைவிக்கும் வாகனங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் தெரிவித்தால் உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மணவாளக்கோல 108 சங்காபிஷேகம்

காரைநகர்-வியாவில் திருவருள் மிகு ஹரிஹரபுத்ர ஐயப்ப சுவாமி ஆலய மணவாளக் கோல 108 சங்காபிஷேகம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.மாலை 8 மணிக்கு வசந்த மண்டபபூசைகள் இடம்பெற்று சுவாமி வீதி வலம் வருதலும் விசேட மேளக் கச்சேரியும் இடம் பெறும். (இ-5)

# ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுவது தான் சரியான முடிவாகும்

## மாக்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்து

பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்திலா அல்லது ஓமந்தையிலா அமைக்கப்பட வேண்டும் என்னும் சர்ச்சைக்குரிய விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் என்போரது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பால் விவசாயிகள், பொது மக்கள், மக்கள் நலன் சார்ந்த வெகுஜன அமைப்புக்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட துறைசார் நிபுணர்களின் கருத்துக்களே முக்கியமானவையாகும். அந்த வகையில் ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுவதே சரியான முடிவாக இருக்க முடியும். அதனையே எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியும் வற்புறுத்திக் கூறுகிறது.

இவ்வாறு பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளமா?ஓமந்தையா? என்ற இழுபறிப் பிரச்சினை பற்றி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும்அவ் அறிக்கை யில்,

வடக்கிற்கான பொருளாதார மத்திய நிலையம் அமையக் கூடிய பொருத்தமான இடம் மாங்குளமேயாகும். ஆனால் மத்திய அரசு வவுனியாவை குறித்து நிற்பதாலும் அதற்குரிய இருநூறு மில்லியன் நிதி திரும்பிச் செல்லாது பார்த்துக் கொள்வதற்கும் உடனடிப் பொருத்தமான இடமாக இருப்பது ஓமந்தையே ஆகும். பெரும்பாலான விவசாய அமைப்புகளும் மக்கள் நலன் சார்ந்த வெகுஜன அமைப்புகளும் ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமைவதையே விரும்புகின்றன. அத்துடன் துறைசார் நிபுணர்களும் ஓமந்தையைச் சுட்டிக் காட்டியுள்ளனர். இவர்களது கருத்துக்களை வடமாகாண முதலமைச்சரும் உள் வாங்கியே ஓமந்தையை முன்மொழிந்து செயலாற்றுகிறார். அமையப் போகும் பொருளாதார மத்திய நிலையமானது வட பிராந்திய மாவட்டங்களுக்கும் குறிப்பாக வன்னி மாவட்டங்களின் விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் பயன்கள் தருவதாக அமைய வேண்டும். அதனை விடுத்து பணம் பண்ணும் சில சுயநலவாதிகளினதும் அவர்களுக்குப் பின்னால் இருந்து வரும் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களினதும் விருப்பு வெறுப்பு அடிப்படையில் பொருளாதார மத்திய நிலையம் அமைந்து விடக் கூடாது. அத்துடன் தமிழர் தரப்புக் கட்சிகளின் குறுகிய நோக்கங்களுக்காக இவ் விடயம் இழுபறிக்கு உள்ளாகுமானால் நாசுக்காகப் பேரினவாதத்தை முன்னெடுத்து வருவோர் தமது வசதியான மாவட்டத்திற்கு இம் மத்திய நிலையத்தைக்கொண்டு செல்லும் அபாயம் ஏற்பட்டு விடும். எனவே ஒரு சிலரது சுயநலத்திற்கும் பலவகை இலாபங்களுக்கு மாகப் பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்தில் அமைக்கப் படாது விவசாயிகள் பொது மக்களின் நன்மைக்கும் அவர்களது விவசாய விருத்திக்கும் ஓமந்தை யில் அமைவதையே எமது கட்சி வற்புறுத்துகின்றது என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ராவணா பலய ஒருங்கிணைப்பாளரை அழைக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு

ராவணா பலய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரருக்கு எதிராக பாரிய ஊழல் மோசடிகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மகிந்த அரசாங்கத்தில் வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சராக பதவி வகித்த விமல் வீரவன்ச, இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரரை தனது பணிக்குழு உறுப்பினர் எனக் காட்டி அமைச்சின் வாகனம் ஒன்றை வழங்கியிருந்தமை தொடர்பாக இந்த விசாரணை நடத்தப்படவுள்ளது.

சத்தாதிஸ்ஸ தேரரை நாளை மறுதினம் 13 ஆம் திகதி ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு ஆணைக் குழு அறிவித்துள்ளது.

விமல் வீரவன்சவின் உத்தரவின் பேரில் சத்தாதிஸ்ஸ தேரருக்கு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வாகனம் ஒன்று வழங்கப் பட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ராஜகிரிய பிரதேசத்தில் வாடகைக்கு வாகனங்களை வழங்கும் பெண்ணொருவர் அரச பொறியியல் கூட்டுத் தாபனத்திற்கு இந்த வாகனத்தை வாடகைக்கு வழங்கியிருந்தார்.

அரச நிறுவனங்களுக்காக வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் வாகனங்களை வெளியாருக்கு வழங்க முடியாது.

இதனால், கூட்டுத்தாபனத்துடன் எந்த தொடர்பும் இல்லாத சத்தாதிஸ்ஸ தேரரின் பயன்பாட்டு வாகனத்தை வழங்க முடியாது என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (இ-5)

## தொழில் அமைச்சர் மற்றும் ஆணையாளர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல்



தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூபா 2500 சம்பள உயர்வை வழங்க வலியுறுத்தி தொழில் அமைச்சர் மற்றும் ஆணையாளர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அத்துடன் இந்த அரசு கம்பனிக்காரர்களுக்கு துணை போகிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார். (இ-5)


## பகிரங்க ஏல விற்பனை

கீழ்க்காணும் பாவனைக்குதவாத தளபாடங்கள் எதிர்வரும் 2016.07. 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். அலுவலக நேரத்தில் (காலை 9.00 மணி முதல் 2.00 மணி வரை) பொருட்களை பார்வையிடலாம்.

பொருட்களை ஏலத்தில் பெறுபவர் பணத்தை கட்டி உடனடியாக அவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| இரும்பு கட்டில் | 04 | இரும்பு தள்ளுவண்டில் | 02 |
| இரும்பு கதிரை | 12 | பலகை மேசை (மாணவர்) | 14 |
| இரும்பு மேசை | 10 | ஆசிரியர் மேசை | 06 |
| இரும்பு அலுமாரி | 04 | தகர பீலி | 02 |
| கைக்கதிரை | 09 | மாணவர் செய்முறை மேசை | 01 |

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

(C-5147)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:25<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:A/L/<br>அரசதொழில்<br>தொ.இ: B/6055 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 50<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5682 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma/<br>அரசதொழில்<br>தொ.இ: B/6059 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 23செவ் 8 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/5685 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 8சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:BSc/<br>பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/6060 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 43செவ் 12 இல்<br>உயரம்: 165CM<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/5686 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 18செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/<br>சொந்ததொழில்<br>தொ.இ: B/6061 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 13செவ் 2 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5694 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )

# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மீது அரசின் அடக்குமுறைகள் இன்றும் தொடர்கின்றன

## சிவமோகன் எம்.பி. காட்டம்



புனர்வாழ்வு பெற்ற முன்னாள் வன்னிப் போராளிகள் மீதான அரசின் அடக்குமுறைகள் இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. புலனாய்வாளர்கள் என்ற போர்வையில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் அவர்களை மன உளைச்சலுக்கு தள்ளியுள்ளது எனப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வன்னியில் புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் மீதான அரசின் அடக்குமுறைகள் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. புலனாய்வாளர்கள் என்ற போர்வையில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் அவர்களை மன உளைச்சலில் தள்ளியுள்ளது. அவர்கள் மீண்டும் அமைதி வாழ்வை நோக்கி வந்தவர்கள். அவர்களை நிம்மதியாக வாழவிடுங்கள்.

புனர்வாழ்வு பெற்ற ஒவ்வொரு போராளிகளுக்கும் வீடுகள் வழங்க புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும், அவர்களுக்கான வாழ்வாதாரம் வழங்கப்பட வேண்டும்.மேலும் அரச நிவாரண உதவி வழங்கும் படிவங்களில் அவர்களுக்கு எதுவும் வழங்கமுடியாத வகையில் படிவங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

ஒரு உதவியை பெற்றுக்கொள்ள கிராம சேவையாளரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும். அதுவும் அவர்கள் அரசிற்கு எதிராக போராடவில்லை என்று சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும். இது விடயத்தில் பல கிராம சேவையாளர்கள் ஒப்பமிட மறுக்கிறார்கள்.

நான் கேட்கிறேன் தமிழர்களை போராட தூண்டியவர்கள் யார்? நீங்கள்தானே தொடங்கினீர்கள், உங்கள் அடக்குமுறையினால் சிங்களத்தில் மட்டும்தான் சட்டத்தை கொண்டுவந்தீர்கள், அதன் மூலம் இன நல்லிணக்கத்தை சீர்குலைத்தீர்கள்.

தந்தை செல்வாவும் அவர் ஆதரவாளர்களும் செய்த அகிம்சைப்போராட்டத்தை அடக்கி ஒடுக்கினீர்கள். 1974 ஆம் ஆண்டு தமிழராட்சி மகாநாட்டில் தமிழர்களை யாழ்ப்பாணத்தில் காட்டுத்தர்பார் நடத்தி உருக்குலைக்க அரச படையினரை வைத்துக் கொண்டு முயன்றீர்கள்.

நாடு சுதந்திரம் பெற்றபின் 242 தடவைகள் தமிழர்கள் கூட்டுக் கூட்டாக பெரும்பான்மை இனத்தவர்களாலும் இனப்படுகொலை செய்யப்பட்டனர். எனவே இனநல்லிணக்கம் பற்றி பேசும் நாங்கள் நீதியை நிலைநிறுத்தி மக்களை சுமுகமாக வாழ வழி ஏற்படுத்தப்பட வேண்டும்.

புனர்வாழ்வு பெற்ற போராளிகளை தொடர்ந்தும் இடர்களை ஏற்படுத்தாதீர்கள். அவர்களை நிம்மதியாக வாழ விடுங்கள்.

மேலும் தொடர்ந்து பேசிய அவர்,

இன்று சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காமல் வைத்திருக்கின்றீர்கள். புனர்வாழ்வு பெற விரும்புபவர்கள் விடுவிக்கப்பட முடியும் என அரசு கூறிய போது 90 பேர் புனர்வாழ்வு பெற சம்மதத்தை தெரிவித்தனர்.ஆனால் இன்று வரை அவர்களுக்கு பிணையில் செல்லவும் அனுமதிக்கவில்லை. புனர்வாழ்வு பெறவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அநேகமானவர்கள் குற்றம் நிரூபிக்கப்படாதவர்கள். சித்திரவதைமூலம் வாக்குமூலம் பெறப்பட்டவர்கள். இன்று உங்களது பயங்கரவாதசட்டம் மூலம் அவர்களை சீரழித்து வருகின்றீர்கள். எனவே நீதி நிலை நாட்டப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (2)

# தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம்

தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம் எனும் தொனிப் பொருளில் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் சவால்கள் எனும் நோக்கிற்கு அமைவாக தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் , வட கிழக்கு ஆயர்கள் , மதகுருமார்கள் ,பேராசிரியர்கள், உட்பட பலரையும் ஒன்றிணைத்து வடக்கில் முதல் தடவையாக கருத்தாய்வு நிகழ்வொன்று இடம் பெறவுள்ளது.

இதில் மருத்துவர்கள் , சட்டத்தரணிகள், பத்திரிகை ஆசிரியர்கள், பத்தி எழுத்தாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் , சமூக ஆர்வலர்கள் எனும் சிந்தனைக் குழாமினர் ஆகியோரை ஒருங்கிணைத்து தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம் எனும் மகுடத்தில் கருத்தாய்வு நிலை கருத்துப் பகிர்வுறவாடல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் ஞானோதயம் மண்டபத்தில் இக் கருத்தாய்வு நடைபெறவுள்ளது என பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் பயனுள்ள கருத்துக்களை பகிர்ந்து கொள்ள அனைத்து தரப்பினையும் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (செ-4)




# பரவிப்பாஞ்சான் மக்களின் காணிகள் கிடைக்கும் வரை முயற்சி செய்வோம்

## சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மக்களது காணிகள் மக்களிடம் கையளிக்கப்படும் வரை நாம் ஓயப்போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பரவிப்பாஞ்சான் மக்களிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மக்கள் தமது காணிகளில் முகாம் அமைத்திருக்கும் இராணுவத்தினர் அப்பகுதியிலிருந்து வெளியேறி தமது காணிகளைத் தம்மிடம் வழங்கி தம்மை அங்கு வாழ்வதற்கு நல்லாட்சிக்கான மைத்திரி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி பரவிப்பர்ஞ்சான் வீதியின் முன்றலில் நேற்று தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம்மக்களது போராட்டம் காணிகள் கையளிக்கப்படும் வரை இரவு பகலாகத் தொடரவுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்களால் கூறப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் பரவிப்பாஞ்சான் பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வரும் பகுதிக்குச் சென்று மக்களைச் சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் மக்கள் தமது நிலையை எடுத்துக் கூறினார்கள்.

மக்களது கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்ட அவர்,

பரவிப்பாஞ்சான் பகுதி மக்களது காணிகள் மக்களிடமே கையளிக்கப்படவேண்டும் என்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் கடந்த 2010 இல் இருந்து தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றோம்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் பரவிப்பாஞ்சான் பகுதியின் சில காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் பல மக்களது காணிகள் இன்னமும் மக்களிடம் கையளிக்கப்படாத நிலையில் அங்கு இராணுவம் நிலை கொண்டுள்ளது. இந்த நிலை மாற வேணடும். இதற்காக நாம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

நாம் பரவிப்பாஞ்சான் மக்களது காணிகள் மக்களுக்குக் கிடைப்பதற்கான சகல முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளோம். அதற்காக நாம் உங்களது காணிகள் நாளை கிடைக்கும் நாளை மறுநாள் கிடைக்கும் என்று பொய் சொல்லி உங்களை ஏமாற்றி விட்டுப் போக மாட்டோம்.

உங்களது போராட்டம் நியாயமானது. நீங்கள் இந்தக் குழந்தைகளுடன் இவ்விடத்தில் தனியே நின்று போராட்டம் நடத்த உங்களைத் தனியே விட்டு விடமாட்டோம். உங்களால் தெரிவு செய்யப்பட்ட உங்கள் பிரதிநிதிகளாகிய நாம் உங்களுக்காகச் செயற்படுவோம்.

பரவிப்பாஞ்சான் மக்களது காணி விடுவிப்புக்கான போராட்டத்திற்கு ஆதரவாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அ.வேழமாலிகிதன், கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் எஸ்.சுரேன் உட்பட்டவர்கள் பலர் கலந்து கொண்டனர். (2)

# சட்டம் மிக விரைவாக தன் கடமையை செய்யும்

## வடக்கு மாகாண சபை போக்குவரத்து அமைச்சர் உறுதி





(பரந்தன்)

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 18 ஆவது பொதுக்கூட்டம்.புதிய நிர்வாக சபைத் தெரிவு ஆகியன நேற்று முன்தினம் நடைபெற்றன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வடக்குமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், தர்மபால, புதிதாக வடக்கு மாகாண சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட செந்தில்நாதன் மயூரன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சியின் வடக்கு இணைப்பாளர், வவுனியா நகரப்பகுதி கிராம சேவகர், இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை பிரதிநிதிகள், வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சம்மேளனத்தின் தலைவர், வவுனியா ஆட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர் மற்றும் பேருந்து உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் பா.டெனிஸ்வரன்,

மிக விரைவாக சட்டம் தன் கடமையை செய்யும் என்றும் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் நடவடிக்கையில் உரிமையாளர்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும். அவர்களின் அசமந்த போக்கினாலேயே கூடுதலான விபத்துக்களும் பயணிகளுக்கு அசௌகரியங்களும் ஏற்படுவதாகவும், போட்டித்தன்மை யில் ஒரு வழித்தடத்தில் ஒரே நேரத்தில் பேருந்துகளை இயக்குவதால் யாருக்கும் எந்த நன்மையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் அமுலாக்கப்படவிருக்கின்ற நியத்திச்சட்டத்தில் ஓட்டைகள் இல்லையெனவும் இருந்தும் ஏதேனும் ஓட்டையூடாக எவரேனும் உள்நுழைந்தால் அவர் அதிலிருந்து வெளியில் வர முடியாது எனவும் தெரிவித்தார்.

மேலும் தனது வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பாளராக செயலாற்றிய புதிதாக வடக்குமாகாண சபை உறுப்பினராக பொறுப்பேற்றுள்ள செந்தில்நாதன் மயூரனுக்கு நன்றியை தெரிவித்ததோடு வவுனியா மாவட்டத்தில் போக்குவரத்து சம்பந்தமான பொறுப்புக்களை வழங்குவதற்கு ஏற்பாடுகளை செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் வவுனியா மர்வட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் மிகவும் சிறந்த முறையில் ஒற்றுமையோடு செயற்படுவதாகவும் மேலும் பல சேவைகளை அவர்கள் மக்களுக்கு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (2-312)

# இன்னியம் இசைக் கருவிகளை மீட்டும் பயிற்சியை சிறுவர்களிடம் விதையுங்கள்

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வ.மா.உறுப்பினர் ரவிகரன் வேண்டுகோள்

தமிழர்களின் பாரம்பரியம் பண்பாட்டு இன்னியம் இசைக் கருவிகளைள சிறுவர்களிடம் பயிற்றுவித்து எமது பண்பாட்டு விழுமியங்களை காக்க வேண்டும்.உங்களால் முடியாததல்ல என முன்பள்ளி ஆசிரியர்களிடம் வேண்டுகோள் விடுத்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.

ஒட்டுசுட்டான் சிவநகர் ஆதிகணபதி முன்பள்ளிச் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி அண்மையில முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

சிறுவர்களுக்கான மேலைத்தேய இசைக்கருவிகளை பெற்றுத்தரும்படியும் நிர்வாகத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. தமிழ் மண்ணில் தமிழர் பண்பாட்டு இசைக் கருவிகளை வழங்கும் முன்னெடுப்பையே நான் கடந்த மூன்றாண்டுகளாக மேற்கொண்டு வருகிறேன்.

தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு இன்னியம் இசைக்கருவிகளை சிறுவர்களிடத்தே பயிற்றுவித்து எமது பண்பாட்டு விழுமியங்களை காக்க வேண்டும். உங்களால் முடியாததல்ல என முன்பள்ளி ஆசிரியர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.இதற்காக ஒரு இலட்சம் ரூபாவை தனது நிதியிலிருந்து ஒதுக்குவதாகவும் தெரிவித்தார். (2-281-250)







கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். ஜேர்மன் அரசின் உதவியுடன் அறிவியல் நகர் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த தொழில்நுட்ப கல்லூரிக் கட்டடத் தொகுதி எதிர்வரும் 18 ஆம் திகதி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரினால் திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் பார்வையிட்டார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், பொலிஸ் இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-மல்லாவி, பரந்தன் செய்தியாளர்கள்)

# தொழிற்பயிற்சி செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக இலங்கை-ஜேர்மன் பயிற்சி நிலையம் அமையும்

## கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(பரந்தன்)

**இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவனம் (SLGTI) கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கை அரசாங்கத்துடனான பங்காண்மை அடிப்படையில் ஜேர்மன் அபிவிருத்தி கூட்டாண்மை (GIZ) அமைப்பினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த இலங்கை-ஜேர்மன் பயிற்சி நிறுவனம் கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.**

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குறித்த கட்டடத் தொகுதியை பார்வையிட்ட பின் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறுகையில்,

கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ள இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவனம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

ஜேர்மனியின் பொருளாதார கூட்டாண்மை மற்றும் அபிவிருத்தி அமைச்சின் சார்பாக Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH மற்றும் Kreditanstalt für Wiederaufbau (German Development Bank- KfW) ஆகியவற்றினால் முன்னெடுக்கப்படும் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் செயற்படுத்தப்படும் தொழிற்பயிற்சி செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவனம் அமைந்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்கு



இணை நிதி உதவி சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்தின் குடிபெயர்வு செயலாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டிருந்தது. 2012 இல் இந்த செயற்றிட்டம் கிளிநொச்சி அறிவியல் நகரில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் கேள்வி அடிப்படையிலான தொழிற் பயிற்சிகளை மேம்படுத்துவது இதன் நோக்கமாக அமைந்திருக்கிறது.

இலங்கை - ஜேர்மனி பயிற்சி நிறுவனம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் எனவும் நாட்டின் சகல இனத்தவருக்கும் சகல மதத்தவருக்கும் சமமான முறையில் சேவைகளை வழங்கும் தேசிய மட்ட பயிற்சி நிலையமாக செயற்படும் நிறுவனமாக இது அமைந்துள்ளது.

வாகன தொழில்நுட்பம், நிர்மாண தொழில்நுட்பம், உணவு பதப்படுத்தல் தொழில்நுட்பம், எந்திரவியல்,பொறியியல் மற்றும் மின்சார மற்றும் மின் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் உயர் தரம் வாய்ந்த தொழிற்பயிற்சிகள் வழங்கப்படும். ஆங்கில மொழியில் சகல பயிற்சி செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், "இந்த துறைகளில் அதிகளவு வாய்ப்புகள் காணப்படுவதாக இனங்காணப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கு உயர்ந்த பயிற்சிகளைப் பெற்று ஆளுமை படைத்த ஊழியர்களாக திகழக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களைச் சேர்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நாட்டின் ஏனைய பாகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் மூலமாக பெறுமதி வாய்ந்த துறைசார் அறிவை பெற்றுக் கொள்ளவும் தொழிற் சந்தை அடிப்படையிலான அறிவை பெற்றுக் கொள்ளவும் வாய்ப்புகள் வழங்கப்படும். போட்டிகரமான தொழில் சந்தையில் அவர்களுக்கு தொழில் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை இது பெருமளவில் அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

வருடாந்தம் 200 மாணவர்கள் உள்வாங்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன், அவர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சி தகைமை (NVQ) கட்டமைப்புக்கமைய NVQ Level 4 முதல் 6 வரையான பயிற்சிகள் வழங்கப்படும். மாணவர்களை இதற்கு தயார்படுத்துவதற்கு, தேசிய தொழிற்பயிற்சி தகைமை (NVQ) ஒன்று முதல் 3 வரை பயிற்சிகள் வழங்க 14 தொழிற்பயிற்சி நிலையங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செய்மதி நிலையங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இந்த செய்மதி நிலையங்கள் இலங்கை-ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் தரத்துக்கேற்ப மெருகேற்றம்செய்யப்பட்டுள்ளன. க.பொ. த. சாதாரண தரம், க.பொ.த. உயர் தரமட மற்றும் NVQ Level 3 மற்றும் 4 தகைமைகளைக்கொண்டவர்களுக்கு இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவனம் கற்கைகளை வழங்கும்.

கிளிநொச்சி அறிவியல்நகரில் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட 25 ஏக்கர் காணியில் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிர்மாணப்பணிகள், சாதனங்கள் வழங்கல், இயந்திரங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் போன்றவற்றுக்காக (German Development Bank) இனால் 8.4 மில்லியன் யூரோக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. GIZ ஊடாக தொழில்நுட்ப உதவிகளுக்கான மேலதிக 8 மில்லியன் யூரோக்களை ஜேர்மன் பொருளாதார கூட்டாண்மை மற்றும் அபிவிருத்தி அமைச்சு வழங்கியிருந்தது. தொழில்நுட்ப உதவிகள், நிர்வாக ஊழியர்களின் மற்றும் பயிற்சியாளர்களின் திறன் அபிவிருத்தி ஆகியவற்றுக்கான தொழில் நுட்ப உதவிகளை வழங்கும் பொறுப்பை GIZ ஏற்றுள்ளது என்றார். (2-312)




# பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் நேற்று தற்காலிகமாக கைவிடப்பட்டது

## நாளை கிளி. மாவட்ட அரசாங்க அதிபரிடம் மனு கையளிக்கப்படும்

(பரந்தன்)

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பரவிப்பாஞ்சான் பகுதியைச் சேர்ந்த மக்கள், தமது சொந்தக் காணிகளை இராணுவத்தினர் உடனடியாக விடுவிக்க வேண்டும் எனக்கோரி நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் முன்னெடுத்த கவனயீர்ப்புப் போராட்டம், நேற்று முற்பகல் 10 மணியுடன் தற்காலிகமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.சத்தியசீலன், போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சந்தித்துப்பேசி, சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடனடியாக கலந்துரையாடி, சரியான தீர்வைப் பெற்றுத் தருவதாக வழங்கிய உறுதி மொழியையடுத்து போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

மேற்படி பகுதியைச் சேர்ந்த 56 குடும்பங்களுக்குச் சொந்தமான 17.2 ஏக்கர் நிலப்பரப்பு காணியை இராணுவத்தினர் தங்கள் வசப்படுத்தி வைத்துள்ளனர். தங்கள் காணிகளை விடுவிக்குமாறு பல்வேறு தரப்பினர்களிடம் கோரிக்கை முன்வைத்திருந்த மக்கள், இறுதியாக மேற்படி முகாம் பொறுப்பதிகாரியிடமும் கோரிக்கை முன்வைத்தனர்.

அது பயனளிக்காத நிலையில் தமது சொந்த மாவட்டத்திற்குள்ளேயே இடம்பெயர்ந்தவர்களாக அகதி வாழ்வு வாழ்ந்து வருவதாகவும் தங்களை மீள்குடியேற்றம் செய்யுமாறு வலியுறுத்தி, பரவிப்பாஞ்சான் பிரதான வீதியில் நேற்று முன்தினம் முதல் இந்தப் போராட்டத்தை இரவு பகலாக மக்கள் முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு தமது கோரிக்கை அடங்கிய மனுவை கையளிக்க இருப்பதாகவும் அவர் தமக்கு அளிக்கும் பதில் திருப்தி இல்லாமல் இருப்பின் மீண்டும் போராட்டம் தொடரும் என அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் பரவிப்பாஞ்சான் மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி போராட்டங்கள் பல நடத்திய போதிலும், குறித்த பிரதேசத்தின் ஒரு பகுதி இன்றுவரை விடுவிக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் (2-312-15)

# குடிநீர் பயன்பாட்டுக்கு வைக்கப்பட்ட நீர்த்தாங்கி இரவோடிரவாக திருட்டு

கிளி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் மாணவர்களின் குடிநீர் பயன்பாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய நீர்த்தாங்கி இரவோடிரவாகத் திருட்டுப் போயுள்ளதாக வித்தியாலய அதிபர் தங்கவேலு கண்ணபிரான் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இரவு நடைபெற்றது. கடந்த மாதம் மாணவர்களின் குடிநீர் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட நீர்த்தாங்கியே இவ்வாறு திருட்டுப் போயுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வித்தியாலய உப அதிபரினால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அண்மைய நாட்களாக மேற்படி பகுதிகளில் நள்ளிரவு வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-309)



சர்வதேச நோத் ஈஸ்ட் லங்கா பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கலாநிதிப் பட்ட ஆய்வு சமர்ப்பிப்பில் அமிஸ்டடாம் பல்கலைக்கழக சர்வ கல்வியியல் துறை நிபுணர் பேராசிரியை கலாநிதி எஸ். ஜெதியா பங்குபற்றியிருந்தார். அவருடன் கலாநிதி தி. கலாமணி, கலாநிதி பா. தனபாலன், கலாநிதி என். நல்லையா, பணிப்பாளர் எஸ். பால சுப்பிரமணியம் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.
(படம்:புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



யாழ்.அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய கொடியேற்றத் திருவிழா கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற போது... (படம்:- கரணவாய் செய்தியாளர்)





யாழ். அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசாமி ஆலய தேர் உற்சவம் அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்:- அராலிச் செய்தியாளர்)







யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா மந்தீரில் அண்மையில் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா வெகு விமரிசையாக இடம் பெற்றது. மாலை சாயிநாதருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் வீதியுலா இடம் பெற்றது. (படங்கள்–சிவசாந்தன்)





யாழ். கொடிகாமம் கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகிய போது...



யாழ்ப்பாணம் உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சம்பியன் கிண்ணத்தை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வைத்திய கலாநிதி ரதினி காந்தநேசன் வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.







கோட்டம், வலயம் ரீதியில் நடத்தப்பட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய 3, 4, 5 ஆம் தர மாணவர்கள் பங்குபற்றி முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.







யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆரம்பக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா கலந்து கொண்டு மாணவர்களுக்கு சின்னம் சூட்டி வைத்தார்.

## உலகத்தில் கி.பி. 1 இல் 2 கோடி மக்கள்!

# 2075 இல் ஆயிரம் கோடி மக்கள்

உலக சனத்தொகையில் சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, இந்தோனேஷியா, பிரேசில், பாகிஸ்தான், நைஜீரியா, பங்களாதேஷ், ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளே அதிக சனத்தொகையை கொண்டுள்ளன. உலக சனத்தொகைப் பட்டியலில் இலங்கை 56 ஆவது இடத்தில் உள்ளது. உலக சனத்தொகை வளர்ச்சியானது வளர்ந்து வரும் நாடுகளில் மிக மிக வேகமாக இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். உலக சனத்தொகை வருடமொன்றுக்கு 83 மில்லியன் தொகையினால் அதிகரித்து வருகின்றது. நாள் ஒன்றுக்கு பிறப்புக்களால் 2,30,000 சனத்தொகை அதிகரிக்கும் வேளை உலகம் முற்றிலுமாக பிறக்கும் ஒவ்வொரு ஐந்தாவது குழந்தையும் தற்செயலாகவே பிறக்கின்றது.




பொதுவாக இறப்பு வீதத்தை விட பிறப்பு வீதம் அதிகமாக காணப்படுவதே சனத்தொகைப் பெருக்கத்திற்கான காரணம் எனலாம். நவீன காலத்தில் மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள மகத்தான முன்னேற்றம பெருமளவுக்கு இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது.

பதின்மவயதிலே குழந்தையைப் பெற்றுக் கொள்வதில் ஆபிரிக்க நாட்டுப் பெண்கள் இன்று முன்னிலையில் இருப்பதனால் அங்கு வேகமாக சனத்தொகை அதிகரிக்கும் சாத்தியங்கள் இருக்கின்றன.

உலகசனத்தொகை மாநாடுகள் புகாரெஸ்ட் (1974), மெக்சிக்கோ (1984), கெய்ரோ (1994) நகரங்களில் கூடின. இருந்த போதிலும் உலக சனத்தொகை பற்றிய காத்திரமான உணர்வு 1987 இல் தான் ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் உலக சனத்தொகை 500



கோடியைத் தாண்டியது.

இதனால் வரும் பாதிப்புக்களை கருத்திற்கொண்டு 1988 இல் ஐ.நா. சபையானது உலக சனத்தொகை தின மாக ஜுலை மாதம் 11 ஆம் திகதியை பிரகடனப்படுத்தியது.

கி.பி. 01 இல் உலக சனத்தொகை சுமார் 2 கோடியாகவும் காணப்பட்டது. இத்தொகை கி.பி. 1,000 ஆம் ஆண்டில் 27.5 கோடியாகவும் கி.பி. 1,500 ஆம் ஆண்டில் 45.5 கோடியாகவும் 1650 ஆம் ஆண்டில் 50 கோடியாகவும் 1750 ஆண்டில் 70 கோடியாகவும் 1804 ஆம் ஆண்டில் 100 கோடியாகவும் 1850 ஆம் ஆண்டில் 120 கோடியாகவும் 1900 ஆம் ஆண்டில் 160 கோடியாகவும் 1927 ஆம் ஆண்டில் 200 கோடியாகவும் 1950 இல் 255 கோடியாகவும் 1960 ஆம் ஆண்டில் 300 கோடியாகவும் 1975 இல் 400 கோடியாகவும் 1987 ஆம் ஆண்டு 500 கோடியாகவும் உயர்ந்தது. 1999 ஆம் ஆண்டில் 600 கோடியாகவும் 2012 ஆம் ஆண்டு 700 கோடியாகவும் காணப்பட்டது. தற்போது 700 கோடியையும் தாண்டி விட்டது. சனத்தொகையானது இதே வேகத்தில் வளர்ந்துகொண்டு செல்லுமாயின் 2075 ஆம் ஆண்டில 1000 கோடியாக உயரும். பொதுவாக நோக்குமிடத்து 20 ஆம் நூற்றாண்டின் ஆரமபத்தைத் தொடர்ந்து சனத்தொகையானது மிக வேகமாக பல மடங்குகள் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. பூமியிலுள்ள வளங்கள் 200 கோடி மக்களுக்கு மட்டுமே போதுமானதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அதிகப்படியான மக்கள் தொகையால் சமூக, பொருளாதார சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. காடுகளுக்கான நிலப்பரப்பு குறைந்து வருகின்றது. கிராம மக்கள் பிழைப்புக்காக நகரத்தை நோக்கி நகர்கிறார்கள். அங்கே குடிசைகள் பெருகி சுற்றுச்சூழல் சீர்கெடுகிறது. குடிநீர்ப் பற்றாக்குறை, மின்சார பற்றாக்குறை ஏற்படுகின்றன.

பூமியின் கொள்ளளவை விஞ்சிய உலக சனத்தொகை அதிகரிப்பானது ஆபத்தான விளைவுகளையே உருவாக்கும் என்பதால் உலக சனத்தொகை வளர்ச்சி வீதத்தை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய நிலை பூமியில் தோன்றியிருக்கின்றது என்கின்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள்.

மக்கள் தொகைப் பெருக்கத்தின் பாதிப்பு அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் பார்க்க அபிவிருத்தி அடையாத நாடுகளிலே அதிகமாக காணப்படுகின்றன. காரணம் உலக வளத்தில் 80 சதவீதத்தை வைத்திருக்கும் அபிவிருத்தி அடைந்த நாடுகளான செல்வந்த நாடுகளில் உள்ள மக்கள் தொகை வெறும் 20 சதவீதம்தான். மாறாக, 20 சதவீத வளத்தைக் கொண் டிருககும் அபிவிருத்தி அடையாத நாடுகளான வறிய நாடு களில் உள்ள மக்கள் தொகையோ 80 சதவீதமாகும்.

எமது நாடான இலங்கையை சற்று அலசுவோம். 2001 ஆம் ஆண்டு இலங்கையின் வருடாந்த சனத்தொகைப் பெருக்க வீதம் 1.2 ஆக இருந்தது. 2012 ஆம் ஆண்டில் சனத்தொகைப் பெருக்க வீதம் 0.7 ஆக குறைந்திருக்கிறது. நடந்து முடிந்த சனத்தொகை மதிப்பீட்டின் மூலமே இந்த தகவல் கிடைத்தது.

1953 ஆம் ஆண்டு இலங்கையின் சனத்தொகை கணகெடுக்கப்பட்டது. முதல் படிப்படியாக ஒரு வருடத்தில் சனத்தொகை பெருக்க வீதாசாரம் குறைய ஆரம்பித்தது. சனத்தொகை வீதாசாரம் ஒரு நாட்டில் குறைவது அந்நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கான சாதகமான அறிகுறியாகும்.

சனத்தொகை மதிப்பீட்டின போது அநுராதபுர மாவட்டத்திலேயே வருடாந்த சனத்தொகை பெருக்க வீதாசாரம் 1.33 சதவீதமாக அதிகரித்திருந்தது. ஆயினும், நுவரெலியா, பதுளை ஆகிய மலையக தேயிலைத் தோட்டங்கள் அதிகளவுள்ள பிரதேசங்களில் வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதாசாரம் குறைந்திருக்கின்றது. நுவரெலியாவில் 0.05 ஆகவும் பதுளையில் 0.37 ஆகவும் வீழ்ச்சி அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு சாதகமான அறி குறியாக விளங்குகிறது.

இன்று உலக சனத்தொகையில் சுமாராக அரைவாசி மக்கள் 25 வயதை அடையாதவர்களாக இருப்பதனால் குறுகிய காலத்தில் சனத்தொகையை கட்டுப்படுத்துவது என்பது மிகக் கடினமான விடயமாக இருக்கும் என்பது பல ஆய்வாளர்களினதும் கருத்தாக இருக்கின்றது.

இன்று உலகில் 925 மில்லியன் மக்கள் பட்டினி யால் வாடுகின்றனர். வருடத் திற்கு 25 மில்லியன் குழந்தை கள் உலகில் பட்டினியால் இறக்கின்றன. போசாக்கின்மையால் 170 மில்லியன் குழந் தைகள் வளர்ச்சி குன்றிய நிலையில் காணப்படுகின்றன.

சனத்தொகை அதிகரிக்கும் நிலையில் பட்டினி இறப்புக்களும் வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறப்பதும் குழந்தைகள் வளர்ச்சியில் பாதிப்புக்கள் ஏற்படுவதும் உலகில் பட்டினி அதிகரிப்பும் மேலும் மேலும் அதிகரித்துச் செல்லும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு நாம் கருச்சிதைவு, கருவைக் கலைத்தல் போன்ற பாவகரமான செயல்களில் ஈடுபடுவது தவறு. சில மதங்கள் முற்றாக எதிர்க்கின்றன.

அறியப்பட்ட வளங்களை கணக்கில் எடுத்தால் உலக

> **அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் புதிய வளங்கள் கண்டறியப்பட்டால் ஆயிரம் கோடி மக்களும் ஆரோக்கியமாக வாழ முடியும்.**

மக்கள் தொகை மிகையாக (Over Population) கருதப்படுகிறது. எதிர்காலத்தில் மனிதனின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் இயற்கையின் இரகசியங்கள், முடிச்சுக்கள் அவிழ்க்கப்பட்டு புதிய வளங்கள் கண்டறியப்படுமானால் இருக்கும் இந்த மக்கள் தொகை குறைவானதாக (Under Population) கருதப்படும் நிலை தோன்றக் கூடும்.

2075 ஆம் ஆண்டு உலக சனத்தொகை ஆயிரம் கோடியாகவும் 2100 ஆம் ஆண்டில் உலக சனத்தொகை 1,100 கோடியை தாண்டும் எனவும் 2200 ஆம் ஆண்டு 1,200 கோடியாகவும் உயருமஎன சனத்தொகை வளர்ச்சி தொடர்பான அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

உலகில் அறியப்படாத வளங்கள் அறியப்பட்ட வளங்களைப்போல பல மடங்குகளாகும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எதிர்காலத்தில் மனிதனின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் புதிய வளங்கள் கண்டறியப்பட்டால் மக்கள் தொகை பூமிக்கு ஒரு பொருட்டாக இருக்கமாட்டாது. மக்கள் அனைவரும் ஆரோக்கியமாக இருப்பார்கள்.

அல்ஹாஜ்
எம்.எப்.எம்.இக்பால்
(ஜே.பி)
யாழ்ப்பாணம்.

# செய்தித்துளிகள்

## வெளிநாட்டு பிரஜைகள் உட்பட 24 பேர் மீது குளவித்தாக்குதல்

சிகிரியாவை பார்வையிடுவதற்காக சென்றிருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் மீது குளவி கொட்டியதில் பாதிக்கப்பட்ட 24 பேர் கிஓஸ்ஸ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களில் 7 சீனப்பிரஜைகள், ஒரு இத்தாலிப்பிரஜை மற்றும் பிபிலையைச்சேர்ந்த 16 பேர் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. (இ-5)

## பூப்புனித நீராட்டு விழாவில் கத்திக்குத்து; 6 பேர் காயம்

பூப்புனித நீராட்டு வைபவத்துக்கு சென்றிருந்தவர்களிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் அறுவர் காயமடைந்துள்ளனர். இந்த சம்பவம், மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட தெய்வகந்த பிரிவில், நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த அறுவரும், மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர், மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பிரதான சந்தேகநபரும், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். (இ-5)

## கூரை விழுந்ததில் சிறுமி படுகாயம்

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வீசிய கடும் காற்றுக் காரணமாக வீட்டுக் கூரை உடைந்து விழுந்ததில் அன்வர் ரப்சானி (வயது 13) என்ற சிறுமி படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற இரண்டாவது மாடிச் சுவர், அருகில் உள்ள வீட்டுக் கூரையின் மீது விழுந்தது. இந்நிலையில், அவ்வீட்டுக் கூரை உடைந்து இச் சிறுமியின் மீது விழுந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-5)

## இலங்கை இளைஞன் கைது!

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இலங்கை இளைஞர் ஒருவர் குவைத் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. குவைத் நாட்டு சுங்கப் பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, குறித்த நபரிடம் இருந்து போதைப் பொருள் அடங்கிய 3 பொலித்தீன் பைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-5)

## சஜின்வாஸின் மோசடி வழக்குகளை மீள விசாரிக்கும் குற்றப்புலனாய்வு பிரிவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவின் மோசடி வழக்குகள் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவு மீண்டும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. சஜின்வாஸ் கடந்த வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார். இவர் வர்த்தகர் ஒருவரிடம் இருந்து சட்டவிரோதமாக பணம் பெற்றமை தொடர்பில் கடந்த மாதம் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனத்தை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் கடந்த வருடம் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வெள்ளத்தில் சிக்கி 11 பேர் பலி

இந்திய மத்திய பிரதேச மாநிலத்தில் இடைவிடாமல் பெய்து வரும் கனமழையால் 11 பேர் பலியாகினர். மழை பாதிப்பு குறித்து மாநில முதல்வர் சிவராஜ் சிங் சவுஹான் போபாலில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியது, கடந்த 3 முதல் 4 நாட்களாக இடைவிடாமல் பெய்து வரும் மழையால் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. போபாலில் வெள்ளத்தில் சிக்கி 2 பேர் இறந்துவிட்டனர். மேலும் திகாம்கர், ரேவா, ஜாபுவா, பேடல் ரெய்சன் மற்றும் பன்னா ஆகிய இடங்களில் ஏற்பட்ட வெள்ளத்தில் 6 பேர் உயிரிழந்தனர் என்றார். (இ-5)

## ஏவுகணைப் பரிசோதனைகளை ஈரான் உடன் நிறுத்த வேண்டும்

ஏவுகணைப் பரிசோதனைகளை ஈரான் நிறுத்த வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூன் வலியுறுத்தியுள்ளார். ஈரானும், 6 வல்லரசு நாடுகளும் கடந்த ஆண்டு ஜுலை மாதம் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொண்டன. இந்த ஒப்பந்தத்தை அனுமதிக்கும் ஐ.நா. தீர்மானம் குறித்த அறிக்கையை, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலிடம் பான் கிமூன் கடந்த வெள்ளிக்கிழமை அளித்தார். அதில் மேற்கண்டவாறு அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# துப்பாக்கிச் சண்டையில் 150 பேர் பலி!

(ஜுபா) ஆபிரிக்க நாடான தெற்கு சூடானில் இராணுவத்தினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 150இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். கடந்த வெள்ளிக்கிழமை தெற்கு சூடானின் 5ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை யொட்டி, அந்நாட்டின் துணை ஜனாதிபதி ரீக் மாஷரும் ( கிளர்ச்சியாளர்), ஜனாதிபதி சல்வா கிர்ரும் சந்தித்தனர். அப்போது, அவர்களுடைய பாதுகாவலர்களுக்கு இடையே திடீரென்று துப்பாக்கிச் சண்டை மூண்டது. அதைத் தொடர்ந்து, கிளர்ச்சியாளர்களும், தெற்கு சூடான் இராணுவத்தினரும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். இதில், 150 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். (இ-5)

# சிரியாவின் அலெப்போ நகரில் ரொக்கெட் வீசித் தாக்குதல்

## 30 பேர் உயிரிழப்பு



(பெய்ரூட்)

**சிரியாவின் அலெப்போ நகரில் நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் சிக்கி 30 பேர் உயிரிழந்துள்ளனர்.**

சிரியாவில் 6 ஆண்டுகளாக ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சி நடந்து வருகிறது. கடந்த பெப்ரவரி மாத இறுதியில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, அங்கு அமுலுக்கு வந்துள்ள போதிலும், அதை மீறி ஜனாதிபதி ஆதரவுப் படைகளும், கிளர்ச்சியாளர்களின் படைகளும் அடிக்கடி மோதி வருகின்றன.

இந்த நிலையில், அங்கு கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்த மேடா என்ற நகரத்தை 12 நாட்கள் போருக்குப் பிறகு அரசுப் படை மீட்டது. இது அரசுப் படைக்கு முக்கிய வெற்றியாக கருதப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு. மிகப்பெரிய நகரமான அலெப்போவில் அரசுப் படைகள் வசம் உள்ள பகுதிகளை குறிவைத்து கிளர்ச்சியாளர்கள் ரொக்கெட் வீசித் தாக்குதல் நடத்தினர். இதில் 30 பேர் கொல்லப்பட்டதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், 6 பெண்கள், குழந்தைகள் உட்பட 34 பேர் இறந்ததாக மனித உரிமை கண்காணிப்பகம் கூறுகிறது. இதேபோல், கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள பகுதியில் நடத்தப்பட்ட விமான தாக்குதலில் 8 பெண்கள்,ஒரு குழந்தை என மொத்தம் 9 பேர் கொல்லப்பட்டதாகவும் கூறியுள்ளது.

இந்த தாக்குதலை அரசுப் படைகள் அல்லது ரஷ்ய படை நடத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (இ-5)

# ஈராக் மீது போர்; பிரிட்டனின் முடிபு சட்டவிரோதமானது

### முன்னாள் துணைப்பிரதமரின் காலங்கடந்த ஞானோதயம்



அமெரிக்கா தலைமையில் 2003 ஆம் ஆண்டு ஈராக் நாட்டின் மீது போர் தொடுக்க உடன்பட்ட பிரிட்டனின் முடிவு சட்டவிரோதமானது என பிரிட்டன் நாட்டின் முன்னாள் துணைப் பிரதமர் ஜான் பிரெஸ்காட் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, 'சண்டே மிரர்' பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையில், ஈராக் விவகாரம் தொடர்பாக அமைதியான முறையில் தீர்வு கண்டிருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தும், ஈராக்கின் பலத்தை சரியாக புரிந்துகொள்ளாமலும் அமெரிக்காவின் தலைமையிலான அந்தப் போரில் இறங்கியதற்காக வருத்தம் தெரிவிப்பது போல் ஜான் பிரெஸ்காட் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பிரிட்டன் நாட்டின் மேல்சபை (பிரபுக்கள் சபை) எம்.பியாக பதவி வகித்துவரும் ஜான் பிரெஸ்காட், 'ஆட்சி மாற்றம் என்ற ஒரே காரணத்துக்காக ஈராக் மீது போர் தொடுப்பது சட்ட விரோதமானது என்று கடந்த 2004 ஆம் ஆண்டு அந்நாள் ஐ.நா.சபை பொதுச் செயலாளர் கோபி அனான் சுட்டிக் காட்டியிருந்தார்.

அன்று அவர் கூறியது சரிதான் என்பதை மிகுந்த சோகத்துடனும், கோபத்துடனும் இப்போது நான் நம்புகிறேன். ஈராக் மீது படையெடுக்கும் முடிவு மற்றும் அந்தப் படையெடுப்பால் ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான, பேரழிவான எதிர்விளைவுகளுடனே எனது எஞ்சிய வாழ்நாளை நான் கழிக்க வேண்டியுள்ளது' என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஈராக் மீது போர் தொடுக்கும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்க்கு ஆதரவாக 'நான் உங்களுக்கு துணையாக இருப்பேன்' என்று தைரியம் கொடுத்த பிரிட்டன் நாட்டின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயரும் ஈராக் போரில் ஈடுபட்டதை எண்ணி வேதனைப்படுவதாகவும், வருத்தப்படுவதாகவும், மன்னிப்பு கோருவதாகவும் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# 'நரகத்தின் நாய்களே' ஐ.எஸ்.தீவிரவாதிகள்

(ஐதராபாத்)

மக்கா நகரின் மீது தாக்குதல் நடத்த தற்கொலைப் படையை ஏவிய ஐ.எஸ். தீவிரவாதிகளை நரகத்தின் நாய்கள் என இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் அசாதுதீன் ஒவைசி தெரிவித்தார்.

ஐதராபாத் நகரில் முஸ்லிம் அமைப்புகளின் சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய இந்திய மஜ்லிஸ்-இ-இட்டெஹாதுல் முஸ்லிம் இயக்கத் தலைவரும், ஐதராபாத் தொகுதி எம்.பி.யுமான அசாதுதீன் ஒவைசி, ஐ.எஸ். தீவிரவாதிகள் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனித குலத்துக்குமே தீங்கானவர்கள் என்று குற்றம் சாட்டினார்.

இஸ்லாம் மார்க்கத்துக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் எந்த தொடர்பும் இருக்க முடியாது என்று கூறிய அவர், இந்த தீவிரவாதிகளை அழிப்பது முஸ்லிம்களின் பெரிய கடமையாகும் என்றார். (இ-5)

# மெக்சிக்கோவில் துப்பாக்கிச் சூடு!

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேர் உட்பட 15 பேர் பலி

மெக்சிக்கோவின் வடகிழக்குப்பகுதியில் துப்பாக்கியுடன் வந்த மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 11 பேர் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

மெக்சிக்கோ நாட்டு நேரப்படி நேற்றுக் காலை 7 மணிக்கு, டமாலிபாஸ் தலைநகர் கியுடாட் விக்டோரியா நகரில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த மர்ம மனிதன் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 11 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் 2 பேர் ஆண்கள் எனவும், 6 பேர் பெண்கள் எனவும் மற்றவர்கள் குழந்தைகள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் நடந்த 45 நிமிடங்களுக்கு பிறகு, மற்றொரு துப்பாக்கிச்சூட்டில் ஒரு ஆண் மற்றும் 2 பெண்கள் உட்பட 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் நடந்த நகரங்களிலிருந்துதான் அமெரிக்காவிற்கு அதிகளவில் போதை மருந்து கடத்தப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-5)

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## பௌதிகவியல் பகுதி-II பகுதி -A அமைப்புக் கட்டுரை

## கொழும்பு றோயல் கல்லூரி

(01).பக்கமொன்றின் நீளம் a உடைய சதுர முகத்தைக் கொண்டுள்ள கோலொன்றை பயன்படுத்தி மாணவனொருவன் நீரமானியொன்றை அமைத்துள்ளான். நீரமானியி னுள்ளே ஒரு முனைக்கு அண்மையில் வெளியே தென்படாதவாறு உலோகக் குற்றியொன்று உள்ளது. இந்நீரமானியை அளவுகோடிடுவதற்காக அடர்த்தி தெரிந்த பல திரவங்கள் தரப்பட்டுள்ளன.




(a) நீரமானியில் உலோகக்குற்றியுள்ள முனையை இனம்காண்பதற்கான பரிசோதனை முறையைக் கூறுக.

(b) நீரமானி திரவத்தில் மிதக்கும்போது எம்முனை (முனை X அல்லது முனை Y) திரவத்தினுள் இருக்கும்? காரணத்தைக் கூறுக.

(c) இந்நீரமானி திரவமொன்றில் நிலைக்குத்தாக மிதக்கின்றது.
பின்வரும் தரவுகள் தரப்பட்டுள்ளன.

நீரமானியின் நீளம்= L
திரவ மேற்பரப்பிற்கு
மேலேயுள்ள உயரம்= H
நீரமானியின் திணிவு= M
திரவத்தின் அடர்த்தி=P




(i) மேலேயுள்ள குறியீடுகள் சார்பாக மிதக்கும்போது கோவையொன்றை எழுதுக.

(ii) வரைபு முறையினால் திரவமொன்றின் அடர்த்தியைத் துணிய வேண்டும். l/p ஐ சாராமாறி ஆகவும் h ஐ சார்மாறி ஆகவும் இருக்குமாறு மேலேயுள்ள கோவையை மீள எழுதுக.

(d)இந்நீரமானியானது அடர்த்தி தெரிந்த இரு திரவங்களில் மிதக்க விடப்பட்ட போது h இற்கு கிடைத்த இரு பெறுமானங்கள் h எதிர் l/p வரைபில் மாணவனினால் குறிக்கப்பட்டுள்ளன.
இப்புள்ளிகள் சரியான புள்ளிகள் என கண்டறிந்த மாணவன் அவ்விரு புள்ளிக ளையும் மட்டும் பயன்படுத்தி தேவையான வரைபை வரைந்தான். வரைபு உரு வில் காட்டப்படவில்லை. அதனை நீர் வரைந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.




(i) அடர்த்தி தெரியாத திரவத்தில் நீரமானி மிதக்கும்போது h இன் பெறுமானம் 18 cm ஆயின் இத்திரவத்தின் அடர்த்தியைக் காண்க.

(ii) இந்நீரமானியைப் பயன்படுத்தி அளக்கக்கூடிய இழிவு அடர்த்தி அண்ணளவாக யாது?

(e) (i) திரவத்தின் மேற்பரப்பிழுவை T யும் திரவத்திற்கும் கண்ணாடிக்குமிடையிலான தொடுகைக் கோணம் θ உம் ஆயின் மேலே வினா (c) (i) உள்ள கோவையை மீண்டும் எழுதுக.

(ii) மாணவனால் அமைக்கப்பட்ட நீரமானியினால் அளவீடு எடுக்கும்போது ஏற்படும் இடர்ப்பாடு யாது?

(iii) இந்நீரமானியின் உணர்திறனை அதிகரிப்பதற்கு இதில் என்ன மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்?

(02) உலோகக்கோலொன்றின் தன்வெப்பக்கொள்ளளவு,வெப்பக்கடத்தாறு ஆகியவற் றைப் பரிசோதனை மூலம் துணிவதற்காக மாணவன் பின்வரும் உபகரணத்தை அமைத்துள்ளான்.




வெப்பக்காவலிடப்பட்டுள்ள உலோகப்பாத்திரத்தில் $0^oC$ இலுள்ள சில பனிக்கட்டித் துண்டுகள் உள்ளன. ஒடுங்கிய நிலைக்குத்தான கண்ணாடிக்குழாயில் ஆரம்பத்தில் குறித்தளவு நீர் நிரல் உள்ளது. இறப்பர் கவ்வியை அகற்றி வெப்பக்காவலிடப் பட்டுள்ள சூழல் வெப்பநிலையில் ($25^oC$) உள்ள உலோகக்கோல் ஆனது பாத்திரத்தில் (X இல்) இணைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் குழாயிலுள்ள நீர் நிரல் கீழிறங்கி சமநிலைக்கு வந்தது. பாத்திரத்திலுள்ள நீரின் வெப்பநிலை $0^oC$ ஆகவும் மாறாது எனவும் கருதுக.

ஒடுங்கிய குழாயின் குறுக்குவெட்டுப்பரப்பளவு=$0.5cm^2$
$0^oC$ நீரின் 1kg திணிவின் கனவளவு=$1X10^{-3}m^3$
$0^oC$ பனிக்கட்டியின் 1kg திணிவின் கனவளவு=$1.05X10^{-3}m^3$
பனிக்கட்டியின் உருகலின் தன்மறை வெப்பம்=$3X10^5Jkg^{-1}$
.உலோகத்தின் அடர்த்தி=$8000kg\ m^{-3}$

(a) (i) ஒடுங்கிய குழாயிலுள்ள நீர் நிரல் கீழிறங்குவதற்கான காரணத்தைக் கூறுக.
(ii) நீர் நிரல் கீழிறங்கி சமநிலை அடைவதற்கான காரணத்தைக் கூறுக.

(b) (i) ஒடுங்கிய குழாயிலுள்ள நீர் நிரலின் மேல் நீர்மட்ட ஆரம்ப வாசிப்பு 8cm உம் சமநிலையின் பின்னர் வாசிப்பு 7cm உம் ஆகும். இச்சந்தர்ப்பத்தில் பனிக்கட்டி நீராக மாறியதால் ஏற்பட்ட கனவளவு மாற்றத்தைக் காண்க.
(ii) உருகிய பனிக்கட்டியின் திணிவைக் காண்க

(c) கோலின் நீளம் 10cm உம் குறுக்கு வெட்டுப்பரப்பளவு $5cm^2$ உம் ஆயின் கோல் ஆக்கப்பட்ட திரவியத்தின் தன்வெப்பக்கொள்ளளவைக் காண்க

(d) தற்போது கோலின் முனை B இலிருந்து வெப்பக்காவலி அகற்றப்படுகின்றது. முனை B இலுள்ள வெப்பநிலை (θ) ஆனது நேரத்துடன் (t) மாறுவதைக் காட்டுவதற்கான வரைபை வரைக



(e) கோல் உறுதி நிலையை அடைந்த பின்னர் குழாயிலுள்ள நீர் கீழிறங்கும் வீதம் $0.025cm\ s^{-1}$ ஆயின் உலோகத்தின் வெப்பக்கடத்தாறைக் காண்க.

(03). மீடிறனுடன் கம்பியின் அதிரும் நீளத்தை அறிவதற்காகப் பயன்படுத்தப்படும் சுரமானி உருவில் காட்டப்பட்டுள்ளது.




(a) தரப்பட்டுள்ள இசைக்கவையுடன் கம்பியின் அடிப்படை சுரத்திற்கான நீளம்($l$) ஐத் துணிவதற்கான பரிசோதனைப் படிமுறைகளைக் கூறுக.

(b) சாராமாறியாக இசைக்கவைகளின் மீடிறன்கள் f உம் சார்மாறியாக $1/l$ ஆகுமாறு வரைபு வரையப்படும். வரைபில் அச்சுக்களைக் குறித்து அண்ணளவான வரைபை வரைக.



(c) வரைபின் படித்திறன் m ஆயின் கம்பியில் குறுக்கலையின் கதி V இற்கான கோவையை m சார்பாகத் தருக.

(d) மீடிறன் தெரியாத இசைக்கவையொன்றின் மீடிறனை வரைபை முறையால் துணிவதற்கு பெற வேண்டிய இரு வாசிப்புக்கள் யாவை?

(e) வரைபை வரைவதற்கு ஆறு இசைக்கவைகள் தரப்பட்டிருப்பின் ஆரம்பத்தில் மீடிறன் கூடிய இசைக்கவையை பயன்படுத்துவதற்கான காரணத்தைக் கூறுக.

(f) ஆரம்பத்தில் மீடிறன் குறைந்த இசைக்கவையை பயன்படுத்துவது பொருத்த மானது என மாணவனொருவன் கூறுகின்றான். இக்கூற்றுடன் உடன்படுவ தற்கான காரணத்தைக்கூறுக.

(g) தொங்கவிடப்பட்டுள்ள சுமையின் பெறுமானம் சிறியதாக இருப்பது பொருத் தமற்றதற்கான காரணத்தைக் கூறுக.

(f) இசைக்கவையுடன் சுரமானிக்கம்பியைப் பரிவுறச்செய்வதற்கு அடிப்பு பயன்படுத் தப்படும் பரிசோதனை முறையைக் கூறுக.

(04)




உருவில் காட்டப்பட்டுள்ள மில்லி அம்பியர்மானியின் முழு அடைவிடைத்திரும்பல் 10mA உம் அகத்தடை 10Ω உம் ஆகும். மில்லி அம்பியர்மானியினூடாக பாயும் மின்னோட்டத்துடன் காட்டியின் திரும்பல் மாறுபடுவதை வரைபு காட்டுகின்றது.

(a) மில்லி அம்பியர்மானி முழு அளவிடைத்திரும்பலைக் காட்டும் போது P,Q இடையில் அழுத்த வேறுபாட்டைக் காண்க.

(b) மில்லி அம்பியர்மானியைப் பயன்படுத்தி முழு அளவிடைத்திரும்பல் 1V ஆகவுள்ள வோல்ற்றுமானியாக மாற்றுவதற்குத் தேவையான தடையியின் பெறுமானத்தைக் காண்க. இத்தடையியை மில்லி அம்பியர்மானியில் இணைத்துக் காட்டுக.

(c) (i) ஒடுமில்லி அம்பியர்மானியைப் பயன்படுத்தி முழு அளவிடைத்திரும்பல் 1A ஆகவுள்ள அம்பியர்மானியாக மாற்றுவதற்குத் தேவையான தடையியின் பெறுமானத்தைக் காண்க. இத்தடையியை மில்லி அம்பியர்மானியில் இணைத் துக் காட்டுக

(ii) இம்மின்னோட்டத்துடன் காட்டியின் திரும்பலின் மாறலைக் காட்டுவதற்கான வரைபை மேலேயுள்ள வரைபில் புள்ளிக் கோட்டினால் வரைந்து காட்டுக.




(d) இம்மில்லி அம்பியர்மானியை பயன்படுத்தி தடையை அளப்பதற்காக மி.இ.வி 2V உம் அகத்தடை 10Ω உடைய மின்கலம், இறையோதற்று, தடைப்பெட்டி தேவையா னளவு தொடுக்கும் கம்பிகள் தரப்பட்டுள்ளன. இதற்கான மின்சுற்று காட்டப்பட்டுள்ளது.

(i) தடைப்பெட்டியிலுள்ள எல்லா சாவிகளும் இணைக்கப்பட்டு இறையோதற்று (R) இன் பெறுமானம் மாற்றப்பட்டு முழு அடைத்திரும்பல் பெறப்பட்டது. இந்நிலை யில் தடையி R ஐக் காண்க

(ii) இந்நிலையில் தடைப்பெட்டியின் தடையின் பெறுமானத்தை உருவில் காட்டப்ப ட்டுள்ள மில்லி அம்பியர்மானியிலுள்ள சதுரக்கூட்டினுள் குறிக்க.

(e) தடைப்பெட்டியிலுள்ள செருகு சாவியொன்றை அகற்றியபோது மில்லி அம்பியர்மானி திரும்பலைக் காட்டவில்லை. தடையின் பெறுமானம் யாது? தடையின் பெறுமானத்தை உருவில் காட்டப்பட்டுள்ள மில்லி அம்பியர்மானியிலுள்ள சதுரக்கூட்டினுள் குறிக்க

(f) மில்லி அம்பியர்மானி அரைவாசி திரும்பலைக் காட்டுவதற்கு தடைப்பெட்டியில் அகற்ற வேண்டிய தடையின் பெறுமானத்தைக் காண்க. தடையின் பெறுமானத்தை உருவில் காட்டப்பட்டுள்ள மில்லி அம்பியர்மானியிலுள்ள சதுரக்கூட்டினுள் குறிக்க.

(g) தடைப்பெட்டியின் தடை மாறும்போது மில்லி அம்பியர்மானியின் திரும்பலின் மாறலைக் காட்டுவதற்கான வரைபை வரைக. இம்மாற்றத்திற்கான கோவையை எழுதுக.




மிகுதி நாளை வரும்

30) மின்மோட்டரொன்று 240V வலு வழங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது. சுருளின் தடை 4Ω உம் நுகரும் மின்னோட்டம் 4A உம் ஆகும். மோட்டரின் திறன்

1) 16% 2) 64% 3) 89.6% 4) 94.3% 5) 96%

31) அலுமினிய கதிர்த்தொழிற்பாட்டின் போது பொஸ்பரசு உருவாதலுக்கான கரு சமன்பாடு பின்வருமாறு $A + {}^{27}_{13}Al \rightarrow {}^{30}_{15}P + B$ இங்கு A,b என்பவை முறையே

(1) $\beta^{-1}$, P (2) $\alpha$, ${}^{1}_{0}n$ (3) $\alpha$, $\beta^{-1}$ (4) $\alpha$, $\gamma$ (5) $2\alpha$, ${}^{1}_{0}n$

32) உலோகக் குற்றியொன்று வெப்பநிலை 30°C இலுள்ள நீரில் முற்றாக அமிழ்ந்திருக்கும் போது அதன் தோற்ற நிறை குறைவு $W_1$ உம் வெப்பநிலை 50°C ஆக இருக்கும் போது முற்றாக அமிழ்ந்திருக்கும் போது தோற்ற நிறை குறைவு $W_2$ உம் ஆகும். உலோகத்தின் ஏகபரிமாண விரிதிறன் $\alpha$ உம் நீரின் உண்மை விரிதிறன் $\gamma$ உம் ஆகும். $W_1/W_2$ எனும் விகிதம்

(1) $\frac{1+20\gamma}{1+60\alpha}$ (2) $\frac{1+20\gamma}{1+20\alpha}$ (3) $\frac{1+60\gamma}{1+20\alpha}$ (4) $\frac{1+30\alpha}{1+30\gamma}$ (5) $\frac{1+50\alpha}{1+50\gamma}$

33) உருளை வடிவான வடிகட்டியொன்றின் அடிப்பகுதி பரப்பளவு A உடைய கிடை வட்டத் தட்டாகும். இத்தட்டில் ஆரை r உடைய சர்வசமனான n எண்ணிக்கையான வட்டத்துளைகள் உள்ளன. இவ்வடிகட்டியில் அடர்த்தி P உம் மேற்பரப்பிழுவை T யும் உடைய நீர் உள்ளது. இந்நீர் துளையினூடு வெளியேறாது இருக்குமாறு அதில் எடுக்கக்கூடிய நீரின் உயர் திணிவு

(1) $\frac{2AT}{rg} + \frac{2\pi n r^3 \rho}{3}$ (2) $\frac{AT}{rg} + \frac{\pi n r^3 \rho}{6}$ (3) $\frac{AT}{rg} + \frac{2\pi n r^3 \rho}{3}$

(4) $\frac{AT}{rg} + \frac{n r^3 \rho}{3}$ (5) $\frac{AT}{rg} + \frac{2\pi n r^3 \rho}{3}$

34) நீளம் $l$ உடைய இலேசான மீள்தன்மையின்றிய இழையின் ஒரு முனை நிலைத்த புள்ளி O உடன் இணைக்கப்பட்டும் அடுத்த முனையில் m திணிவுடைய கோளம் A இணைக்கப்பட்டும் உள்ளது. உருவில் காட்டப்பட்டுள்ளவாறு இழை கிடையாக இருக்குமாறு ஓய்விலிருந்து விழவிடப்படுகின்றது. இழை நிலைக்குத்தாக வரும் போது கிடையான ஒப்பமான தரையிலுள்ள B எனும் சர்வசமனான கோளத்துடன் பூரண மீள்தன்மை மோதுகையை ஏற்படுத்துகின்றது. மோதுவதற்கு சற்று முன்னரும் சற்று பின்னரும் இழையின் இழுவை




(1) 3mg,3mg (2) 3mg,2mg (3) 3mg,0
(4) 3mg,mg (5) mg,mg

35) 4V,0.8W உடைய மின் உபகரணமொன்று சுற்றில் P,Q எனும் புள்ளிகளுக்கு இணைக்கப்பட்டுள்ளது. A,B இடையில் அழுத்தவேறுபாடு 12V ஆகும். உபகரணம் அதில் குறிக்கப்பட்டுள்ள விதத்தில் செயற்படுவதற்காக தடையி R இற்கு இருக்க வேண்டிய பெறுமானம்




(1) 4 Ω (2) 4.6 Ω (3) 5 Ω
(4) 10/3 Ω (5) 12 Ω

36) ஆரை r உடைய வட்டமான கம்பித்தடம் அதன் தளங்களுக்கிடையிலான கோணம் 120° ஐ அமைக்குமாறு உருவில் காட்டப்பட்டுள்ளவாறு விட்டத்தின் வழியே வளைக்கப்பட்டுள்ளது. அதன் மையம் O வில் காந்தப்பாய வடர்த்தி




(1) 0 (2) $\frac{\mu_0 I}{8r}$ (3) $\frac{\mu_0 I}{2r}$

(4) $\frac{\mu_0 I}{2\pi r}$ (5) $\frac{\mu_0 I}{8\pi r}$

37) குறுக்கு வெட்டுப்பரப்பளவு $1cm^2$ உடைய குழாயைக் கொண்டுள்ள இரசப் பாரமானி யொன்றில் இரச நிரலின் உயரம் 75cm உம் குழாயிலுள்ள இரச மட்டத்திற்கு மேலே யுள்ள குழாயின் நீளம் 10cm உம் ஆகும். குழாயினுள் இரச நிரலின் உயரத்தை 60cm இற்கு கொண்டு வருவதற்கு அதனுள்ளே அனுப்பவேண்டிய வளிமண்டல அமுக்கத்திலுள்ள வளியின் கனவளவு

(1) 25/3 $cm^3$ (2) 5$cm^3$ (3) 10$cm^3$ (4) 20$cm^3$ (5) 25$cm^3$

38) p-n சந்தி இருவாயி உருவில் காட்டப்பட்டுள்ளது. $S_1, S_2, S_3$ என்பவை மூன்று கவுச மேற்பரப்புகளும் அவைகளுக்குக் குறுக்காகச் செல்லும் மின்பாயங்கள் முறையே $\phi_1, \phi_2, \phi_3$ உம் ஆகும். பின்வருவனவற்றுள் எது உண்மையானது?




(1) $\phi_1 > 0$ ; $\phi_2 > 0$ , $\phi_3 = 0$

(2) $\phi_1 < 0$ , $\phi_2 > 0$ , $\phi_3 = 0$

(3) $\phi_1 > \phi_2 > \phi_3$ (4) $\phi_1 = \phi_2 = \phi_3 = 0$ (5) $\phi_3 > \phi_1 > \phi_2$

39) 400K வெப்பநிலையிலுள்ள கரும்பொருளொன்று 300K வெப்பநிலையிலுள்ள சூழலில் உள்ளது. தெபனின் மாறிலி $5.7 \times 10^{-8}$ $Wm^{-2}K^{-4}$ ஆயின் ஆரம்பத்தில் பொருளிலிருந்து அலகு பரப்பினூடு காலும் தேறிய கதிர்ப்பு வீதம்

(1) 5.7X5 $Wm^{-2}$ (2) 5.7X25 $W m^{-2}$ (3) $5.7X10^{-8}$ $W m^{-2}$
(4) 5.7X7X 25 $Wm^{-2}$ (5) $5.7X400^2$ $Wm^{-2}$

40) இலட்சிய வாயுவொன்று உருளையினுள் முசலத்தினால் அடைக்கப்பட்டுள்ளது. A,B எனும் செய்கைகளுக்கு உட்புகுத்தப்படுகின்றன. இதன்போது உண்மையானது

| | A - முசலம் விரைவாக நெருக்கப்படும்போது | B - முசலம் மெதுவாக நெருக்கப்படும்போது |
|---|---|---|
| (1) | $\Delta W > 0, \Delta U > 0, \Delta Q > 0$ | $\Delta W > 0, \Delta U = 0, \Delta Q < 0$ |
| (2) | $\Delta W < 0, \Delta U > 0, \Delta Q = 0$ | $\Delta W < 0, \Delta U = 0, \Delta Q < 0$ |
| (3) | $\Delta W > 0, \Delta U > 0, \Delta Q > 0$ | $\Delta W > 0; \Delta U = 0, \Delta Q < 0$ |
| (4) | $\Delta W < 0, \Delta U > 0, \Delta Q > 0$ | $\Delta W > 0, \Delta U > 0, \Delta Q < 0$ |
| (5) | $\Delta W > 0, \Delta U > 0, \Delta Q > 0$ | $\Delta W = 0, \Delta U > 0; \Delta Q < 0$ |



41) கடத்திக்கம்பித்துண்டொன்றின் ஒரு பகுதி உருவில் காட்டப்பட்டுள்ளது. 0.5 t சீரான காந்தப்பாயவடர்த்தி கடதாசியின்தளத்திற்கு செங்குத்தாக உள்நோக்கி தொழிற்படுகின்றது. கம்பியினூடு 2 A மின்னோட்டம் பாயும்போது கம்பியின் மீது தொழிற்படும் காந்த விசையின் பருமன்




(1) $10^{-3}$N
(2) $5X10^{-2}$N
(3) $1.4X10^{-2}$N
(4) $1.2X10^{-2}$N
(5) 0.1N

42) A,B என்பது சமநீளமுடைய இரு இழைகள் ஆகும். A இன் குறுக்குவெட்டுப்பரப்பளவு B இனதின் இருமடங்காகும். A,B இன் யங்கின்மட்டு $y_1, y_2$ ஆகும். அவைகள் சமாந்தரமாக வைக்கப்பட்டு சேர்மான இழையொன்று ஆக்கப்பட்டுள்ளது. சேர்மானத்தில் சுமையொன்றை இணைத்தபோது நீட்சி e ஆகும். இரு இழைகளையும் தொடராக இணைத்து அதில் அதே சுமையை வைத்தால் நீட்சி

(1) $\frac{(Y_1+Y_2)e}{2Y_1Y_2}$ (2) $\frac{(Y_1+Y_2)e^2}{2Y_1Y_2}$ (3) $\frac{(2Y_1+Y_2)^2 e}{2Y_1Y_2}$ (4) $\frac{(Y_1+2Y_2)e}{2Y_1Y_2}$ (5) $\frac{2Y_1Y_2 e}{(Y_1+2Y_2)^2}$

43) இழைமின் விளக்கொன்றில் இருமுறை வோல்ற்றளவு வழங்குகையில் ஆளி மூடப்பட்ட கணத்திலிருந்து நேரம் t உடன் வெப்பநிலை θ மாறுவதை வரைபில் காட்டப்பட்டு ள்ளது. அதில் குறைந்த வோல்ற்றளவு 4V ஆயின் உயர் வோல்ற்றளவு (தடை தொடர்ந்து மாறாது என்க)




(1) $4\sqrt{2}$ V (2) $8\sqrt{2}$ V (3) $12\sqrt{3}$ V (4) 24 V (5) $24\sqrt{2}$

44) K,Na,Al என்பவைகளுக்கான வேலைச்சார்புகள் முறையே 2.30eV,2.75eV,4.28eV ஆகும். ஒரே மீடிறனும் செறிவுமுடைய ஒளி ஒவ்வொரு உலோகத்திலும் படுகின்றது. இவைகளுக்கான வோல்ற்றளவு (V)-மின்னோட்டம் (I) சிறப்பியல்பு வரை




45) திணிவு m உம் ஏற்றம் q உம் உடைய துணிக்கையொன்று காந்தப்பாயவடர்த்தி B உடைய சீரான புலத்தினுள் ஆரை r உடைய வட்டப்பாதையில் இயங்குகின்றது. இவ் வேற்றத்தின் இயக்கம் காரணமாக பாதையின் மையத்தில் ஏற்படும் காந்தபாயவடர்த்தி

(1) $\frac{mV}{qr}$ (2) $\frac{\mu_0 qB}{2r}$ (3) $\frac{\mu_0 q^2 B}{4\pi m r}$

(4) $\frac{\mu_0 q^2 B}{4\pi r}$ (5) $\frac{\mu_0 mq}{2r}$

46) புள்ளி ஒலிமுதலொன்று மாறா வெப்பநிலையிலுள்ள சூழலில் மாறா மீடிறனுடைய ஒலியை ஒலித்துக்கொண்டு புவியீர்ப்பின் கீழ் விழுகின்றது. அதற்கு நிலைக்குத்தாக தரை யிலுள்ள அவதானி பெறும் அலைமுகம் யாதாக இருக்கும்?




47) காட்டப்பட்டுள்ள செயற்பாட்டு விரியலாக்கியில் நிரம்பல் வோல்ற்றளவு±5V ஆகும். திறந்த தடநயம் $10^5$ ஆகும். R இன் பெறுமானம் பூச்சியத்திலிருந்து பெரிய பெறுமானம் வரை படிப்படியாக அதிகரிக்கப்ப டுகின்றது. R உடன் பயப்பு வோல்ற்றளவு $V_o$ இன் மாறலைத் திறம்பட காட்டும் வரைபு







48) காட்டப்பட்டுள்ள மின்சுற்றில் ஆளி S மூடப்பட்டிருக்கும் போதும் திறக்கப்பட்டிருக்கும்போதும் கலத்தினூடான மின்னோட்டம் மாறவில்லை எனின் தடையி R இன் பெறுமானம்




(1) 2 Ω (2) 3 Ω (3) 4 Ω
(4) 6 Ω (5) 8 Ω

49) V வேகத்துடன் இயங்கும் துப்பாக்கிச் சன்னமொன்று சன்னத்தின் திணிவின் n மடங்கு திணிவுடையதும் ஆரை r உடையதும் மையத்திற்கூடாகச் செல்லும் ஒப்பமான நிலைக்குத்து அச்சு பற்றி கிடையாக சுழலக்கூடிய சில்லொன்றின் பரிதியில் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு கிடையாக மோதி அதனுள் புதைகின்றது. சில்லின் ஆரையுடன் ஒப்பிடும் போது புதையும் தூரம் புறக்கணிக்கத்தக்க அளவு சிறியதாகும். சன்னத்தின் வேகத்தின் திசைக்கும் ஆரைக்கும் இடைப்பட்ட கோணம் θ எனின் தொகுதியின் கோண வேகம்
(சில்லின் சடத்துவத்திருப்பம் $I = \frac{1}{2}Mr^2$ )




(1) $\frac{2V\sin\theta}{(n+2)r}$ (2) $\frac{2V\cos\theta}{(n+2)r}$ (3) $\frac{2V}{(n+2)r}$ (4) $\frac{V\sin\theta}{(n+2)r}$ (5) $\frac{2V\tan\theta}{(n+2)r}$

50) நீளம் 1m உம் திணிவு 200g ஐயும் உடைய PQ எனும் சீரான கடத்திக்கோல் நிலைக்குத்து நீண்ட கடத்தி தண்டவாளம் வழியே வழுக்கிச்செல்ல முடியும். R ஆனது 0.5Ω உடைய தடையி ஆகும். காந்தப்பாயவடர்த்தி 0.5T உடைய சீராக கிடையான புலம் தண்டவாளத்தின் தளத்திற்குச் செங்குத்தாகும். நேரம் t = 0 இல் கோல் PQ விழவிடப்ப டுகின்றது. நேரம் t=1 s இல் ஆளி S மூடப்படுகின்றது. மொத்த இயக்கத்திற்கான வேக(V)-நேர(t) வரைபு (தண்டவாளம், கோல் ஆகியவைகளின் தடையைப் புறக்கணிக்க)







◆◆◆

# கூட்டு எதிர்க்கட்சி அமைச்சரவையை நியமிக்கவில்லை



## மகிந்த ராஜபக்ஷ மறுப்பு

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நிழல் அமைச்சரவையை நியமிக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுப்பு தெரிவித்துள்ளார். அமைச்சுக்களை கண்காணிக்க உறுப்பினர்களை மட்டுமே நியமித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். வென்னப்புவ பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-5)

# 3 அரசியல் பிரமுகர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை?

(கொழும்பு)

நாட்டின் முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் இந்த மூன்று முக்கியஸ்தர்களுக்கு எதிராகவும் உயர் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் இது குறித்து வார இறுதி பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட குற்ற விசாரணைகளில் மூன்று விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்த விசாரணைகள் பூர்த்தியானதன் பின்னர் குறித்த மூவருக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னாள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் எதிராக இவ்வாறு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ள மூன்று பேரில் ஒருவர் கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் அமைச்சரவை அமைச்சராக பதவி வகித்த வடமேல் மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இந்திய எதிர்ப்புக்கு மத்தியில் பாகிஸ்தான்

# போர் விமானங்களை வாங்குகிறது இலங்கை

இலங்கை விமானப்படைக்கு பாகிஸ்தானிடம் இருந்து பத்து ஜே.எவ்-17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக விரைவில் முடிவெடுக்கப்படவுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக்கொள்வனவு உடன்பாடு குறித்த பேரங்களைக் கையாள்வதற்காக பிரிகேடியர் முகமட் பசீர் என்ற இராணுவ அதிகாரியை, பாகிஸ்தான் அரசாங்கம் கொழும்பில் தங்க வைத்துள்ளது.

இந்த விமானக் கொள்வனவு உடன்பாட்டில் நிதி ஏற்பாடுகள் குறித்த விடயமும் உள்ளடங்கியிருப்பதாகவும் இந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதும் 2017 ஆம் ஆண்டு ஜே.எவ்-17 போர் விமானங்கள் இலங்கை விமானப்படைக்கு விநியோகிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, கடந்த ஜனவரி மாதம், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது இந்த உடன்பாடு கையெழுத்திடப்படுவதாக இருந்தது.

தலா 35 மில்லியன் டொலர் பெறுமதியான 10 ஜே.எவ்-17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் இந்த உடன்பாட்டை பாகிஸ்தான் கடன் திட்டத்தின் கீழ் கையெழுத்திடவும் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், இந்தியாவின் எதிர்ப்பு மற்றும் அழுத்தங்கள் காரணமாக இந்த திட்டத்தை இலங்கை அரசாங்கம் இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நுளம்பு பெருகக்கூடிய வகையில் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக அது குறித்து அடையாளம் காணப்படும் சந்தர்ப்பத்திலேயே வழக்குத் தொடர்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னைய பரிசோதனை நடவடிக்கைகளின் போது சூழலை துப்புரவு செய்யுமாறு விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றாமையின் காரணமாக இத்தகைய தீர்மானத்திற்கு வர நேரிட்டுள்ளதாக அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரசிலா சமரவீர தெரிவித்தார்.

இதன் பிரகாரம் எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை டெங்கு காய்ச்சல் பரவியுள்ள 8 மாவட்டங்களை கேந்திரமாகக் கொண்டு திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், கண்டி, காலி, மாத்தறை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் டெங்கு நுளம்புகள் தொடர்பில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### உங்கள் நிலைமை புரிகிறது

அட நீ ஒண்ணு! என் நிலைமை புரியாமல் பேசிக்கிட்டிருக்கியே! என்பது தான் பலரது புலம்பலாக இருக்கிறது.

தங்கள் கஷ்டங்களை உணர்ந்து பாராமல் இவர்கள் மட்டும் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறார்களே என்கிற எரிச்சல், பல காரியங்களைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடுகிறது.

நாம் கஷ்டப்படும் போது நம்மைப் பார்த்து மற்றவர்கள் இரக்கப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது மனித சுபாவம்.இதற்கு விதிவிலக்குகள் இருக்கலாமே தவிர, பெரும்பான்மையினர் அப்படி இருந்து விட முடியாது.

கடன் வாங்குவதாகட்டும் மற்றக் காரியங்களைச் சாதித்துக் கொள்வதாகட்டும் –உங்கள் நிலைமை எனக்குப் புரியாமல் இல்லை. இருப்பினும் உதவினால் –உதவ முடிந்தால் மிக நல்லது என்கிற தொனி வரும் வகையில் நாம் அணுகினால் நடக்காததும் நடக்க வாய்ப்பிருக்கிறது. சாத்தியமற்றவற்றிற்கும் சாத்தியக் கூறுகள் உருவாகும்.

பாவம்! நம் நிலைமையை உணர்ந்தும் கேட்கிறார்கள்.காரணம், இவர்களுக்கு வேறு வழியில்லை என்பதான நினைப்பை நாம் அவர்களிடத்தில் ஏற்படுத்திவிட்டால் , அது காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் வெற்றிப்படிக்கட்டுக்களில் நாம் முதலடி எடுத்து வைத்து விட்டோம் என்று பொருள்.

அச்ச உணர்வுகளுக்கும் இரக்க உணர்வுகளுக்கும் எப்போதுமே காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் ஆற்றல் அதிகம்.ஆனால் அச்ச உணர்வுக்கு வலிமை சற்றுக் குறைவு. காரணம், பலர் பல விடயங்களில் நிமிர்ந்துவிடுவார்கள். என்னையா மிரட்டுகிறாய்? உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள்! என்பார்கள்.

ஆனால் இரக்க உணர்வை ஏற்படுத்திக் காரியத்தைச் சாதித்துக் கொள்வது இருக்கிறதே, இது நூற்றுக்குத் தொண்ணூறு பேர் விடயத்தில் சாத்தியம். காரணம், இரக்கம் என்பது மாபெரும் மனித பலவீனம்.அதைப் புத்திசாலிகள் சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு முறையும் ஒரே ஆளிடம் உங்கள் நிலைமை எனக்குப் புரியாமல் இல்லை என்று ஒரே மாதிரிச் சொல்லிக் கொண்டிருந்தால் அவர்கள் விழித்துக் கொள்வார்கள். எனவே ஒவ்வொரு முறையும் அப்படிச் சொல்வதை விட்டுவிட்டுச் சாராம்சத்தை மட்டும் சொல்ல வேண்டும்.

உங்களுக்கு ஏற்கனவே நிறையச் செலவு. இதில் நான் வேறு உங்களைத் தொல்லைப் படுத்த வேண்டிய கட்டாயம் உருவாகிவிட்டது.

நீங்கள் நேரமற்றவர்.நான் வேறு உங்கள் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறேன் என்பன போல் வார்த்தைகளைச் சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற் போல் சேர்த்துக் கொள்ள வேண்டும்.கீறல் விழுந்த இசைத் தட்டு மாதிரி ஒன்றையே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

எடுத்த எடுப்பிலேயே நாம் உதவி கோரி அணுகுவதால் அவர்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்ட நஷ்டங்களைச் .சொல்லிப் பிறகே விண்ணப்ப மனுவை முன்வைக்க வேண்டும்.

இப்படியெல்லாம் திட்டமிட்டு நாடகம் போட்டு அணுகும் போது –விடயங்களை சினிமா வசனம் ஒப்புவிப்பது போல் ஒப்புவிக்காமல் அவர்களின் சிரமங்களை உணர்ந்து பார்க்க வேண்டும்.

அப்படி உணர்ந்தபிறகு, அணுகத்தான் வேண்டுமா என்று ஒரு கணம் எண்ணவும் வேண்டும்.

நம் அணுகு முறையில் இந்த உணர்வு சிறிதளவும் இல்லாவிட்டால் நாளடைவில் நாம் வாய்ச் சாதுரியத்தால் பிழைக்கிறவர்கள் என்கிற பேர் உருவாகிவிடும்.

இதைவிட வேறு வினையே வேண்டாம்.!

**லேனா தமிழ்வாணன்**











தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாடு அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்றபோது...







IIS CITY CAMPUS நிறுவனத்தின் 20 ஆவது நிறுவன தினமும் பட்டமளிப்பு விழாவும் அண்மையில் HNB METRO Branch பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி குலரட்ணம் விக்னேஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சர்வதேச கல்வி நடவடிக்கைகள் பிரதித் தலைவர் கலாநிதி டொன் பிரசாத் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் எம்.ஜெறோ செல்வநாயகமும் கௌரவ விருந்தினராக பேராசிரியர் தி.வேல்நம்பியும் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழ் சினிமா வரலாறு

## மேல் நாட்டு பாணியில் சிவாஜி எடுத்த 'புதியபறவை'

203



இருவர் உள்ளம் ப்டத்தில் சிவாஜியும் சரோஜாதேவியும்

ராஜசுலோசனாவை திருமணம் செய்ய வேண்டிய அண்ணன் (படித்தவன்) சாவித்திரியையும் சாவித்திரியைத் திருமணம் செய்ய வேண்டிய தம்பி (படிக்காதவன்) ராஜசுலோசனாவையும் (ஆள் மாறாட்டம் செய்து) மணப்பதாக கதை.

சாவித்திரியை ஏமாற்றி திருமணம் செய்வது போன்ற இந்தக் கதையில் நான் நடிக்க மாட்டேன் என்று ஜெமினி கணேசன் மறுத்துவிட்டார். ஜெமினி நடிக்க வேண்டிய வேடத்தில் பாலாஜி நடித்தார்.

பெண் ஒன்று கண்டேன் என்ற அற்புதமான பாடலைக் கொண்ட இப் படம் 100 நாட்களைத் தாண்டி ஓடியது.

கைகொடுத்த தெய்வம்

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் டைரக்ஷனில் உருவான படம் கைகொடுத்த தெய்வம்.

இதை சிவாஜி படம் என்று கூறுவதைவிட சாவித்திரி படம் என்று கூறுவதே பொருத்தம். வெகுளிப் பெண் வேடத்தில் நடிப்பின் சிகரத்தை சாவித்திரி தொட்டார். இதில் சிவாஜி வெகு இயல்பாகவே நடித்திருக்கிறார். மற்றும் எஸ்.எஸ்.ராஜேந்திரன், கே.ஆர்.விஜயா, ரங்காராவ், எம்.ஆர்.ராதா ஆகியோரும் நடித்தனர். இசை:விஷ்வநாதன்-ராமமூர்த்தி.

குலமகள் ராதை

சிவாஜியுடன் சரோஜா தேவி, தேவிகா ஆகியோர் இணைந்து நடித்த படம் குலமகள் ராதை. அகிலன் எழுதிய கதைக்கு ஏ.பி.நாகராஜன் வசனம் எழுதினார்.

கே.வி.மகாதேவன் இசையில் மிகச் சிறந்த பாடல்கள் இடம் பெற்ற வெற்றிப்படம்.

இரத்தத்திலகம்

இந்தியா - சீனா போரை மையமாக வைத்து பஞ்சு அருணாசலம் தயாரித்த படம் இரத்தத்திலகம். வசனங்களை கண்ணதாசன் சிறப்பாக எழுதியிருந்தார்.

இதில் சிவாஜிக்கு ஜோடி சாவித்திரி. ஆங்கிலத்தில் இடம் பெற்ற ஒத்தெல்லோ என்ற ஓரங்க நாடகம், படத்தின் சிறப்பு அம்சமாக அமைந்தது. கண்ணதாசன் பழைய மாணவராகத் தோன்றி ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு என்ற பாடலைப் பாடினார். படம் வெளிவந்த போது, யுத்தம் முடிவடைந்து, சமாதான சூழ்நிலை நிலவியது. எனவே, படம் பிரமாதமாக ஓடவில்லை.

இருவர் உள்ளம்

பிரசாத் மூவிஸ் தயாரித்த இருவர் உள்ளம், பிரபல நாவலாசிரியை லட்சுமி எழுதிய பெண் மனம் என்ற கதை அதற்கு மு.கருணாநிதி வசனம் எழுதினார்.

படத்தை எல்.வி. பிரசாத் டைரக்ட் செய்தார்.

மனோகரா படத்துக்கு பிறகு சிவாஜி - கருணாநிதி - எல்.வி.பிரசாத் என்ற மூவர் கூட்டணி இடம்பெற்ற படம் இது. படம் மிக இயற்கையாக பெண்களைக் கவரும் வண்ணம் அமைந்திருந்தது. கே.வி. மகாதேவன் இசையில் பாடல்கள் சிறப்பாக ஒலித்தன.

பார் மகளே பார்

கஸ்தூரி பிலிம்ஸ் சார்பில் வி.சி.சுப்பராமன் தயாரித்த படம் பார் மகளே பார்.. ஆரூர்தாஸ் வசனம் எழுதிய. இப் படத்தை பீம்சிங் டைரக்ட் செய்தார்.

இதில் சிவாஜிகணேசனுக்கு ஜோடி சவுகார்ஜானகி, விஜயகுமாரியும் புஷ்பலதாவும் மகள்களாக நடித்தனர்.

இந்த இருவரில் ஒருவர் மட்டும் தான் தன் மகள் என்று பிறகு சிவாஜிக்கு தெரிகிறது. தன் சொந்த மகள் யார் என்ற மனப் போராட்டத்தை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார்.

ஆயினும்சிவாஜியின் உண்மை மகள் யார் என்ற புதிருக்கு கடைசி வரை விடை தரப்படாததால்,படம் நூறு நாட்களை மட்டுமே எட்ட முடிந்தது.

பேரறிஞர் அண்ணா எழுதிய சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகத்தில் சிவாஜியாக நடித்ததால் வி.சி.கணேசன் சிவாஜி கணேசன் என்று புகழ் பெற்றார்.

பின்னர் ராமன் எத்தனை ராமனடி என்ற படத்தில் ஓரங்க நாடகத்தில் சிவாஜியாக நடித்தார். பக்த துக்காராம் என்ற தெலுங்குப் படத்திலும் சிவாஜி வேடத்தில் நடித்தார். ஆயினும், சத்ரபதி சிவாஜியின் வாழ்க்கை முழு நீளத் திரைப்படமாகத் தயாரிக்கப்படவில்லை.

(தொடரும்)

# மீண்டும் வாக்கெடுப்புக்கு இங்கிலாந்து நிராகரிப்பு

(லண்டன்)

**ஐரோப்பிய யூனியனில் நீடிப்பது தொடர்பான விவகாரத்தில் மீண்டும் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை இங்கிலாந்து அரசு நிராகரித்துவிட்டது.**

ஐரோப்பிய யூனியனில் இங்கிலாந்து தொடர்ந்து நீடிக்கலாமா? அதிலிருந்து வெளியேறலாமா? என்பது குறித்து கடந்த மாதம் 23 ஆம் திகதி அந்நாட்டு மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் வெளியேறலாம் என்று 52 சதவீ தம் பேரும், நீடிக்கலாம் என 48 சதவீதம் பேரும் வாக்களித்தனர்.

இதைத்தொடர்ந்து பெரும்பான்மை மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப ஐரோப்பிய யூனியனில் இருந்து விலகுவதற்கு இங்கிலாந்து அரசு முடிவு செய்தது. என்றபோதிலும், பொதுவாக்கெடுப்பின் முடிவை இங்கிலாந்து அரசியல்வாதிகள் சிலரால் ஏற்க முடிய வில்லை.

நிராகரிப்பு

இவர்கள், சில அமைப்புகளுடன் இணைந்து ஐரோப்பிய யூனியனில் நீடிப்பது தொடர்பாக மீண்டும் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். பதிவான மொத்த வாக்குகளில் ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறுவதற்கு தேவையான 60 சதவீத வாக்கு கிடைக்காததால் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யும் வகையில் புதிய சட்டவிதியை இணைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்த இவர்கள் இணைய தளம் வாயிலாக இதற்காக 41 இலட்சம் பேரிடம் ஆதரவும் திரட்டினர்.

எனினும், புதிய வாக்கெடுப்பு கோரிக்கையை இங்கிலாந்து அரசு நிராகரித்துவிட்டது. இதுபற்றி அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இங்கிலாந்து பாராளுமன்றம் வகுத்த சட்ட விதிமுறைப்படிதான் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. எனவே, இந்த சட்டத்தை மதிக்க வேண்டும். குறைவான சதவீத மக்களே வாக்களித்தனர் என்பதை காரணம் காட்டி மீண்டும் தொடக்க நிலைக்கு செல்லக்கூடாது. அரசும், பிரதமரும் இது ஒரு தலைமுறையின் வாக்கு என்பதால் அந்த தீர்ப்பு மதிக்கப்படவேண்டும் என்று கூறியிருக்கின்றனர்.

பொதுவாக்கெடுப்பின்படி ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறுவதற்கு நாம் தயாராகவேண்டும். இதில், இங்கிலாந்து மக்களுக்காக பேச்சுவார்த்தை நடத்தி சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு அரசு உறுதி கொண்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

# கலவர பூமியான காஷ்மீர்

## துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் பலி! அரச அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு தீ வைப்பு



ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்க தளபதி சுட்டுக்கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, காஷ்மீரில் கடந்த வெள்ளிக்கிழமை தீவைப்பு, கல்வீச்சு போன்ற வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் பலியானார்கள். வன்முறைச் சம்பவங்களில் பாதுகாப்பு படையினர் உட்பட 126 பேர் படுகாயம் அடைந்தனர்.

காஷ்மீர் மாநிலம் அனந்தநாக் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு படையினருடன் நடந்த மோதலில் ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்க தளபதி பர்கான் வானியும், அவருடைய கூட்டாளிகள் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரிவினைவாத அமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை காஷ்மீரில் முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்து இருந்தனர். இதனால் இந்த அமைப்புகளின் தலைவர்களான சையத்அலிகிலானி, சபீர் அகமது ஷா ஆகிய இருவரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

இதற்கிடையே பர்கான் வானியின் உடல் புல்வாமா மாவட்டத்தில் உள்ள அவருடைய சொந்த ஊரான டிரால் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை அடக்கம் செய்யப்பட்டது. இதில் 40 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

பாரமுல்லா நகரில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பர்கான் வானிக்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பிக் கொண்டே ஊர்வலமாக செல்ல முயன்றனர். அவர்கள் தேக்சில் வீதி பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டனர். அப்போது பாதுகாப்புப் படையினர் மீது வன்முறைக் கும்பல் சரமாரியாக கற்களை வீசி தாக்கியது. இதனால் அவர்கள், அந்த கும்பலை தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் விரட்டியடித்தனர்.

பண்டிபோராவில் வன்முறைக் கும்பல் எல்லை பாதுகாப்பு படையின் பதுங்கு குழிக்கு தீவைக்க முயன்ற போது பாதுகாப்பு படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அவர்களை விரட்டினர்.

அனந்தநாக் மாவட்டத்தின் பண்டிபோரா, குவாசிகுந்த், லார்னு ஆகிய பொலிஸ் நிலையங்களை வன்முறைக் கும்பல் கற்களை வீசி தாக்கியது. குவாசிகுந்த் பகுதியில் 3 பேருந்துகள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

குல்காம் நகரில் பா.ஜனதா அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டது. அச்சாபால், தம்ஹால், ஹன்ஜிபோரா ஆகிய பொலிஸ் நிலையங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டன.

குந்த் என்னும் இடத்தில் பொலிஸ் சோதனைச் சாவடிக்கு வன்முறைக் கும்பல் தீ வைத்தது. இந்தச் சம்பவங்களில் 3 பொலிஸாரை காணவில்லை. அவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவரவில்லை. இதேபோல் புல்வாமா மாவட்டத்தில் உள்ள டிரால் நகரில் 2 அரச அலுவலகங்கள் போராட்டக்காரர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டன.

மாநிலத்தின் பல்வேறு இடங்களில் நடந்த வன்முறை, கல்வீச்சு சம்பவங்களில் 96 பொலிஸாரும், பொலிஸ் துப்பாக்கிச்சூடு மற்றும் தடியடியில் பொதுமக்களில் 30 பேரும் படுகாயம் அடைந்தனர். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 775

Search for people, places and things | Nagendram Home

விதுசன் லொலிப்பப்

சரித்திரத்த திருப்பி பாத்தா அது
எனக்கு கத்துகுடுத்தது ஒன்றே ஒன்றைத்தான்
நாம வாழணும் எண்டா
நேரா நேரத்துக்கு சாப்பிடணும்...



அச்சு



ஹஹஹஹா....
கண்ணா எல்லாருக்கும்
பிடிச்சவனா நடந்துக்கணும்னா
மனுசனா பிறக்கக்கூடாது...
பணமாத்தான் பிறக்கணும்...

ஜீவி

ரி.வியில சோப் விளம்பரத்தில குழந்தை
அழுக்கா வந்தா அம்மா சிரிச்சிட்டே
சட்டையை துவைக்கிறாங்க...



நான் குழந்தையா இருந்தப்போ எல்லாம் அழுக்கா
வந்தா முதல்ல என்ன துவைச்சுட்டுத்தான்
எங்கம்மா சட்டையவே துவைப்பாங்க...!

ரஜீவன்

ராத்திரி புரண்டு புரண்டு படுத்தாலும்
தூக்கம் வர்றது இல்ல...
காலையில எந்த பொசிஷன்ல
படுத்தாலும்
தூக்கம் வருது...



வின்ஜக்சன்



யோசித்துப்பார்,
நாம் வாழ்ந்து கொண்டிருக்கும்
வாழ்க்கை வரமெனப்புரியும்...

சுஜிசிவா



காலையில எழுந்தவுடனே பேஸ்புக் போலாமா
வைபர் போலாமானுதான் தோணுது...
வேலைக்குப் போகணும் என்று ஏன் தோன்ற
மாட்டேங்குது!!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வெலே சுதா தொடர்பில் மீண்டும் விசாரணைகள்

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகரான வெலே சுதாவின் குற்றங்கள் தொடர்பில் புதிய விசாரணைகள் முன்னெடுக் கப்படவுள்ளன.

இதனடிப்படையில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆகியோரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குற்றப்புலனாய்வுத்துறையினர் இந்த விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன்படி முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஒருவருக்கு வீடு ஒன்றை அமைக்க வெலே சுதா பணம் வழங்கியமை மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் வெலே சுதாவுக்கு இருந்த போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஏனைய குற்றத் தொடர்பு என்பன தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (இ-5)

# முன்பள்ளி ஆசிரியருக்கு காதலால் ஏற்பட்ட விபரீதம்

புத்தளத்தில் 24 வயதான யுவதிக்கு அடையாளம் தெரியாத நபர் எடுத்த தவறுதலான தொலைபேசி அழைப்பு கிடைத்துள்ளது. இதனையடுத்து இருவரும் மீண்டும் தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளனர். இந்த தொடர்பு இவர்களுக்கு இடையில் காதலாக மாறியுள்ளது.

நீண்டகாலமாக தொலைபேசியில் உரையாடி வந்த இவர்கள் வெளியில் சந்திப்பது என தீர்மானித்துள்ளனர்.

தொலைபேசி மூலம் அறிமுகமான நபர், புத்தளத்தில் தான் ஒரு ஹோட்டலில் பணிபுரிவதாக கூறி அந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பல நாட்கள் இவர்கள் இந்த ஹோட்டலில் சந்தித்துள்ளனர். இவ்வாறு இவர்கள் தொடர்ந்தும் ஹோட்டலுக்கு சென்று வந்துள்ளனர்.

ஒருநாள் குறித்த நபர் யுவதிக்கு பானம் ஒன்றை அருந்த கொடுத்துள்ளார். அதனை பருகிய யுவதிக்கு உறக்கம் ஏற்பட்டுளளது. இதனையடுத்து. நபர் யுவதியின் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலி, 6 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை எடுத்து கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

தப்பியோடிய நபருக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு பிள்ளைகள் இருப்பது பின்னர் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட யுவதி புத்தளம் பரதேசத்தில் உள்ள முன்பள்ளி ஒனறில் ஆசிரியராகப் பணி புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 180 | 90 | 200 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 800 | 800-1000 | 800 | 500 |
| தக்காளி | 230 | 300 | 300 | 240 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 150 | 120 | 120 | 80 | 120 |
| கோவா | 160 | 200 | 200 | 200 | 160 | 180 |
| கரட் | 200 | 400 | 400 | 240 | 280 | 250 |
| பூசணி | 140 | 200 | 200 | 160 | 200 | 140 |
| புடோல் | 120 | 100 | 100 | 120 | 80 | 70 |
| வாழைக்காய் | 140 | 150 | 150 | 120 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 180 | 100 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 110 | 100 | 100 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 260 | 400 | 400 | 240 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 200 | 160 | 160 | 150 |
| பயற்றங்காய் | 120 | 200 | 100 | 140 | 120 | 200 |
| லீக்ஸ் | 150 | 200 | 200 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 150 | 160 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 400 | 400 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 | 400 | 300 | 500 |
| போஞ்சி | 180 | 400 | 200 | 160 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 50 | 180 | 140 | – |
| கீரை – 1பிடி | 30 | 20 | 20 | 30 | 20 | 25 |
| தேசிக்காய் | 180 | 200 | 200 | 160 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 50 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | 400 | 300 | – | – | 160 |
| வெங்காயப்பூ | 200 | 400 | 300 | 240 | 320 | 300 |
| முள்ளங்கி | 50 | 100 | 100 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | 100 | 40 | 80 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை அரசு – விடுதலைப்புலிகள் மீண்டும் சமரசப் பேச்சு 225

விடுதலைப்புலிகள் என்னுடைய யோசனையை ஏற்றுக் கொண்டு ஆசிய நாடுகளில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்பிறகு அரசின் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் சுவிட்ஸர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவா நகரில் 15-02-2006 அன்று முதல் 2 நாட்கள் சந்தித்துப் பேசுவது என்று முடிவு செய்யப்பட்டது.

### விடுதலைப்புலிகள் மறுப்பு

அதற்கான ஏற்பாடுகள் நடந்துவந்த நிலையில், ஜெனிவா பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளமாட்டோம் என்று 05-02-2006 அன்று விடுதலைப்புலிகள் திடீரென்று அறிவித்தனர்.

இதுபற்றி விடுதலைப் புலிகள் தரப்பில் கூறப்பட்டிருந்ததாவது,

ஜெனிவா பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில் விடுதலைப்புலிகள் மிகவும் ஆர்வமாக இருந்தனர். ஆனால் நாட்டின் கிழக்குப்பகுதியில் தமிழர்கள் மறுசீரமைப்பு இயக்கத்தைச் சேர்ந்த 10 பேரை அரசின் துணை இராணுவப்படையினர் கடத்திச் சென்றுவிட்டனர். இதனால் தமிழர்கள் மத்தியில் பீதியும் அதிருப்தியும் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் சமாதான சூழ்நிலையைப் பாதித்து விட்டது. எனவே ஜெனிவாவில் 15.02. 2006 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது இல்லை என்று தீர்மானித்து இருக்கிறோம். 15ஆம் திகதிக்குப் பதிலாக மாதத்தின் இறுதியில் வேறொரு திகதியில் பேச்சுவார்த்தையை வைத்துக் கொள்ளலாம்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் தரப்பில் கூறப்பட்டிருந்தது.

### முட்டுக்கட்டை

ஆனால் மறுசீரமைப்பு இயக்க ஊழியர்கள் யாரும் கடத்திச் செல்லப்படவில்லை என்று அரசு மறுத்தது.

பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளமாட்டோம் என்று விடுதலைப்புலிகள் திடீரென்று அறிவித்து இருப்பதால் சமரச முயற்சியில் முட்டுக் கட்டை ஏற்பட்டது.

### மீண்டும் பேச்சுவார்த்தை

இந்த நிலையில் இரு தரப்பிலும் மீண்டும் சமரசம் செய்து வைக்க ஜப்பானும் நோர்வே நாடும் முயற்சி மேற்கொண்டன. நோர்வே நாடு மேற்கொண்ட முயற்சி வெற்றி அடைந்து சுவிட்ஸர்லாந்து நாட்டின் தலைநகர் ஜெனிவாவில் பேச்சுவார்த்தையை நடத்த முடிவானது.

இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகள் தரப்பில் அதன் அரசியல் பிரிவு தலைவர் எஸ்.பி. தமிழ்ச்செல்வன் தலைமையில் 12 பேர் கொண்ட குழு சென்றது. இந்தக் குழுவினருடன் லண்டனில் வசிக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கமும் கலந்து கொண்டார். அரசாங்கம் சார்பில் முன்னைய சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் 3 அமைச்சர்கள் கொண்ட குழு சென்றது.

### திடீர் சிக்கல்

பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு 3 1/2 மணி நேரத்துக்கு முன்னதாக நாட்டில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒரு இராணுவ முகாமில் இருந்து 500அடி தூரத்தில் இருந்த விடுதலைப்புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடத்தினார்கள். இதில் விடுதலைப் புலி வீரர் ஒருவர் பலியானார்.

இதனால் சமரசப் பேச்சுவார்த்தை தொடங்குமா? அரசாங்கம் உண்மையிலேயே சமரசப் பேச்சுவார்த்தையை விரும்புகிறதா? என்ற சந்தேகம் தமிழ் மக்களிடையே ஏற்பட்டது. ஆனாலும் இராணுவத்தின் தாக்குதலுக்கு இடையேயும் திட்டமிட்டபடி சமரசப்பேச்சு 22-02-2006 அன்று தொடங்கியது.



தூது குழுவினருடன் பாலசிங்கம்

### அச்சம்

பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் மீண்டும் உள்நாட்டு போர் மூளும் என்று பெரும்பாலானவர்கள் அச்சம் தெரிவித்தனர். பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்துள்ள நோர்வே நாட்டு தூதர் எரிக் சொல்ஹெய்ம் நிருபர்களிடம் கூறியதாவது,

பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடைபெறும் என்று இரு தரப்பிலும் சிறிது நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கை மேலும் வ்ளர வேண்டும். ஆனால் அது கீழ் மட்டத்தில் இருந்து தொடங்க வேண்டும்.

இப்போது போர் நிறுத்தத்தை நீடிப்பது தொடர்பாக மட்டுமே பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது. பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### குற்றச்சாட்டு

இதற்கிடையில் சமரசப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னதாக நாட்டில் இராணுவத்தினர் நடத்திய தாக்குதல் குறித்து விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டினார்கள்.

போர்வேண்டுமா, அமைதி வேண்டுமா என்பதை இந்தப் பேச்சுவார்த்தை முடிவு செய்யும் என்று அவர்கள் கூறினார்கள்.

ஆனால் அரசாங்கம் கேட்பது போல் போர்நிறுத்தத்தை தொடர முடியாது என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் தெரிவித்தார். போர் நிறுத்தம் நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தம். சமாதான பேச்சுவார்த்தைக்கு நல்லகருவி. இரு தரப்பிலும் விரோதத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நல்ல இணக்கமான சூழ்நிலை உருவாகவும் சமரசப் பேச்சு நடைபெறவும் உதவக் கூடிய கருவி என்று அவர் கூறினார்.

கொழும்பில் இராணுவத்தலைமை நிலையத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய மனித வெடிகுண்டுத் தாக்குதலில் முன்னைய இராணுவத்தளபதி சரத் பொன்சேகா உயிர் தப்பினார். இந்தச் சம்பவத்தில் 10 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.

அடுத்தகட்ட பேச்சுவார்த்தை 19-04-2006 அன்று நடைபெறுவதாக இருந்தது. பின்னர் அது 24ஆம் திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டது.

### நோர்வே தூதர் சந்திப்பு

இதற்கான ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பாக நோர்வே சிறப்புத் தூதர் ஜான் ஹன்சென் பியூர் கொழும்பு வந்தார். அங்கு 20-04-2006 அன்று நாட்டின் முன்னைய பிரதமர் ரட்ண சிறி விக்ரமநாயக்க, முன்னைய வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். (தொடரும்)

# லாபமா? மனிதமா?

### தொழில் ரகசியம்

பரிசு வழங்கியும், பாராட்டு கூறியும், வாழ்த்துக் கூறியும், நிகழ்வுகளை கொண்டாடியும் நிறுவன நபர்களை நேர்கோட்டிற்கு கொண்டு வருவதால் நிறுவனம் ஒரே திசையில் பயணிக்க வாய்ப்புகள் அதிகம். பணியாளர்களை நம்புங்கள். ஒன்றாக உணவு அருந்தி செலவிடும் சில நிமிடங்களில் நம்பிக்கையை வளப்படுத்துங்கள். விலையில்லா இந்த விளம்பரம் விண்ணை முட்டும் பயன் தரும்.

BUFFER என்ற நிறுவனம் நம்பகத்தன்மைக்கும்,வெளிப்படை செயல்பாடுகளுக்கும் சரியான முறையில் மற்றவர்களின் உரிமைக்கு மதிப்பளித்தும் செயல்பட்டு வந்தது. ஆண்டிற்கு 60 கோடி டொலர்கள் வியாபாரம் செய்தது.

SEVENLY சமுதாய நினைவுகளோடும் தனிதன்மையான வடிவமைப்பும் உள்ள ஆயத்த ஆடை நிறுவனம். ஒவ்வொரு விற்பனையிலும் 7 டொலர்களை லாப நோக்கு அல்லாத நிறுவனங்களுக்கு 43 கோடி டொலர் விற்பனையை எட்டும் வரை தொடர்ந்து செய்து வந்தது.

CLIFBAR பணியாளர்களை மிகவும் மதித்து நலத்திட்டங்களை குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்குவதைப்போல் வழங்கி வந்தது. போட்டிகளுக்கு உதவ பணமும், சுற்றுபுறச் சூழல் மேம்பாட்டுக்கு பண உதவியும், வேறுபட்ட எளிதான வேலை நேரப் பணியில் பின்பற்றபட்டன.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பொதுவான ஒன்று என்ன? எல்லா நிறுவனங்களும் லாபத்தை விட மனிதர்களுக்கும், மனிதத்திற்கும் மதிப்பளித்தன. வாடிக்கையாளர்கள், பணியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பொதுவாக மனிதர்கள் அனைவரையும் லாபம் ஈட்டுவதை விட மிக அதிகமாக மதித்தார்கள். இந்த காரணத்தினால் அதிகபட்ச திறமை, அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாடு உடைய பணியாளர்கள், மீண்டும் மீண்டும் வந்து போகும் வாடிக்கையாளர்கள் என்று ஒவ்வொரு தரவுகளிலும் இந்த நிறுவனங்கள் முத்திரையைப் பதித்தன. பணத்தை விட மனிதர்களை மதித்ததால் வியாபாரமும், லாபமும் தொடர்ச்சியாக மேல் நோக்கியே சென்றன.

டேல் பாட்ரிஜ் என்ற தொழில் முனைவோர் மற்றும் நூலாசிரியர் ஏழு நம்பிக்கைகளை விதைக்கிறார்.

**மக்களே முக்கியம்**

மனிதர்கள் விலைமதிப்பு மிக்கவர்கள். ஒருவரை விட மற்றவர் உயர்வல்ல. ஒவ்வொருவருக்கும் அவரவர் இடம் நிரந்தரம். நிறுவனங்கள் அனைத்துப் பணியாளர்களையும் ஒரே மாதிரியாக நடத்தவும் மதிக்கவும் வேண்டும்.

**வாய்மையே வெல்லும்**

இந்த மூன்று நிறுவனங்களும் உண்மையை முழுமையாகவும், விரைவாகவும், தெளிவாகவும் பகிர்ந்துகொண்டன. அதனால் வாடிக்கையாளர்களும், மூலப் பொருட்களை விற்பவர்களும் இந்த நிறுவனங்களை மேலதிகமாக நம்பினார்கள்.

**ஒளிவுமறைவற்ற தன்மை**

ஒளிவு மறைவற்ற தன்மை குழப்ப எண்ணங்களைத் தவிர்த்து அதிக நம்பிக்கையை வளர்க்கிறது. இது நிறுவனத்திற்குள் மட்டும் அல்ல மாறாக வாடிக்கையாளர்களிடமும்.

**நம்பகத்தன்மை ஈர்க்கும்**

நம்பகத்தன்மை உள்ள நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களைப் பற்றிய செய்திகளை உண்மை தன்மையை மறைக்க மாட்டார்கள். தங்களுடைய கொள்கைகளிலும், திறமைகளிலும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வார்கள், இதன்மூலம் புதுமையைப் படைக்கவும், சந்தையில் தங்கள் பங்களிப்பை நிறுவிக் கொள்ளவும் இயலும். நம்பகத்தன்மை வாடிக்கையாளர்கள், பணியாளர்கள் அனைவரையும் நிறுவனத்தை நோக்கி ஈர்க்கும்.

**தரமே தாரக மந்திரம்**

அனைத்து பணிப் பிரிவுகளிலும் தரம் நம்பகத்தன்மையை வளர்க்கும். நிறுவனத்தின் நம்பகத்தன்மை வாடிக்கையாளர்கள் மீண்டும் மீண்டும் வந்து செல்லும் பொழுது உணரப்படும். அதிக விற்பனைக்கும், வாடிக்கையாளர் அர்ப்பணிப்புக்கும் தரம் மிகவும் முக்கியம். வியாபாரத்தின் அனைத்து முகப்புகளிலும் பெரு வெற்றி பெற தரம் அவசியம்.

**தாராளம் திரும்ப தரும்**

இந்த நிறுவனங்களின் கூறு




கள் தாராளத்தை தாராளமாக காட்டுகின்றன. நிறுவனங்கள் பணியாற்றும் வகையிலும், பணத்தை பரிவர்த்தனை செய்வதிலும் மிகவும் தாராளமாக இருந்ததால் நிறுவனம் பற்றிய ஒரு நல்ல அபிப்ராயம் உருவானது. லாபநோக்கு இல்லாத நிறுவனங்களுக்கு கொடுத்ததிலோ, போட்டிகளுக்கு உதவி தொகை வழங்கியதிலோ, சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தியதிலோ, ஏழாண்டிற்கு 2 மாத சம்பள விடுப்பு கொடுத்ததிலோ தாராளத்தை எந்த இடத்திலும் அவர்கள் சுருக்கவில்லை.

**தைரியம் நிலைக்கும்**

எவ்வளவு கடினமான மோசமான முடிவுகளாக இருந்தாலும், பணியாளர்கள் வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் விற்பனையாளர்கள் தொடர்பான மிகச்சரியான சிறந்த முடிவுகளை மட்டுமே அர்ப்பணிப்போடு மேற்கொண்டதால் பணத்தை பற்றியோ, நம்பகத்தன்மையை வளர்ப்பதிலோ இந்த நிறுவனங்கள் குறை வைக்கவில்லை. மாறாக ஆக்கபூர்வமான பாதையில் பயணம் செய்தன.

நூலாசிரியர் கூறியதை போல் மனிதமா, லாபமா என்ற கேள்விக்கு மனிதமே என்ற விடையாக இருந்தால் மேலே சொன்ன ஏழு நம்பிக்கைகளும் துருவ நட்சத்திரங்களாகும். பொய்யும், தரமில்லாத பொருட்களும், திருப்தி இல்லாத பணியாளர்களும், நம்பிக்கையில்லாத வாடிக்கையாளர்களும், ஏமாற்றப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில் உள்ள விற்பனையாளர்களும் நிறுவனத்தின் ஒவ்வொரு செங்கலையும் உருவி எடுக்கும் நேரத்திற்காக காத்திருப்பார்கள். அதைத் தவிர்க்க இந்த ஏழு நம்பிக்கைகளை விதைத்து அவற்றைப் பின்பற்றினால் நீண்ட கால அடிப்படையில் வெற்றியும், சாதனையும் ஒன்றை ஒன்று மிஞ்சும். குறிக்கோளான நிறுவனம் என்ற பெயர் எஞ்சும்.

**மனிதத்திற்கான வழிமுறைகள்?**

நீண்ட கால அடிப்படையில் ஒருமித்த நிறுவனங்களை பின் தள்ளி முகட்டிலே முன்நிற்கும். உங்கள் நிறுவனத்தில் எவ்வாறு நீங்கள் இது போன்ற நம்பிக்கையை ஏற்படுத்தி மனிதத்தை லாபத்திடம் இருந்து பிரிக்கிறீர்களோ அப்போது உங்களின் வெற்றி உறுதி செய்யப்படுகின்றது. நிறுவனம் பற்றிய செய்திகளை முகநூலிலும், வலைதளங்களிலும் பகிர்ந்து கொள்ளலாம். தனிப்பட்ட திறன் மேம்பாட்டுக்குத் தனி கவனம் செலுத்த வேண்டும். நிறுவனத்திற்குள் ஊழியர்களை ஊமைகளாக மாற்றாமல் பல்லும், பலமும் தரும் மனிதர்களாக மாற்றுதல் அவசியம். வாடிக்கையாளர்களும், விற்பனையாளர்களும் ஒளிவு மறைவற்ற ரகசியம் இல்லாத தொழிலாளர்களிடம் எளிதில் தங்களை இணைத்துக் கொள்வார்கள். நீங்கள் மனிதர்களை மட்டும் மாற்றவில்லை வியாபாரத்தையும் மாற்றுகிறீர்கள்.

**மனிதத்தை விதைத்தல்?**

மாதம் ஒரு நாளோ ஏதேனும் ஒரு நாளோ யாரேனும் ஓரிருவரை அழைத்துப் பேசுங்கள். ஒன்றாக உணவு உண்ணுங்கள். பரிசு வழங்கியும், பாராட்டு கூறியும், வாழ்த்துக் கூறியும், நிகழ்வுகளை கொண்டாடியும் நிறுவன நபர்களை நேர்கோட்டிற்கு கொண்டு வருவதால் நிறுவனம் ஒரே திசையில் பயணிக்க வாய்ப்புகள் அதிகம். பணியாளர்களை நம்புங்கள். ஒன்றாக உணவு அருந்தி செலவிடும் சில நிமிடங்களில் நம்பிக்கையை வளப்படுத்துங்கள். விலையில்லா இந்த விளம்பரம் விண்ணை முட்டும் பயன் தரும். இதில் கூறப்பட்டுள்ள அனைத்துக் கருத்துகளும் ஏதோ நாளை காலை உலகே மாறி வண்ண விளக்குகளால் ஜொலித்து வசந்த காலம் வந்ததை போல எண்ணிக் கொள்ளக் கூடாது.

ஏதோ அனைத்து நிறுவனங்களுக்கும் சர்வரோக நிவாரணியாக ஏழு விதிகளையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஒவ்வொரு நிறுவனமும் தனித்தன்மை வாய்ந்தது. ஒவ்வொரு தொழில்முனைவோரும் நிறுவன தலைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. உணவு உண்பதால், உணர்வு பிரச்சினைகள் வடிகால் தேடி வழிந்துவிடும் என்று தவறாக கொள்ளக் கூடாது. மாறாக நிறுவனத்தோடும் பணியாளர்களோடும், வாடிக் கையாளர்களோடும், விற்பனையாளர்களோடும் ஒவ்வொரு தொழில் முனைவோரும், நிறுவன தலைவரும் தங்களை சரிசமனாக நிலை நிறுத்தி முறையான ஆய்விற்கு பிறகு ஏழு விதிகளையும் மொத்தமாகவோ, முனையுங்கள் முயற்சியுங்கள். முன்னேறுங்கள். முனைப்பாக வெற்றி வழி சென்று வெற்றியை சேருங்கள்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,287.09 | 6,366.31 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,302.51 | 3,363.27 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 2,457.901 |

**உயர்வைற்றபங்குகள்(ரூ)** ஏசிஎல்(58.30), சிலோன் பிறின்டர்ஸ்(82.00), சிலாவ் பினான்ஸ்(18.70), கொழும்பு சிற்றி(625.20),அமனா தகபுல் (0.90)

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** ஜேகேஎச்(W)(7.40), த பினான்ஸ் கோ (X)(3.70),ஏசியா கப்பிரல்(11.50),த பினான்ஸ் கோ(8.10)கொழும்பு சிற்றி (625.20), அமனா தகபுல்(0.90)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## யாழ்.ஐடிஎம் நேசன் கம்பஸில் விளையாட்டு விஞ்ஞான கற்கை ஆரம்பம்

இலங்கையில் கடந்த 35 ஆண்டு காலமாக உயர்கல்வியை இன,மத பேதமின்றி போதித்துவரும் IDM நிறுவனத்தின் யாழ் கிளையில் விளையாட்டு துறையில் Diploma, உயர் Diploma மற்றும் பட்டப் படிப்பை அறிமுகம் செய்கின்றது.இது இலங் கையில் மட்டுமல்ல சர்வ தேசத்திலும் அங்கீகாரம் உடைய பயிற்சி நெறி ஆகும்.

பல முன்னணி பயிற்சிநெறிகளை யாழ் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து தொழிற்சந்தையில் பல தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கு வழி அமைத்துக் கொடுக்கும். IDM நிறுவனமானது, யாழ் விளையாட்டுத்துறையில் பல சாதனைகள் படைத்து திகழும் மாணவர்களுக்கு அவர்கள் தமக்கும் பிடித்தமான விளையாட்டுத்துறையிலேயே Diploma, உயர் Diploma மற்றும் BSc(Hons) in Sports and Coaching போன்ற பயிற்சிநெறிகளை O/L மற்றும் A/L தகைமையுடன் ஆரம்பிப்பதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இப் பயிற்சிநெறி இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பாகும்.

3 வருடங்கள் கொண்ட இப் பட்டப்படிப்பை யாழ்.மண்ணிலேயே பூர்த்தி செய்ய முடியும். அரச தொழில் வாய்ப்புப் பெறுவதிலும் இது முக்கிய பங்கு வகிக்கும். எனவே மாணவர்களாகிய நீங்கள் இவ் அரிய வாய்ப்பினை பயன்படுத்தி உங்கள் எதிர்காலத்தை நீங்கள் விரும்பிய துறையிலேயே தொடர அரிய சந்தர்ப்பம்.

aho ; IDM நிறுவனமானது 216, நாவலர் வீதியில் கடந்த 12 ஆண்டு காலமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 144.32 | 147.96 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 186.06 | 192.55 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.78 | 164.94 |
| சுவிஸ் பிராங் | 146.46 | 152.50 |
| கனேடிய டொலர் | 110.22 | 114.73 |
| அவுஸ்திரேலிய டொலர் | 107.31 | 112.24 |
| சிங்கப்பூர் டொலர் | 106.45 | 110.47 |
| ஜப்பான் யென் | 1.42 | 1.47 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை | 2.15 |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை | 39.54 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# சுவாதி படுகொலை தொடரும் மர்ம முடிச்சு!

*"அழகான உருவத்தை விட அழகான நடத்தையே நல்லது"* இது 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி ராம்குமார் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்த வரிகள்.

எதை நினைத்து இப்படி பதிவிட்டானோ, சென்னையில் கொல்லப்பட்ட சுவாதி கொடூரக் கொலை வழக்கில் கொலையாளியாகிக் கைது செய்யப்பட்டுள்ள ராம்குமாருக்கும் இப்போது இந்த வரிகள் பொருந்துகின்றன.

## சாதித்த சாகசப் பொலிஸ்

ஊடகங்களிலும் வலைத்தளங்களிலும் பத்து தினங்களுக்கு மேலாக இன்னும் விவாதிக்கப்படும் கொலை வழக்கு விசாரணையை அருகிலிருந்து பாரதத பொலிஸ அதிகாரிகளிடம் பேசிய போது நிறைய விபரங்கள் கிடைத்தன. அதில் உள்ள மர்மங்களும் தொடர்ந்தன.

சென்னை சூளைமேடு கங்கை அம்மன் கோவில் தெருவில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருந்த சுவாதியை அதே பகுதியில் உள்ள ஏ.எஸ். தொடர் மாடியில் குடியிருந்த ராம்குமார் கடந்த 24 ஆம் திகதி காலை நுங்கம்பாக்கம் புகையிரத நிலையத்தில் அரிவாளால் வெட்டி படுகொலை செய்தான் என பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லை மாவட்டம் செங்கோட்டைக்கு பக்கத்தில் உள்ள சொந்தக் கிராமமான மீனாட்சிபுரத்தில் ராம்குமார் தனது வீட்டில் பதுங்கியிருக்கிறான் என்பதைக் கண்டறிந்து, மிக இரகசியமாக அந்தத் தகவலைப் பாதுகாத்து, உயரதிகாரிகள் மூலம் அது சம்பந்தப்பட்ட பகுதியின் பொலிஸ் அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டு, ஜூலை முதலாம் திகதி இரவில் பொலிஸ் குழு அங்கே நுழைகிறது.

மாட்டுக்கொட்டகையில் படுத்திருந்த ராம்குமார், பொலிஸாரைப் பார்த்ததும் பயந்துபோய், தன் கழுத்தை துண்டு பிளேற்றால் அறுத்துக் கொண்ட நிலையில், அவனை உயிருடன் பிடித்து, அம்புலன்ஸில் ஏற்றி வைத்தியசாலையில் அனுமதித்து, சிகிச்சையளித்து உயிர் பிழைக்க வைத்து, கொலையாளி என்பதை ஒப்புக் கொள்ளவைத்துள்ளது பொலிஸ் குழு.

சாட்சிகளே இல்லாத நிலையில் புலனாய்வு மூலம தமதிறமையை தமிழக பொலிஸார் நிரூபித்துள்ளதற்கு முதல்வரிலிருந்து பலரும் பாராட்டியுள்ளனர்.

ராம்குமார் பிடிபடுவதற்கு முதல் நாள்வரை, யார் குற்றவாளி என்பதே தெரியாமல் இருந்த நிலையில், அதிகாலை எழுந்து தொலைக்காட்சியைப் பார்த்த போது பொதுமக்களுக்கு, சுவாதி கொலைக் குற்றவாளியை அடையாளம் காட்டி சாகசம் செய்திருக்கும் பொலிஸார் பாராட்டுக்குரியவர்கள்.

## இத்தனை நாட்கள் ஏன்?

சுவாதியின்வீடு உள்ள சென்னை சூளைமேடு பகுதியில் உள்ள தொடர்மாடியிலேயே தங்கியிருந்த ராம்குமாரைப் பிடிக்க 8 நாட்கள் ஏன் என பொலிஸாரிடம் கேட்டதற்கு, அதற்குக் காரணம் சுவாதியின் தந்தை கோபாலகிருஷ்ணன்தான் என்றனர் பொலிஸார்.

புலனாய்வுக்கு சுவாதி குடும்பத்தினர் முழு ஒத்துழைப்பு தந்தனர் என ஊடகங்களிடம் பொலிஸ் சொன்னாலும் ஒரு குடும்பத்தின் மனநிலை இந்த சமூகச் சூழலில் எப்படி இருக்கும் என்பதை பொலிஸார் தங்கள் புலனாய்வின் போது சுவாதி குடும்பத்தார் மூலம் உணர்நதுள்ளனர்.

## உயர்மட்டத் தொடர்புகள்

பிராமண சமூகத்தவரான சுவாதியின் அப்பா கோபாலகிருஷ்ணன், பா.ஜ.கவின் உறுப்பினர் என்கிறார்கள் அவரை அறிந்தவர்கள்.

எச்.ராஜாவுக்கு நெருக்கமானவரும்கூட. பொலிஸின் புலனாய்வுக்கு ஒத்துழைக்க மறுத்த நிலையில், தமிழக முதல்வர் தொலைபேசியில் புகார் தரக்கூடியவராக இருந்திருக்கிறார். அரசு, பொலிஸ், நிர்வாகம் எனப பல மட்டங்களிலும் அவருக்கு சமுதாய ரீதியான தொடர்பும் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.

சுவாதி கொலை பற்றிய தகவல் கிடைத்ததும் தன் வேதனையை அடக்க முயன்றிருக்கிறார். தன் மகளை புகையிரத நிலையத்தில் இறக்கி விட்டுவிட்டு வந்த தந்தை கொலையாளி சுவாதியின் வாயில் வெட்டியிருக்கிறான் என்ற தகவல் அறிந்த கோபாலகிருஷ்ணன், அதுபற்றி தனது பா.ஜ.க நண்பர்களிடம் கூறியுள்ளார்.

நமது கட்சிப்பிரமுகர்கள் இப்படித்தான் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று பா.ஜ.க. நண்பர்கள் சொன்னதும், அந்த கோணத்திலேயே கோபாலகிருஷ்ணனபேச ஆரம்பித்துள்ளார். "எனக்கும் அந்த சந்தேகம் இருக்கிறது" என மனதில் உள்ளதைப் பகிர்ந்துள்ளார்.

சுவாதியின் நட்பும் தந்தையின் சந்தேகமும் - சுவாதியும் சென்னை ஜஸ் அவுஸ் பகுதியில் வசிக்கும் முகம்மது சித்திக்பிலால் மாலிக்கும் ஒன்றாக படிக்கின்ற காலத்திலிருந்தே நல்ல நண்பர்கள். மாமு, மச்சான் என தனது நண்பர்களை அழைக்கும் வழக்கம் கொண்ட சுவாதி பிலாலின் வீட்டிற்கு எந்த நேரத்திலும் இயல்பாகப் போய் வருவதும் அவரது தந்தைக்கு புரிபடாததாகவே இருந்துள்ளது.

பிலாலை சுவாதி காதலிக்கிறாரோ என்று பொறி தட்டியுள்ளது. பிராமண வகுப்பைச் சேர்ந்த சுவாதி இஸ்லாமிய இளைஞருடன் இந்தளவுக்கு நட்பு கொண்டிருபபதை விரும்பாத கோபாலகிருஷ்ணன், இது தன் சுற்றத்தார் மத்தியில் சிக்கலை உண்டாக்கும், சுவாதியின் எதிர்காலத்தையும் பாதிக்கும் எனக் கோபமடைந்து நெதர்லாந்தில் இருக்கும் தன் சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞருக்கு சுவாதியை



திருமணம் செய்ய முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளில் தீவிரமானார்.

சுவாதியோ, "நானும் பிலாலும் நண்பர்கள் தான். எனக்கு நண்பர்களாக உள்ள ஆண்களை மாமு, மச்சான் என்று கூப்பிடுவது ஒரு ஸ்டைல அவ்வளவுதான்" எனச்சொன்னதுடன், அப்பா செய்த திருமண ஏற்பாடுகளுக்கு எந்தவிதமான தடையும் சொல்லவில்லை. திருமண ஏற்பாடுகளுக்கு பிறகு பிலாலை சுவாதி சந்திப்பது சரியாக இருக்காது என நினைத்த கோபாலகிருஷ்ணன் சுவாதியை தனது ஸ்கூட்டரில் அழைத்துக் கொண்டு போய் புகையிரதத்தில் ஏற்றி விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

## பிலாலை விசாரித்த பொலிஸ்

புகையிரத நிலையத்தில் சுவாதி சடலமாகக் கிடந்ததைப் பார்த்த கோபாலகிருஷ்ணன், "உனக்கு எவ்வளவுதான் என்னால் பாதுகாப்பு கொடுக்க முடியும்" என்றபடி பொங்கிவந்த அழுகையைக கட்டுப்படுத்தக் கொண்டார். கொடூரக் கொலை நடந்ததை அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பிலால், அங்கே சுவாதியின் நிலையைக் கண்டு கதறினார்.

ஆனால், பொலிஸின் முதற்கட்ட விசாரணையில் குறிவைக்கப்பட்டவர் பிலால்தான். பொலிஸிடம், தனக்கும் சுவாதிக்குமான பழக்கம் குறித்து பிலால் விளக்கமாகவும் உருக்கமாகவும் சொல்லியிருக்கிறார். தன்னிடம் சுவாதி, "நீயும் நானும் நிரந்தர நண்பர்கள்" என சொன்னதையும், சுவாதி தன்னிடம் ஒளிவுமறைவின்றி பகிர்ந்து கொண்ட தகவல்களையும், தான் சுவாதியிடம் பழகிய விதத்தையும் விளக்கியுள்ளார்.

சுவாதியுடனான நிகழ்வுகள் குறித்து சொல்லும் போதெல்லாம் பிலால் அழுதிருக்கிறார். அதைப் பார்த்த ஜஸ் அவுஸ் பொலிஸ் நிலைய உதவி ஆய்வாளர் பார்த்த சாரதி பிலாலை சுவாதியின் வீட்டுக்கு அழைத்துச் சென்று ஆறுதல் படுத்தியுள்ளார்.

அதன்பின், "நீ சுவாதியை எங்கு சந்தப்பாய்" என பொலிஸார் கேட்க, புகையிரத நிலையத்திற்கு சுவாதி செல்லும் பாதையைக் காட்டியிருக்கிறார். கோபாலகிருஷ்ணன சொன்னதற்கும் பிலால சொன்னதற்கும் மாறுபாடு இருந்துள்ளது. கொலை நடந்த நேரத்தில் ஸ்விட்ச் ஒப் ஆன சுவாதியின் சாம்சங்கலக்சி மொபைல் போன் அதன் பின் ஒன் ஆனது,

சுவாதியின் வீட்டுக்கு அருகே உள்ள ஒரு கட்டடத்தில் இருந்து தான் என ஏற்கனவே பொலிஸார் கண்டுபிடித்து வைத்திருந்த ஒரு தகவலும் சுவாதி நடந்து செல்லும் வழியில் தொடர்மாடி இருந்ததும், பொலிஸாரின் கவனத்தை அதன் பக்கம் திருப்பியது. அங்கு தான் ராம்குமார் தங்கியிருந்தான்.

## சுவாதி குடும்பத்தின் தயக்கம்

"பாவம் கோபாலகிருஷ்ணன்" என்று சுவாதியின் அப்பாவுக்காக இரக்கப்பட்ட அவரது குடும்ப நண்பர்கள், "ஆசையாசையாய் பெரிய பொண்ணுக்கு திருமணம் செய்து வைத்தார். ஆனால் தம்பதிகளுக்குள்ள கருத்து வேறுபாடு ஏறபட்டு பிரிந்து போய்விட்டார்.

சுவாதியின் அக்கா நித்யா மறுமணம் செய்வதற்கான வேலைகள் நடந்து கொண்டிருந்ததால் "அக்காவோட திருமணத்திற்குப் பிறகு தான் என்னோட திருமணம் என்று சொல்லிக்கிட்டிருந்தார் சுவாதி. நல்லா வாழணும்ங்கிறதுக்காகத் தான் சுவாதியும் நித்யாவும் சேர்ந்து இ.எம்.ஐ. மூலமா புதுசா ப்ளாட் வாங்கியிருக்காங்க.

ஆனா, அந்த வீட்டுல வாழக்கூட முடியாமப்போச்சு சுவாதியால் . பிலாலிடம் சுவாதி காட்டிய நட்பையே கோபாலகிருஷ்ணன் சந்தேகப்பட்ட நேரத்தில்தான், சுவாதி கோயிலுக்கு செல்லும் வழியல் உள்ள தொடர்மாடியில் தங்கியிருக்கும் ராம்குமார் தனது காதலை வெளிப்படுத்தியிருக்கிறான்.

ராம்குமாருக்கும் சுவாதிக்கும் முகப்புப்புத்தக நட்புதான் மாமு, மச்சான்னு கலாய்க்கிறது வழமைதானே. அதை காதல் என்று நினைத்துக் கொண்டு நேரில் காதலை சொல்லியிருக்கிறான். நட்பா பழகியதை காதல் என எடுத்துக் கொண்ட ராம்குமாரை சுவாதி திட்டியிருக்கிறார்.

அதுக்காக இப்படிக் கொலை செய்கிற அளவுக்கு போவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. சுவாதியை ராம்குமார் பின் தொடர்வது, சுவாதி தன்கூட படித்தவனுடன் கொண்டிருந்த நட்பு இதெல்லாம் ஊடகங்களில் தவறாக பரவிவிடுமோ என்கிற பயத்தில் தான் பொலிஸிடம் சுவாதி தந்தை வாய்திறக்காமல் இருந்தார்.

அவர்கள் வாய் திறந்தால் கொலையாளியை எப்பவோ பிடிச்சிருக்கலாம். ஆனால் பெண்ணை பெற்றவராச்சே... சமூகத்துக்குப் பயந்துதானே வாழணும்" என்கிறார்கள். முகப் புத்தகத்தை இளைய தலைமுறை கையாளும் விதத்தினால், ஓர் இளம் பெண்ணின் உயிர் அநியாயமாகப்பறிக்கப்பட்டுள்ளது. ஓர் இளைஞன் கொடூர கொலைகாரனாகியுள்ளான்.

## அடக்கி வாசித்த அதிகாரி

ராம்குமாரை சொந்த ஊரில் பொலிஸார் கைது செய்த பிறகு, சென்னையில பத்திரிகையாளர்களை சந்தித்த பொலிஸ் அதிகாரி டி.கே. ராஜேந்திரன், இந்த வழக்கில் ஒரே குற்றவாளி ராம்குமார்தான். அவனைப் பிடித்து விடடோம் என்றவர், சுவாதி மீது ராம்குமார் ஒருதலைக்காதல் கொண்டிருந்ததாகவும், சுவாதி ஏற்காததால் கொலை நடந்திருக்கும் என்றும் சொன்ன அதிகாரியிடம் ராம்குமார் ஒருதலையாகக் காதலித்ததற்கான ஆதாரங்கள் இருக்கிறதா என்று ஊடகங்கள் கேட்க, பொலிஸ அதிகாரியோ விசாரணைக்கட்டத்தில் எதையும் வெளியிடமுடியாது என அடக்கி வாசித்தார்.

கொலை செய்துவிட்டு ராம்குமார் மோட்டார் சைக்கிளில் ஒருவருடன் செல்வது போன்று பொலிஸ் வெளியிட்ட சி.சி. டி.வி. காட்சியை சுட்டிக்காட்டி, ராம்குமாரோடு மோட்டார் சைக்கிளில் சென்றது யார்? ராம்குமார் வேறு யாருக்காகவோ சுவாதியைக் கொல்ல கூலிப்படையாக பயன்படுத்தப்பட்டாரா? என சரமாரியாக செய்தியாளர்கள கேட்டதற்கு பொலிஸ் அளித்த வளக்க நோட்டீஸை படியுங்கள் என ஒரே வார்த்தையில் முடித்துக்கொண்டார் அதிகாரி .

(தொடரும்...)

பிரார்த்தனை, தியானம், ஆன்மிகம் எல்லாம் பிரபஞ்சத்துடன் எமக்கிருக்கும் தொடர்பை அறிந்து கொள்ளவே. – சுவாமி சிவாநந்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நேற்று அவருக்கு குடமுழுக்கு இன்று இவருக்கு பாலஸ்தாபனம்

திரைப்படங்கள் எல்லாம் தரக்குறைவானவை என்று நாங்கள் யாரும் மதிப்பிட்டு விடக்கூடாது. சில திரைப்படங்கள் சமூகத்துக்கு நல்ல செய்திகளைக் கூறுகின்றன. இதனால் திரைப்படங்கள் கூட சமுதாயத்துக்கு வழிகாட்டியாக அமைகிறது என்று கூறுவதில் தவறில்லை.

இந்த வகையில் **பாகுபலி** என்றொரு திரைப்படம் வெளிவந்திருப்பதை பலரும் அறிந்திருப்பர். நடிப்பு; கதையின் அமைப்பு; சிவப்பரம்பொருளின் உருவகிப்பு என எல்லாமும் பார்ப்போர் மனதை ஈர்க்கும்.

அந்தப் படத்தில் ஒரு துறவி பேசுவதான கட்டம், **சிவன் என் நினைக்கிறாரோ யாருக்குத் தெரியும்!** என்று அந்தத் துறவி கூறிக்கொள்வார்.

அவர் கூறும் வார்த்தை சாதாரணமானதன்று. அதற்குள் நிறைந்த தத்துவம் உள்ளது.

எதுவாயினும் பாகுபலி என்ற படத்தில் சிவனுக்கான அபிஷேகமானது, கங்கை நீர் கொண்டு ஒரு பெண்ணினால் செய்யப்படுகிறது.

இஃது பெண்களும் சிவனுக்கு அபிஷேகம் செய்யலாம் என்பதை சுட்டிக்காட்டுவதாக நம் சிற்றறிவு சிந்தித்துக் கொள்கிறது.

இவையெல்லாம் திரைப்படத்தில் மட்டும் தானா? நம் மண்ணில் நிஜமாக நடக்கவே மாட்டாதா? என்று ஏங்கிக்கொண்டபோது, இணுவில் பதியில் நிர்மாணிக்கப்பட்ட ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்றைய ஆனி உத்தரத்தினத்தில் மகா குடமுழுக்கு நடைபெற்றது.

மிகப் பிரமாண்டமான லிங்கேஸ்வரர், கூடவே இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் இந்த பிரமாண்டமான சிவலிங்கத்தை தாங்கி நிற்பதான வடிவமைப்பு என்பன இலங்கைத் திருமண் சிவ பூமி என்பதை நிரூபிப்பதாக அமைந்திருந்தது.

இவை எல்லாவற்றையும் கடந்து தமிழில் – திருமுறை ஓதி சிவப்பரம்பொருள் மீது அளவு கடந்த அன்பு கொண்ட உள்ளங்கள் திருக்குடமுழுக்கை நடத்தி வைத்தமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்ட ஈழத் திருநாட்டில் மதமாற்றங்களும், ஆக்கிரமிப்புக்களும் மோசமாக அரங்கேறிவரும் இந்நேரத்தில், இணுவையம்பதியில் ஞானலிங்கேஸ்வரர் கோயில் கொண்டெழுந்தமை, சைவம் இனித் தழைத்தோங்கும் என்பதைச் சான்றுபடுத்துகிறது என்று மனங் கொள்ளலாம்.

இதுதவிர பக்தர்கள் யாவரும் தாமே சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்யவும் பூஜை வழிபாடாற்றவும் வழிசமைக்கப்பட்டுள்ளமை ஒரு புரட்சிகரமான விடயம் என்பதை சுட்டிக்காட்டுவது கட்டாயமானது.

இன்று இருக்கக் கூடிய சூழ்நிலையில் திருவிழாக்கள் செய்வதால் ஏற்படக்கூடிய செலவுகள், பூஜை வழிபாடுகளை ஆற்றுகின்றவர்களின் ஆசாரங்கள் எல்லாமும் வியாபாரம் என்பதான சூழ்நிலையின் மத்தியில், இறை நம்பிக்கை வேரறுந்து போய்விடுமே என்ற ஏக்கம் தலைதூக்கிய நேரத்தில்,

அடியவர்களே சிவ ஆராதனை செய்ய முடியும் என்ற புரட்சியை ஏற்படுத்தியவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

அதேவேளை இந்த முன்னெடுக்கை எல்லா ஆலயங்களிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த சைவ சமயம் விழிப்படைந்து மதமாற்றத்தை தடுத்தல் என்பது தொடர்பிலும் அதிரடி நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய வாய்ப்பு உருவாகும்.

எது எவ்வாறாயினும் இணுவில் ஞானலிங்கேஸ்வரப் பெருமானுக்கு நேற்று திருக்குடமுழுக்கு நடத்த, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வீற்றிருக்கும் பார்வதி – பரமேஸ்வரப் பெருமானுக்கு பாலஸ்தாபனம் நடப்பது சிவன் எதை நினைத்தானோ அது நடக்கத் தலைப்பட்டுவிட்டது என்ற பாகுபலி படத்தின் வாசகத்தை ஞாபகப்படுத்துகிறது.

## இராணுவ ஹெலிகொப்டரை சுட்டுவீழ்த்திய தீவிரவாதிகள்

சிரியாவில் ரஷ்ய இராணுவ ஹெலிகொப்டரை ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தியதில் 2 விமானிகள் பலியாகினர்.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் போரிட்டு வருகின்றன. இந்த நிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் ரஷ்யாவும் தீவிரவாதிகளுக்கு எதிரான குண்டுவீச்சு தாக்குதலில் இறங்கியது.

ரஷ்யாவின் போர் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தீவிரவாதிகளுக்கு எதிரான குண்டு வீச்சுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஹோம்ஸ் நகரம் அருகே ரஷ்ய ராணுவ ஹெலிகொப்டரை ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தினர். இத்தாக்குதலில் அதில் பயணம் செய்த 2 விமானிகளும் உயிரிழந்தனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்த பழங்கால சிறப்புமிக்க பல்மைரா நகரம் ரஷ்யா உதவியுடன் மீண்டும் கைப்பற்றப்பட்டது. ஆனால் கிழக்கு பகுதி இன்னும் மீட்கப்படாமல் உள்ளது. எனவே அங்கு தீவிரவாதிகளுக்கு எதிராக குண்டு வீசப்படுகிறது.

இந்த குண்டுவீச்சில் ஈடுபட்டுள்ள விமானங்களுக்கு தேவையான ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு ரஷ்யாவின் 'எம்.ஐ.25' ரக ஹெலிகொப்டர் புறப்பட்டு சென்றது. அதை ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தியதாக சிரியா அரசு தெரிவித்துள்ளது. (இ-5)

மண்சரிவில் சிக்குண்டு

## வீடுகளை இழந்தவர்களுக்கு 16 இலட்சம் ரூபாய் நிதியுதவி

(கொழும்பு)

மண்சரிவினால் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகள் அமைக்க அல்லது நிலங்களை கொள்வனவு செய்வதற்காக 16 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன் மண்சரிவின காரணமாக அனர்த்த முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் அரசாங்கத்தினால் குறைபாடுகள் இன்றி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது நிறுவன அமைச்சர் கபீர் ஹாசீம் இதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த மாதங்களில் அதிக மழையுடனான காலநிலையினை அடுத்து மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள இடங்களில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். தற்போது குறித்த பகுதிகளில் கட்டிட ஆய்வு நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆய்வுகளின் பின்னர் அப்பகுதிகளில் மக்கள் மீள குடியமர்த்தப்படுவார்கள்.

அதேவேளை குறித்த மண்சரிவு அனர்த்தத்தினால வீடுகளை இழந்தவர்களுக்கு இடங்கள் கொள்வனவிற்காக 4 இலட்சமும், வீடுகளை அமைப்பதற்கு 12 இலட்சமும வழங்கப்படவுள்ளது.அத்துடன், வீடுகளை நிர்மாணிக்கும் பணிகளில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும் என அமைச்சர் கபீர் ஹாசீம் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## கருத்துக்களத்தை ஆரம்பிக்கும் கோத்தா

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் அறிவார்ந்த வழிகாட்டி என்ற கருத்துக்கள நிகழ்வு ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சமகால பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ள, இந்நடவடிக்கையானது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளதாக கோத்தபாய தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

மேலும் குறித்த கருத்துக்களம் நடைபெறவுள்ள பிரதேசங்களின் சமய தலைவர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், தொழில் வல்லுநர்கள் ஆகியோரும் பங்குபற்றும் வகையில் இது அமையவுள்ளது.

எனினும், இந்நிகழ்வில் அரசியல் சார்ந்தவர்கள் எவருக்கும் அழைப்பு விடுக்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை மணி வரை யாழ் பிரதேசத்தில பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், புறாப் பொறுக்கி, உடுப்பிட்டி VC, நாச்சிமார் கோவிலடி, எள்ளங்குளம், இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதிதாசன், கம்பரமலை, பழைய பொலிஸ் நிலையம், வல் வெட்டித்துறை, உடுப்பிட்டி வாசிகசாலை, வல்லை வீதி, பொக்கணை, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை அண்ணா சிலையடி, மண்டான் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆதிவிநாயகர் கோவில் பிரதேசத்திலும் **மன்னார் பிரதேசத்தில** வட்டுப்பித்தன் மடுவிலிருந்து புதுக்காமம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## 12 நாட்கள் சண்டைக்கு பின்னர் சிரியாவில் முக்கிய நகரம் மீட்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் 5 ஆண்டுகளாக ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சி நடநது வருகிறது. கடந்த பெப்ரவரி மாதம் கடைசியில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, அங்கு அமுலுக்கு வநதுள்ள போதிலும், அதை மீறி ஜனாதிபதி ஆதரவு படைகளும், கிளர்ச்சியாளர்களின் படைகளும் மோதி வருகின் றன.

இந்த நிலையில், அங்கு கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள பகுதிகளுக்கு பொருட்களை பரிமாறுகிற தடத்தில், டமாஸ்கஸ் நகருக்கு கிழக்கில் அமைந்துள்ள மேடா என்ற நகரத்தை மீட்பதற்காக போர் நடந்து வந்தது.

கடந்த 12 நாட்களாக கிளர் ச்சியாளர்கள் படைகளுக்கும், ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கும் இடையே நடந்து வந்த இந்த போர், சிரிய படைகளுக்கு ஆதர வாக அமைந்தது. அந்த நகரை சிரிய படைகள் மீட்டு விட்டன.

மேடா நகரத்தை பொறுத்தமட்டில், அது முழுக்க முழுக்க ஜெய்ஷ் இ இஸ்லாம் என்ற கிளர்ச்சியாளர்கள் வசம் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நகரை சிரியா படைகள் மீட்டிருப்பது முக்கிய வெற்றியாக கருதப்படுகிறது. (இ-5)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்திரம் திருவருள் மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹர புத்ர ஐயப்ப சுவாமி ஆலய மஹோற்சவம் எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பூஜைகள் இடம் பெற்று 11 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவம் இடம்பெறும்.. (இ)

## கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்தில் அமைக்கவேண்டாம் எனக்கோரி இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை விவசாயக் கல்லூரிக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்படி கல்லூரி மாணவர் ஒன்றியமும் கல்லூரியில் இருந்து படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்கள் ஆகியோர் இணைந்து நடத்தவுள்ளனர்.

விவசாயக் காணிகளை வேறு தேவைகளுக்கு பயன்படுத்தவேண்டாம் எனக் கோரியே இப்போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வினையும் பயனும்



நம் முன்னோர்கள் நல்லது கெட்டது என்பதைத் தீர்மானித்துச் சிலவற்றைச் செய்யலாம், சிலவற்றைச் செய்யக் கூடாது என்னும் முறையிலே அனுமதி கொடுத்தும், தடைவிதித்தும் வந்துள்ளார்கள். அவைகளெல்லாம் அந்தக் காலத்தை ஒட்டிய வாழ்க்கை முறைக்குப் பொறுத்தமாக இருந்திருக்கும். நாம் இன்னும் அதிகமாக, ஆழமாகப் போனால் அந்தக் காலத்தில், "இதைச் செய், அதைச் செய்யாதே" என்று சொல்வதற்கு அவர்கள் எடுத்துக் கொண்டது "சொர்க்கம்", "நரகம்" என்ற இரண்டு கற்பனைகளே. நல்லவை செய்தால் கடவுள் ஒருவனுக்கு நல்ல இடத்தைக் கொடுப்பான் தீயவை செய்தால் தண்டிப்பான் என்று ஆசை காட்டியும், அச்சுறுத்தியும் நல்லன செய்யவும், தீயன தடுக்கவும், வேண்டிய அளவிற்கு மக்களுக்குப் போதித்து வந்தார்கள். விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெற்றுவரும் இந்தக் காலத்திலே அந்த முறை எவ்வளவு நாட்கள் தொடர்ந்து பயன்படும்?

இன்றைக்கு என்ன வேண்டும் என்றால், "ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு" என்ற இயற்கையின் நியதியை (Law of Nature) மனிதன் உணர்ந்து கொள்ளக்கூடிய அளவிற்கு சிறுவயதிலேயிருந்து படிப்படியாக விளக்கி அந்த உணர்வு ஒவ்வொருவருக்கும் வந்து விட வேண்டும். "இதைச் செய்தால் அதன் விளைவு இதுவாகத் தான் இருக்கும், அந்த விளைவைத் தாங்கிக் கொள்வதற்கு நான் தயாரா? என்ற அளவிற்கு ஒவ்வொருவரும் அவர்களுடைய செயலிலே விளைவாகத் தொக்கி நிற்கக் கூடிய ஒரு உண்மையை, இயற்கை அமைப்பை உணர்ந்து கொள்ளக்கூடிய முறையில் உள்ள கல்விதான் இன்றைக்கு அவசியம். செயலிலேயே விளைவு இருக்கின்றது என்பது தெளிவாகவும், உறுதியாகவும் உணர்ந்து கொள்ளப் பெற்றால் ஒரு ஆசை எழும்போது, அதனை நிறைவேற்றிக் கொள்ளச் செயலில் இறங்கும்போது நல்லது அடைவோம் என்று நன்மை செய்வான், தீமை வரும் என்று அஞ்சி அதைத் தடுத்துக் கொள்வான். இந்த முறையிலே தான் தற்காலத்திற்கு கல்வி முறை அவசியம். "வினையும் பயனும்" என்ற முறையிலே ஒரு தெளிவான பொறுப்புணர்ச்சி ஏற்படுவது இன்று எல்லோருக்கும் அவசியம்.

# ஜெகன் ஹற்றிக் கோல் ஞானமுருகன் அணி வெற்றி



கோல்கணக்கில் வீழ்த்தி, ஹென் றீசியன் சவால் கிண்ணத்தொடரின் இறுதிக்குள் நுழைந்தது ஞான முருகன் அணி.

போட்டி ஆரம்பத்தில் அசத்தல் ஆட்டமாடி 2 கோல்களை போட்ட ஞானமுருகன், தொடர்ந்து சென்யூ ட்ஸ் அணி தமக்குரிய ஆட்டத்தின் மூலம் கோல்போட எடுத்த முயற்சி களை பின்கள வீரர்கள் அற்புதமாக கோலாக்க, ஆட்டம் மேலும் விறுவி றுப்பானது. இறுதியில் ஆட்டத்தை வேகப்படுத்திய ஞானமுருகன் அணி அடுத்தடுத்து இருகோல் களை போட்டு 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஞான முருகன் அணி சார்பாக ஜெகன் 3, சுமன் ஒரு கோலினையும் போட்டனர்.

ஆட்டநாயகனாக ஹற்றிக் கோல் அடித்து அசத்திய ஜெகன் தெரிவு



ஜெகனின் அதிரடி ஹற்றிக் கோல்கள் மூலம் முல்லைத்தீவு சென்யூட்ஸ் அணியை 4:1 என்ற தடுத்தனர். இருப்பினும் இரண் டாம் பாதியில் கிடைத்த பனால்டி உதையினை சென்யூட்ஸ் வீரர் செய்யப்பட்டார். இறுதிப்போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியுடன் மோத வுள்ளது ஞானமுருகன் அணி. (க)

# மகேசன் அணியை வீழ்த்தி வல்வை 2 ஆவது சுற்றுக்கு தகுதி



நாவலர் விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் 10 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட "NAVALAR CRICKET FESTIVAL:2016" சுற்றுப் போட்டியில் முதல் போட்டியில் புற்றளை இளைஞர் அணியை ஓர் ஓட்டத்தினால் வெற்றி கொண்ட வல்வை அணி 2 ஆவது சுற்றில் கரவெட்டி மகேசன் அணியுடன் அண்மையில் மோதியது.

மகேசன் அணி 10 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 61 ஓட்டங்கள் பெற்றது. பந்துவீச்சில் வல்வை சார்பில் ஸ்ரீகரன் 3, றொஷான் 2, ஜிவிந்தன் ஒரு விக்கெட்டுகள் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வல்வை அணி 8 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 62 ஓட்டங்கள் பெற்றது. வல்வை அணி சார்பில் துடுப்பாட்டத்தில் மணிமாறன் 23, ருதேஷா 15, ஜிவிந்தன் 10 ஓட்டங்கள் பெற்றனர்.

வல்வை அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக வல்வை அணியின் மணிமாறன் தெரிவானார். (க)

# இன்றைய போட்டி

புத்தூர் வளர்மதி சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கியம் விளையாட்டுக்கழகமும் இரவு 8மணிக்கு நடைபெறும் போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# யாழின் கில்லாடி யார்? புத்தூர் வீனஸ் அணியை வென்றது குருநகர் பாடும்மீன் வி.கழகம்



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தி வருகின்ற சரஸ்வதியின் யாழின் கில்லாடி யார்? உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் நடைபெற்ற காலிறுதியில் புத்தூர் வீனஸ் வி.க. 0:1 கணக்கில் வீழ்த்தி கில்லாடியாக அரையிறுதிக்குள் நுழைந்தது குருநகர் பாடும்மீன் வி.கழகம். (க)

# சைனிங்ஸ் அணியை வீழ்த்தி இளங்கதிர் 20 ஓட்டங்களால் வெற்றி



அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் வி.கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இளங்கதிர் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 118 ஓட்டங்கள் பெற்றது. இளங்கதிர் சார்பில் சிவா 37, கனி 22 ஓட்டங்கள், சைனிங்ஸ் சார்பில் பிரசாந், மேனகாந் தலா 2 விக்கெட்டுகள் கைப்பற்றினர். பதிலு க்கு துடுப்பெடுத்தாடிய சைனிங்ஸ் அணி 19 .5 ஓவர்களில் சகல விக் கெட்டுகளையும் இழந்து 98 ஓட்டங்கள் பெற்றது. சைனிங்ஸ் சார்பில் சுரேன் 16, அன்பழகன் 16 ஓட்டங்கள் பெற்றனர். இளங்கதிர் சார்பில் கனி 3 விக்கெட்டுகள் கைப்பற்றினார். இளங்கதிர் அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (க)

# ஸ்ரீ முருகன் மென்பந்து தொடர் நியூ வேறியர்ஸ் வெற்றி



மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுத்தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் நியூ வேறியர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூ வேறியர்ஸ் 55 ஓட்டங்கள் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய பொற்பதி அணி 53ஓட்டங்கள்மாத்திரமே பெற்றுக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக 25 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டினை கைப்பற்றிய தனுசன் தெரிவானார். (க)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்டரீதியில் பொலிகண்டி பாரதிவிளையாட்டுகழகம் 7 நபர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்டசுற்றுத்தொடரை ஆரம்பிக்கவுள்ளது.

மேற்படி போட்டிக்கு விளையாட்டுக்கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. போட்டிக்கட்டணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

சம்பியன்ஆகும் அணிக்கு50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் மூன்றாம் இடத்தை பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும்.

தொடர் ஆட்டநாயகன், சிறந்த கோல்காப்பாளர், பின்களதடுப்பாட்ட வீரர், நன்னடத்தை அணி என மேலும் பலபரிசில்கள் வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர்தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். தொடர்பு செ.நிறோஜன்-077 407 6069, தீபரமேஸ் -077 217 5544. (க)

# ஆவரங்கால் மத்திய வி.கழகம் நடத்திய துடுப்பாட்ட சுற்றுத்தொடர்



முரசொலி அணி சம்பியன்

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின்இறுதிஆட்டம் அண்மையில்யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் முரசொலி, கோல்ட்ஸ்ரார் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கோல்ட்ஸ்ரார் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 88 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய முரசொலி அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான நிதர்சன், வினோயன் சிறப்பான ஆரம்பமும் காந்தரூபன் (ஜோண்) அதிரடி ஆட்டமும் கைகொடுக்க முரசொலி அணி 5:1 பந்துப்பரிமாற்றத்தில் ஒரு விக்கெட் மாத்திரம் இழந்து இலகுவாக வெற்றி வாகை சூடியது. (க)

# "ஓமந்தை இல்லையெனின் தாண்டிக்குளம்...

கேட்டிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

பொருளாதார மத்திய நிலையம் அமைவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டிருக்கின்ற இழுபறி நிலையை தொடர்ந்து யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பனருமான மாவை சேனாதிராசா, வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை நேற்றைய தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இச்சந்திப்புத் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார மத்திய நிலையம் வவுனியாவில் அமைக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின வாக்குறுதியாக இருக்கின்றது. கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது இதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நாங்களும் அந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்திருந்தோம். எனவே எங்களுக்கு அந்த பொருளாதார நிலையம் வவுனியாவில் அமைக்கப்பட்டு மக்கள் நன்மையடைய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

ஆனால் ஆறு மாதங்கள் கடந்த பின்னரும் ஒரு முடிவில்லாமல் இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது. இறுதியாக பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்த கூட்டமொன்று கட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றிருந்தது. அதில் முடிவுகள் எடுக்கப்படாத நிலையில் மக்கள் பிரதிநிதிகளிடத்தே வாக்கெடுப்பு நடத்துவதென தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய எமது மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. அது எங்களுக்கு மிகவும் கவலையளித்தது. இந்த நேரத்தில் இந்தத் திட்டத்தில் நாங்கள் விரைந்து தீர்மானம் எடுக்க வேண்டும். இதனை நாங்கள் விரைவாகச் செய்யாவிட்டால் இத்திட்டம் கைவிட்டுச் செல்லக் கூடிய நிலைமையும் இருந்தன. இத்திட்டம் கைவிட்டுச் சென்றால் மிகுந்த பாதிப்பு எமது மக்களுக்கு ஏற்படும். அதனால் அதற்கு இடம் கொடுக்க முடியாது.

போரால் பாதிக்கப்பட்டு அழிந்து போயிருக்கின்ற தேசத்தில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வகையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஒரு திட்டத்தை நாம் சரியான முறையில் செயற்படுத்த வேண்டும்.

முதலிலே அதற்கான சூழலை ஆராய வேண்டும். இந்த விடயத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினர் முக்கிய பங்கை வகிக்கின்றனர். இதற்கமைய அவர்களும் நகரத்தை அண்டிய பகுதியில் இருந்தால்தான் இத்திட்டம் வெற்றி பெறுமென்றும் பழைய ஆதாரங்கள் அனுபவங்களைக் கொண்டு அவர்கள் தீர்மானிக்கிறார்கள்.

இதேவேளை இந்த பொருளாதார நிலையம் அமைப்பதற்கு மாணிக்கவளவு, ஓமந்தை, தாண்டிக்குளம் என மூன்று இடங்கள் பரிசீலனைக்கு வந்திருந்தன. இதில் தாண்டிக்குளம் எனும் பிரதேசத்திலே அதிலும் நகரை அண்மித்த பிரதேசத்திலே இந்த மையத்தை நிறுவலாம் என்பது ஒரு பகுதியின் கருத்து மட்டுமல்ல நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆதரவாகவும் இருந்தது. இது பற்றியல்ல இப்பிரச்சினை. தமிழ் மக்களுடைய பிரதேசத்திலே தமிழ் மக்களுக்கு நன்மையை ஏற்படுத்துவதாக அமைய வேண்டுமென்பதே எதிர்பார்ப்பாகும்.

அதேநேரம் இன்னுமொரு தரப்பினர்கள் துறைசார்ந்தவர்கள் ஓமந்தையில் அமைய வேண்டுமென்றும் கருத்துக் கொண்டுள்ளனர். அதுமட்டுமல்லாமல் ஓமந்தை மாங்குளம், தாண்டிக்குளம் என்றெல்லாம் பேசுகின்றனர். இந்த விடயத்தில் ஒரு தீர்மானம் எடுக்கப்படாமல் இருப்பதால்தான் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்றதென்பது உண்மையே.

இந்த விடயத்தில் மாகாண சபைக்கு அந்தப் பொறுப்பு இருக்கின்றது. அந்தக் காணிக்கு கையெழுத்து இட இருப்பவரும் முதலமைச்சர்தான். இறுதி நேரத்தில்தான் இவ்வாறான பல கருத்துக்கள் வெளியே வந்திருக்கின்றன. அதனையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம்.

இவ்விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் கருத்துக்களையும் கேட்டு அறிந்திருக்கின்றேன். இதனால் அந்தப் பிரதேச மக்களிடத்தே ஓமந்தையா, தாண்டிக்குளமா என்று போட்டியும் உருவாகிவிட்டது.அது மட்டும் அல்லாமல் வர்த்தகர்களுக்கும் கமக்காரர்களுக்கும் இடையேயும் இது போட்டியை உருவாக்கிவிட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகளுக்கு நாங்கள் இடமளிக்கக் கூடாது.

ஆனபடியால் ஏ9 பாதையில் ஓமந்தை, மாணிக்கவளவு கிடைத்தால் மிகச் சிறந்தது. அப்படி அது தாமதமாகுமானால் தாண்டிக்குளத்தையாவது இப்பொழுது தெரிவு செய்யுங்கள் என்று முதலமைச்சரிடம் கேட்டிருந்தேன். ஏனெனில் நீங்கள்தான் அதில் கையெழுத்து இடவேண்டும். அந்தக் காணி இப்போது எடுக்க கூடியதாக இருக்கின்றது. அதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் அவர் சொல்லியிருக்கின்றார் ஓமந்தையில் அதனை நிர்மாணிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அத்தோடு நகர அபிவிருத்தி அதிகார சபையினர் தலையிட முடியாதென்றும் அவர் என்னிடம் கூறியிருக்கின்றார். ஆனபடியால் என்னுடைய கருத்தை நான் கூறியிருந்தேன். ஓமந்தையில் ஏதாவது தாமதம் பிரச்சினை இருக்குமானால் நீங்கள் தாண்டிக்குளத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றேன்.

இதனை நான் உடனடியாக எமது கட்சித் தலைவருக்கும் அறிவித்திருக்கின்றேன் என மாவை தனது கருத்தை முதலமைச்சரிடம் வெளிப்படுத்தியுள்ளார். (செ-9)

## மட்டு.சிறைச்சாலை...

போது செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுதல் மற்றும் இடதுசாரி அரசியல் கொள்கையுடைய ஒருவராக விளங்கியமை ஆகிய காரணங்களுக்காக 1971ஆம் ஆண்டு புரட்சியுடன் எந்தவித தொடர்பினையும் கொண்டிராதபோதும் மைத்திரிபால சிறிசேன சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது.

மட்டக்களப்பு விளையாட்டுத் தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று பிற்பகல் கலந்து கொண்ட ஜனாதிபதி தனது இறந்த கால அனுபவங்களை நினைவு கூருமுகமாக மட்டக்களப்பு சிறைச்சாலையில் மேற்பார்வை விஜயம் மேற்கொண்டார்.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஜனாதிபதியுடன் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ)

## நிஷா பிஸ்வால்

இலங்கையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர், அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கு மேற்கொள்ளும் ஐந்தாவது பயணம் இதுவாகும்.

இதன்போது, இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராயவுள்ள அவர், பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்குவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் நாடு திரும்பிய பின்னர், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லாவ்ரோவ் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டவர்களுடன் இருதரப்பு பேச்சுக்களை நடத்தவுள்ள இவர், கொழும்பு புல்லர்ஸ் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட ரஷ்ய தூதரக கட்டடத்தையும் திறந்து வைப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரையடுத்து, ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் நகரானி மற்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியொன் ஆகியோரும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக கூறப்படுகின்றது.

இதனிடையில் மூன்று நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ நேற்று பீஜிங் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு ஆண்டில் மூன்று அல்லது நான்கு உயர்மட்ட பிரமுகர்களின் பயணங்களே இடம்பெறுவது வழமை. ஆனால் அடுத்தடுத்து ஐந்து முக்கிய நாடுகளின் உயர்மட்டப் பிரமுகர்கள் இலங்கை வரவுள்ளனர். இதனால் இலங்கை வெளிவிவகார அமைச்சு கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ)

## யாழ் கலாசார...

வர் அ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராம நாம கானாமிர்தம் இசை வேள்வி இசைப்பேரரங்கின் இறுதி நிகழ்வு நேற்றைய தினம் யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. அதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ் மாவட்டத்தில் கலை கலாசாரத்தை வளர்ப்பதற்கு பாடுபடும் ஏராளமானவர்களை பார்த்தால் ஆச்சரியமாக உள்ளது. யாழ்ப்பாணம் என்பது வட மாகாணத்தின் தலைநகர் மட்டுமல்ல எமது தாய் மொழியான தமிழ் மொழியின் தலைநகரம் என்றுதான் கூற முடியும். கலை, ஆன்மீகம், கலாசாரம் என்பவற்றுக்கு யாழ்ப்பாணம்தான் தலைநகரம் என்று பெருமைப்படக்கூடிய வகையில் கலை கலாசார குடும்பங்கள் இங்கு உள்ளன.

இந்திய அரசு வட மாகாணத்தில் போருக்கு பின் பல்வேறு வகையான அபிவிருத்தி திட்டங்களை செய்து வருகிறது. அபிவிருத்தி பணியில் அடுத்ததாக யாழ் நூலகத்துக்கு அருகில் கலாசார மண்டபத்தை அமைக்கும் வேலைத திட்டத்தை ஓரிரு மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளோம். 2 பில்லியன் ரூபாய் செலவில் பெரிய அளவில் அமைக்கவுள்ளோம். அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பாலியல் இலஞ்சம்...

பிரிவினர், தீவிரவாத தடுப்புப் பிரிவினர் மற்றும் அரசியல் வாதிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில், இவ்வாறு பெறப்பட்ட கையூட்டு பணத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன், பாலியல் கையூட்டு கோரிய அதிகாரிகள் மற்றும அரசியல்வாதிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெண்கள் செயறபாட்டு வலையமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அச்சம் மற்றும் பாதுகாப்பு காரணமாக பாதிக்கப்பட்ட பெண்கள், பொலிஸாரிடமோ அல்லது மனிதவுரிமைகள் அமைப்புக்களிடமோ முறையிடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலைப் பெற்றுக் கொண்ட பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பானது இது குறித்து இலங்கை அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளது என பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு தெரிவித்துள்ளது. (செ)

# போராட்டத்துக்கு வடபகுதி மீன...

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களை தொழிலில் ஈடுபடுத்துவது தொடர்பாக தற்போது இரு நாட்டு அரசாங்கமும் ஆராய்ந்துவரும் நிலையில் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் இதை வன்மையாக கண்டிப்பதுடன் இந்த நடவடிக்கையானது ஒட்டுமொத்தமாக வடக்கில் உள்ள மீனவர்களுடைய பொருளாதாரத்தை பாதிக்கக்கூடிய நடவடிக்கையாகும்.

இது தொடர்பில் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்கள் எம்முடன் பேச்சுவார்த்தையை நடத்தி இது தொடர்பிலான தீர்வினை மேற்கொள்ளவேண்டும். ஒருதலைப் பட்சமாக இவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுமானால் இந்த முடிவுகளையிட்டு நாம் அடுத்த கட்ட நடவடிக்ஷீககளுக்கு செல்லநேரிடும்.

அதாவது வடக்கில் 118 சங்கங்களை உள்ளடக்கிய 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவ குடும்பங்களை கொண்ட பலமான அமைப்பாக நாம் இருக்கிறோம். எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நாம்தான் உறுதியான கருத்தை கூற முடியும்.

எம்முடன் எந்த கலந்தாலோசனையும் மேற்கொள்ளாமல் தெனனிலங்கையில் உள்ள ஒருசில சக்திகள் தமது அரசியல் வியாபாரம் கருதி இங்கு வந்து எமது மக்களை பகடைக்காய்களாக பயன்படுததி தங்களுடைய அரசியல் இலாபத்தை தேட முற்படுகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டதன் காரணமாகத்தான் எமது கடல்வளங்கள் அழிக்கப்படுகின்றன. நாங்கள் பலமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இவர்களது செயற்பாடு தடையாக உள்ளது. பணம் கொடுத்து அவர்களை கூட்டிவந்து திருப்பி அனுப்பும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வட மாகாண கடற்தொழிலாளர் இணையம் என்று சொல்லும் புதிய அமைப்பு ஒன்று தற்போது இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

அதாவது எதிர்ப்பு போராட்டம் என்பது பலமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த போராட்டத்தின் ஊடாக இரண்டு அரசும் தமது போக்கை மறுபரிசீலனை செய்யக் கூடிய அளவு பலமாக இருக்க வேண்டும். ஆனால் இதை மழுங்கடிப்பதற்காக ஒரு சிலரை கூட்டி வந்து போராட்டத்தை முன்னெடுக்க முற்படுகின்றனர்.

இந்த நடவடிக்கை தொடர்பில் யாருடனும் கலந்துரையாடாமல் இவ்வாறான செயற்பாட்டை மேற்கொள்கின்றனர். வடக்கு மீனவர்கள் பொருளாதார ரீதியாக பல கஷ்டங்களை சந்தித்து வருகின்றார்கள் அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை முடக்குவதென்பது கவலைக்குரிய விடயம்.

வடக்கு மீனவர்கள் வழமை போன்று தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். அவர்கள் இப்போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டார்கள்.

நாம் வெகுவிரைவில் பெரிய அளவிலான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம். அது தொடர்பில் அனைத்து சங்கங்களுடனும் எதிர்வரும் 16ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளோம்.

அதன் பின்னர் இரு அரசுக்கும் எதிராக பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம். அதற்கு முன்னர் கடற்பகுதியில் மீன்பிடிப்பதால் உள்ள பாதிப்பு தொடர்பாக விரிவாக இந்திய மத்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் வருகின்ற வெள்ளிக்கிழமை கடிதம் ஒன்றினை அனுப்பவுள்ளோம்.

வடக்கு மீனவர்களை வைத்து அரசியல் நடத்த முற்படுகின்ற தென்னிலங்கை தீயசக்திகள் தமது செயற்பாடுகளை இதனுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். வடக்கில் தமது அரசியல் நடவடிக்கைகளை கைவிட்டு தெற்கில் தமது நடவடிக்கைகளை செய்வது பொருத்தமாக இருக்கும்.

அத்துடன்வடமாகாண சபையை முடக்குவதாலோ அதை முற்றுகையிடுவதாலோ எமது பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. இந்திய தூதரகத்தை முற்றுகையிட்டால் எமது ஆதரவை கொடுத்திருப்போம். அதைவிடுத்து இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கு கொடுகதும் அழுத்தங்களை தணிப்பதற்கான செயற்பாடாகத்தான் இது அமைகிறது.

எனவே தான்தோன்றித்தனமாக பொதுமக்களை குழப்பும் செயற்பாட்டில் ஈடுபடும் தீயசக்திகளின் நடவடிக்கைகளுக்கு இடமளிக்க மாட்டோம். அத்துடன் நாளை 12ஆம் திகதி மீனவர்களின வழமையான செயற்பாடுகள் அனைத்தும் நடைபெறும் என சம்மேளனத்தினர் மேலும் தெரிவித்தனர். (செ-9)

## மத்திய வங்கிக்கு...

இலங்கை மத்திய வங்கி தற்போது மேற்கொண்டு வரும் வங்கி கண்காணிப்பு நடவடிக்கைகள் உட்பட சில பொறுப்புகளை வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இது குறித்து மேலும் கலந்துரையாடி நாணய நிதி சபையை ஸ்தாபிப்பது குறித்து இறுதி முடிவை எடுக்க உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## வேலை ஆட்கள் தேவை

சைவ உணவகத்திற்கு வேலை ஆட்கள் தேவை

- ரீமேக்கர்
- உணவு பரிமாறுபவர்
- ரொட்டி தயாரிப்பாளர்

தொடர்புகளுக்கு :- 0766228879

(C-5164)


# இணுவில் ஞானலிங்கேஸ்வரருக்கு...

முழுக்கு நடததப்பட்டது.

வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் இருந்து வருகை தந்த பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் அரோகரா ஒலி வானைப்பிளக்க ஞானலிங்கேஸ்வரருக்கு தமிழ் அருட்சுனைஞர்கள் திருக்குடமுழுக்கை நடத்தி வைத்தனர்.

ஆலயங்களில் மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியான தமிழில் பூசைகள் இடம்பெறவேண்டும் என்று சைவ நெறிக்கூடமும் சைவ மகா சபையும் நீண்டகாலமாக வலியுறுத்தி வருவதோடு அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த பெருமுயற்சியின் பயனாக சைவ நெறிக்கூடம் மேற்படி ஆலயத்தை கட்டியெழுப்பி நேற்று திருக்குடமுழுக்கை நடத்தியிருக்கின்றது.

ஐந்து தளக் கோபுரத்துடன் அமைக்கப்பட்ட மேற்படி ஆலயத்தில் சுவிஸ் ஞானலிங்கேஸ்வரர் ஆலய பிரதம அருட்சுனைஞரும் இணுவிலைச் சேர்ந்த வருமான திருநெறிய சிவரிஷி தர்மலிங்கம் சசிக்குமார் தலைமையிலான 108 அருட்சுனையர்கள் செந்தமிழ் திருக்குடமுழுக்கு விழாவை நடத்தினர்.

இந்த திருக்குடமுழுக்கு விழாவிற்கு முன்னதாக நேற்றுக் காலை 7.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதேசவரர் ஆலயத்தில் இருந்து இணுவில் ஞானலிங்கேஸ்வரம் வரை பாத யாத்திரை ஒன்று இடம்பெற்றது.

சைவநெறிக்கூடம், சிவஞானசித்தர்பீடம் என்பவற்றுடன் இணைந்து சைவ மகா சபை ஏற்பாடு செய்த இந்தப் பாத யாத்திரையில் வடக்கு, கிழக்கு பிராந்தியங்களிலஇருந்துவருகை தந்த பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் கலந்துகொண்டனர்.

பாத யாத்திரையில் பங்கெடுத்த அடியவர்கள் பாற்குடங்களை ஏந்திவந்து இணுவில் ஞானலிங்கேஸ்வரருக்கு தமது கைகளாலேயே அபிசேகம் செய்தனர்.

ஆலயத்திற்கு நேர் முன்னிலையில் நடப்பட்ட கம்பங்களில் சேர, சோழ, பாண்டிய மனனர்கள பயன்படுத்திய தனித்தனிக் கொடிகள, சைவநெறிக்கூடத்தின் கொடி மற்றும் நந்திக்கொடி என்பன ஏற்றப்பட்டன. இதன பின்னரே கலசங்களுக்கு கும்பநீர் ஊற்றப்பட்டது.

மேற்படிக் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு சைவ மகா சபை யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிராந்தியங்களில் மாணவர்களுக்கிடையே நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு நேற்றைய தினம் ஆலயத்தில் வைத்து பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

இந்த செந்தமிழ் திருக்குடமுழுக்கு விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாசார்ய சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளாா, வேதாந்த மட குரு பீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்தியா சாகரர் சுவாமிகள், யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆர்.நடராஜன் மற்றும் பௌத்தபிக்குகள், சுவிஸ் நாட்டின் முன்னாள் அமைச்சர் ஒருவர் உள்ளிட்ட வெள்ளை இனத்தவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


## வேலை ஆட்கள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை (பாஸ் வேலை)

புதிய துர்க்கா வெதுப்பகம்
கலைவாணிலேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (5187)



## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கருத்தரங்கு

ஊடகவியல்
MEDIA

ஆசிரியர் : N.கஜிதரன்
(B.A (Hons), Spl.in.Media Studies)

ஆரம்பம் : நாளைமுதல் 12,13,14,15 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் 1 மணிவரை

தொடர்புகளுக்கு :
075 9160 431, 077 3956158

(C-5162)



## கருத்தரங்கு

A/L - 2016

அரசியல் விஞ்ஞானம்
ஆசிரியர் திரு. N.பாபு

செவ்வாய் 12.07.2016 (நாளை)
காலை 8 மணி முதல் மாலை
4 மணி வரை

(5176)

- கையேடுகள் வழங்கப்படும்
- வெளிமாணவர்களும் பங்கு பற்றலாம்

இடம் :- யூனிவேர்சல்
யாழ்/இந்து மகளிர் அருகாமை



## A/L - 2016

“புவியியல் கருத்தரங்கு”

ஆசிரியர் - N.BABU

யூலை - 16, 17, 19ஆம் திகதிகளில்

- ஆரம்பம் - 16.07.2016
  சனி - 12 மணி
- வெளிமாணவர்களுக்கு
  அனுமதி வழங்கப்படும்

DMI - ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (ஆரியகுளம் அருகில்)

(5186)



திறமைச்சித்திக்கு வழிகாட்டும்

## LOGIC

FINAL SEMINAR

13,14,15
ஆம் திகதிகளில்

(8 மணிமுதல் 11 மணிவரை)

- 2016 மாணவர்களுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ‘EASY LOGIC’ பயிற்சி நூல் மூலம் கருத் தரங்கு நடைபெறும்.

BEACON
வெலிங்டன் சந்தியடி, யாழ் நகர்

(5195)



## உங்களது இலக்கு வெளிநாட்டில் கல்வி ஒன்றை தொடர்வதா..????



**There is an Opportunity To Study In Newzeland**

உலகலாவிய ரீதியில் அதிகளவான வேலை வாய்ப்பினை பெற்றுத்தரக் கூடிய கற்கை நெறிகளான விருந்தோம்பல் முகாமைத்துவம் (Hospitality Management) மற்றும் வியாபார முகாமைத்துவம் (Business Management) என்பவற்றை நியூசிலாந்தில் தொடர்வதற்கு இலகுவான சந்தர்ப்பத்தை நாம் வழங்குகின்றோம்.

- வாரமொன்றில் 20 மணித்தியாலங்கள் பகுதி நேர வேலை
- மணித்தியாலம் ஒன்றிற்கு 14 நியூசிலாந்து டொலர்கள் (**NZD 14**).
- கற்கை நெறி முடிவில் நியூசிலாந்து குடியுரிமை (**Newzeland PR**) பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.

- எமது அனைத்து சேவைகளும் இலவசம்.
- **IELTS** பரீட்சைக்கான வழிகாட்டலும் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு
076 826 8211

SAS
Student Admission Services

Support Centers
Colombo : No 35 Uppatissa Road, Colombo-04
Jaffna : No 249-2/1 K.K.S Road, Jaffna.

(C-5157)



## வட இந்திய காசி யாத்திரை

ஆரம்பம்: 06.08.2016 நாள்கள்: 19 யாத்திரிகர்: 15 பேர்

செல்லுமிடங்கள்: டெல்லி அட்ஷயதாம் நாராயணர் கோயில் உட்பட சுற்றிப் பார்த்தல், ஆக்ரா தாஜ்மஹால் செங்கோட்டை பார்த்தல். அலகாபாத் திருவேணி சங்கமம், புனித நீராடல். ஹரித்துவார் சுற்றிப் பார்த்தல், கங்காபூசை தரிசனம். ரிஷிகேஸ் தொங்குபாலம் உட்பட சுற்றிப் பார்த்தல் சிவானந்த ஆச்சிரமம் உட்பட குருச்சேத்திரம் பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம். வேறு இடங்களும் பார்த்தல், சீத்தாமடி காசியில் 3 நாள்கள் 15 இடங்கள் பார்த்தல். கங்காபூசை, காசிவிஸ்வநாதர், அன்னபூரணி உட்பட மதுரா கிருஷ்ணஜென்ம பூமி இராமேஸ்வரம், மதுரை, திருப்புலானி, நவபாஷாணம், உத்திரகோச மங்கை, திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்காபுரம், காளகஸ்திரி உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை

பயணம் 5 விமானம் வரும் மற்றைய பயணம் A.C பஸ், உணவு மடப்பள்ளி சமையல் ஆள்கள் சமைத்த மூன்றுவேளை உணவு, ஒரு நாளைக்கு ஒரு லீற்றர் குடிநீர், சுகாதாரமான 2 பேருக்கு ஒரு குளியலறை இணைந்த அறைகள், காலை, மாலை காப்பி, ரீ உட்பட விருப்பமுடையவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். மடப்பள்ளி சமையல் ஆட்கள் சமைப்பதால் கோயில்களில் பணிபுரிவோரும் தயக்கமின்றி கலந்து கொள்ளலாம். விபரம் கேட்டறிந்து பதிவு செய்யவும். வயதானவர்கள் பாதுகாப்புடன் அழைத்துச் சென்று அழைத்து வரப்படுவார்கள்.

மேலதிக விபரங்களுக்கு: கலாநிதி ஸ்ரீரெங்கநாதன் (மகன் ராஜன்)
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே: 077 768 0102, 077 736 2154
Facebook:sridevisriranganathan.thuraiappa

(C-5120)


## மங்கள...

யில்லாப் பிரேரணையைக் கொண்டுவர எதிர்பார்த்துள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கைக்கு அழைக்க முடியாது என ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ள நிலையில் மங்கள சமரவீர மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே வருங்காலத்தில் வெளிவிவகார அமைச்சருக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவர முடியுமா என்பது குறித்து ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)


## உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள் பொதிகள் சேவை



- 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
- மிகக்குறைந்த கட்டணம்
- அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள், கருவாடு, பழவகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள் என்பவற்றை அனுப்பிடலாம் (நிபந்தனைக்குட்பட்டது)
- 11kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgக்கான கட்டணம்
  UK-600/=, Germany 650/=, France 700/=, Swiss 800/=, Australia 900/=

திருமுருகன் கொம் நெற்
271A, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7835

கிளைகள்:
46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
18, பிரதான வீதி நெல்லியடி.
பிரதான வீதி பருத்தித்துறை. பிரதான வீதி சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)

(5183)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.